

# முத்தெழில்

பிரதேச பண்பாட்டுப் பேரவை
ஒட்டுசுட்டான்
2016

# முத்தெழில்

## பிரதேச பண்பாட்டு விழா மலர்

## 2016

### இதழ் - 04


மலராசிரியர்

திரு. ச. தில்லையம்பலம்

(ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் - ஒட்டுசுட்டான்)

உதவி மலராசிரியர்

செல்வி. இ. கிருஷாந்தி

(கலாசார உத்தியோகத்தர் - ஒட்டுசுட்டான்

செயலாளர் - பிரதேச பண்பாட்டுப் பேரவை ஒட்டுசுட்டான்)



*ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டுப் பேரவை*

*ஒட்டுசுட்டான்,*

*முல்லைத்தீவு.*

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மறந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே

ஏழ் கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே

(வாழ்க)

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை அகன்றிட
சுடர்க தமிழ் நாடே

(வாழ்க)

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மறந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே

பிரதேச பண்பாட்டுப் பேரவை

ஒட்டுசுட்டான்

# ஒட்டுசுட்டான் பிரதேச கீதம்

இராகம் - சாருகேசி　　　　　　　　　　　　　　தாளம் - ஆதி

**பல்லவி**

வளம் கொழிக்கும் பூமி எங்கள் ஒட்டுசுட்டான் வாழ்கவே
தான் தோன்றி ஈசன் வாழும் தரணி என்றும் வாழ்கவே

**அனுபல்லவி**

பண்பாடு ஊற்றெடுத்துப் பாய்ந்து வரும் பொன்னிலம்
பண்டார வன்னியனின் பாதம் பட்ட செந்நிலம்

- வளம்

**சரணம்**

பழனம் எங்கும் கொண்டாடிப் பறவை பண்பாடிடும்
சாலி இனம் தலை குனிந்து நிலமைகளைக் கொஞ்சிடும்
முற்றம் எங்கும் தானியங்கள் முளைத்து விளைவு தந்திட
முத்தையன்கட்டுக்குளம் முழுவளமும் நல்கிடும்

- வளம்

செந்தமிழும் கலைவளமும் ஒன்றி நின்றும் வளர்ந்திடும்
வந்தவரை வாழவைக்கும் எங்கள் ஊர் உயர்ந்திடும்
பந்தம் கொண்ட கறவையினம் பசும்பாலை பொழிந்திட
கந்தம் தந்த வனமெல்லாம் தென்றலிசை பாடவே

- வளம்

எம்மதமும், எம்மதமாய் சமசரத்தைப் பேணி நாம்
வாழ வழி தந்த அன்னை வாழ்ந்திடவே நிரந்தரம்
கானகத்து நறை சிந்தக் களிப்புடனே வாழ்கவே
வளம் செழிக்கும் பூமி எங்கள் ஒட்டுசுட்டான் வாழ்கவே

*ஆக்கம்*
**வீரசிங்கம் பிரதீபன்**
**பதில் கலாசார உத்தியோகத்தர்**

*இசை*
**சி. பிரதீபன்**
**இசை ஆசிரியர்**
**கற்சிலைமடு அ.த.க. பாடசாலை**

# வன்னிவளம்

இராகம் - சண்முகப்பிரியா                    தாளம் - ஆதி

**பல்லவி**

வன்னிவளம் காண்பதற்காய் வந்துசேர்வீர் –இந்த
மண்ணின் மணம் மாறாது என்றும் காண்பீர்!
(வன்னி)

**அனுபல்லவி**

வட்டியின்றி வைத்த முதல் தன்னழகுபோல்
வாசமுடன் வாயூறியே நிற்க வைத்திடும்
(வன்னி)

**சரணம்**

வீடுகளில் நிறைந்த பயிர் கொடிகளில் நாம்
விளைந்த உணவருந்திக் களித்திடுவோம்!
பாடுபட்டதாற் கிடைக்கும் பால் தயிர் நெய் மோர்
பசியகற்றி எமதுடம்பிற் பலநலம் சேர்க்கும்
(வன்னி)

நுங்கிளநீர் நுகர்வதனால் எங்களுக்கென்றும்
நூறுமடங்கி பலனே வேறு ஆகுமே!
தங்கமெனும் வாழை பலா மாங்கனிகளே தந்து
தன்னிறைவு கொண்டவளே எங்கள் வன்னித்தாய்!
அமுதப்பனம்பழத்தை ஆசையாய் உண்போம்!
அதன் பிட்டு பணிகாரம் அள்ளிச்சுவைப்போம்!
எமது அன்னை நிலத்தினது இங்கிதமெல்லாம்
என்றும் நெஞ்சில் நிறைந்திருந்து இன்பம் பெருக்கும்.
(வன்னி)

முத்தரிசிப் பொங்கல் நெய்யில் மூழ்கவே வைத்து
முற்றல் கொச்சிப்பச்சடியை தொட்டருந்தினால்
கத்தும் கடல் கடக்கக் காலைவைப்போமா?
காதல் செய்வீர் வன்னி மண்ணைக் காலமெல்லாம்
(வன்னி)

**திரு. க. சிவலிங்கம்**
**(வன்னிக்கண்ணன்)**

# ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டுப் பேரவை
# செயற்குழு உறுப்பினர்கள்

**தலைவர்**

ய. அநிருத்தனன்

(பிரதேச செயலாளர், ஒட்டுசுட்டான்)

**உபதலைவர்**

ச. தில்லையம்பலம்

(ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்)

**செயலாளர்**

இ. கிசாந்தி

(கலாசார உத்தியோகத்தர்)

**உப செயலாளர்**

திரு. சி. வேதவனம்

(பொது முகாமையாளர், முல்லை மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் இணையம்)

**பொருளாளர்**

திரு. சி. நாகேந்திரராஜா

(அதிபர், மு/ முத்தையன்கட்டு வலதுகரை அ.த.க பாடசாலை)

**பேரவை உறுப்பினர்கள்**

திரு. கா. இராசேந்திரம்

(அண்ணாவியார், பண்டாரவன்னியன் கலாமன்றம்)

திரு. க. செல்வராசா

(அண்ணாவியார், பெரியபுளியாங்குளம்)

திரு. சி. மோகனராசா

(இந்து கலாசார உத்தியோகத்தர்)

திருமதி. வே. நித்தியகலா

(அதிபர், மு/ ஒட்டுசுட்டான் இந்து தமிழ் வித்தியாலயம்)

திரு. க. யோகேஸ்வரன்

(அதிபர், மு/ ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்)

திரு. நா. ரஞ்சிதகுமார்

(கிராமசேவை உத்தியோகத்தர், ஒட்டுசுட்டான்)

திரு. செ. செந்தில்நாதன்

(கிராமசேவை உத்தியோகத்தர், அம்பகாமம்)

திரு. வி. உதயச்சந்திரன்

(பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம், ஒட்டுசுட்டான்)

திரு. வே. பிரதீபன்

(ஆசிரியர், மு / ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்)

திரு. சி. செந்தூரன்

(கலைஞர், கற்சிலைமடு)

## உள்ளே புகுமுன் ஒரு வார்த்தை உங்களுடன்...

ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டு பேரவையினால் வெளிவரும் முத்தெழில் இதழ் - 4 வெளிவருவதையிட்டு மலர் ஆசிரியர் என்ற வகையில் பெருமகிழ்வடைகிறேன்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசம் வரலாற்று சிறப்புமிக்க கலை, பண்பாட்டு பாரம்பரியங்களைக் கொண்டு விளங்கும் பிரதேசமாகும். தான்தோன்றீஸ்வரர், திருமுறிகண்டிப் பிள்ளையார் போன்ற தல வரலாற்றுச் சிறப்புக்களையும், முத்தையன்கட்டு பாரிய நீர்தேக்கம் போன்றவற்றோடு, பண்டாரவன்னிய மன்னனின் வரலாற்றினைப் பதிவு செய்வதோடு வாவெட்டி மலை, தட்டயமலை, கெருடமடு போன்ற வரலாற்றுத் தொல்லியங்களுடனும் தொடர்புடையதாகும்.

இம்மலரானது பெரியோரின் செய்திகளோடு சமயம், வரலாறு, அறிவியல், கலை அம்சங்களைக் கொண்டு வெளிவருகின்றது.

**மலர்க்குழு சார்பில்**
**எஸ். தில்லையம்பலம்**
**இதழாசிரியர்**

# முத்தெழில் சஞ்சிகை சிறப்புற மலர்ந்து மணம் வீச எனது நல்லாசிகள்



முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 6 பிரதேச செயலகங்களிலும் ஆண்டு தோறும் கலாசார பேரவையினால் கிராமிய மற்றும் பிரதேசப் பண்பாட்டினைப் பிரதிபலிக்கின்ற கலை நிகழ்வுகளும் அவற்றினை ஆவணப்படுத்துகின்ற நோக்கில் சஞ்சிகைகளும் வெளியிடப்படுவது வழக்கமாகும். அந்த வகையில் இவ்வாண்டும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்படும் முத்தெழில் சஞ்சிகை சிறப்புற வெளிவர எனது இதயபூர்வமான ஆசியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாண்டு முதல் முறையாக மாவட்ட கலாசார விழா முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற இருப்பதால் அதற்கு பிரதேச விழாக்கள் வலுச்சேர்ப்பதாக அமையும் என நம்புகின்றேன். இன்றைய நவீன தொழில்நுட்பங்களோடு போட்டியிட முடியாமலும் நீண்ட நேரம் கலைகளை இரசனை செய்ய முடியாமலும் போவதால் பாரம்பரிய கலைகள் அருகிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

சமயம், வரலாறு, கலை, கலாசார விழுமியங்களைப் பேணிப்பாதுகாக்கும் நோக்கிலும் இலை மறையாக இருக்கும் படைப்பாளிகள் மற்றும் கலை ஆர்வலர்களுக்கு வாய்ப்பளித்து அவர்களின் ஆக்க இலக்கியங்கள் மற்றும் படைப்பாளிகளை வெளிக்கொண்டு வரும் இம் முயற்சிக்கு என்றும் என்னுடைய காத்திரமான பங்களிப்பும் அனுசரணையும் இருக்கும் என்பதை அறியத்தருகின்றேன்.

இம்மலர் சிறப்புற வெளிவர அயராது உழைத்த பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், பண்பாட்டுப் பேரவையினர், மலர்க் குழுவினர் ஆகியோருக்கும் எனது மனப்பூர்வமான பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி றூ. கேதீஸ்வரன்**
மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
முல்லைத்தீவு.

# பண்பாட்டு பேரவைத்தலைவரின் பகிர்வு

நான் ஆறு வருடங்களிற்கு மேலாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராக கடமையாற்றிய காலப்பகுதிகளில் பல்வேறு கலாசார விழாக்களை முன்னின்று வழிநடாத்தியதோடு திணைக்கள வெளியீடாக வரும் இதழ்களையும் ஒழுங்கமைத்து வெளியிட்ட அனுபவம் இருந்த போதிலும் பிரதேச செயலாளராக பொறுப்பேற்ற பின்னர் எனது தலைமையில் வெளிவரும் இரண்டாவது வெளியீடாக முத்தெழில் 04 வெளிவருவதையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன்.

கலை இலக்கியங்கள் காலத்தின் தேவை கருதி தோற்றம் பெறுகின்றன. ஆனால் காலவெள்ளோட்டத்தில் பல அடித்து செல்லப்படுவதும் அவற்றில் உயிரோட்டம் மிக்கவை நிலைத்து நிற்பதும் இயல்பாகும். நவீனயுகத்தின் தேவைகளும் வசதிகளும் வேகமானவை. அவை காட்டாற்று வெள்ளம் போல் தடைகளை தகர்த்துச் செல்லக்கூடியன. இந்த நிலையில் மரபுகளையும் பண்பாட்டு பாரம்பரியங்களையும் கால வெள்ளத்தில் அடியுண்டுபோகாமல் பாதுகாப்பது அனைவரின் கட்டாய கடமையாகும்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தை பொறுத்தவரையில் விவசாயத்தினை பெரிதும் வாழ்வாதாரமாக கொண்ட ஒரு பிரதேசமாகும். ஆனால் தனிப்பட்ட அரசியல், வரலாறு மற்றும் சமய விழுமியங்களை அடையாளப் படுத்துகின்ற பிரதேசமாகவும் விளங்குகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தின் மத்தியபகுதியில் அமைந்திருக்கும் அதிக நிலப்பரப்பினை கொண்ட இப்பிரதேச மக்களின் பண்டைய வாழ்வியலிலும், இன்றைய வாழ்வியலிலும் கலையின் பிடிமானத்தினை உணர்வுபூர்வமாக உணரமுடியும்.

இம்மலரின் உருவாக்கத்தில் என்னுடன் உடன்நின்று உழைத்த எனது செயலக உத்தியோகத்தர்கள், மற்றும் பண்பாட்டு பேரவையினர், இவர்களோடு நூல் வடிவமைப்பில் அற்பணிப்புடன் செயல்ப்பட்ட யாழ்ப்பாண பல்கலைகழக சிரேஸ்ட விரிவுரையாளர் திரு.க.அருந்தாகரன் மற்றும் ஆக்க கர்த்தாக்கள் அனைவரையும் நான் பாராட்டுகின்றேன்.

இவ்வாண்டு "பண்டாரவன்னியன் விருது" என்னும் பெயரில் முதுபெரும் படைப்பாளிகள் மற்றும் கலைஞர்களுக்கு விருது வழங்குவதோடு அவர்களின் தடங்களையும் பதிவு செய்துள்ளோம் இவை அடுத்துவரும் கலைஞர்களை ஊக்குவிக்கும் என நம்புகின்றேன்.

**தலைவர்,**<br>
பண்டபாட்டு பேரவை<br>
பிரதேச செயலகம்,<br>
ஒட்டுசுட்டான்



**திரு. ய. அநிருத்தனன்**

ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டு பேரவை தலைவர், பிரதேசசெயலாளர்

## வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச்செய்தி



ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டு பேரவையால் வருடாந்தம் வெளியிடப்படும் "முத்தெழில்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மலரானது ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் வரலாறு, பண்பாடு, கலைமரபுகள், தொல்லியல், ஆன்மீகம், பிரதேச வழக்காறுகள் மற்றும் பொது விடயங்களை உள்வாங்கி பிரதேசத்தில் வாழ்கின்ற இலக்கிய கர்த்தாக்கள், கல்வியியலாளர்கள், எழுத்தாளர்கள், துறை ஆர்வலர்களின் ஆக்கங்களை தாங்கி வெளிவருவதுடன் சான்றுபடுத்தக்கூடிய ஆவணமாக அமையும் என்பதிலும் ஐயமில்லை.

காலத்தின் தேவையறிந்து முன்னெடுக்கப்படும் இம்முயற்சியானது எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதுடன் பிரதேச அபிவிருத்தியின் முக்கிய பதிவாக இருக்கும் என்பது பேருண்மையாகும். இம்மலரானது தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச் செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் பிரதேச செயலர் கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இ. ரவீந்திரன்**<br>
செயலாளர்,<br>
கல்வி, பண்பாட்டலுவல்கள்,<br>
விளையாட்டுத்துறை மற்றும்<br>
இளைஞர் விவகார அமைச்சு,<br>
வடமாகாணம்.

# முறிகண்டி விநாயகர் துதி

இராகம் - ரேவதி                                        தாளம் - ஆதி

**பல்லவி**

தொழும் அன்பர் குறை தீர்க்கும் நாதா
முறிகண்டிப் பதிவாழும் தேவா

**அனுபல்லவி**

தெருப் பிள்ளையார் என்று போற்ற
உருக் கொண்டு எமைக் காக்கும் சீலா

**சரணம்**

அடவியின் நடுவினிலே அன்று குடி கொண்டவனே
கடந்து செல்லும் அன்பர் வினை கலக்கமின்றிக் காப்பவனே
ஆனைமுக நாயகனே ஐந்து கர வாரணனே
முறிகண்டிப் பதிவாழும் மூத்தவனே கணபதியே

- தொழும் -

முல்லை மண்ணின் எல்லையிலே மூன்று விழியோடமர்ந்தாய்
எல்லை இல்லாக் கருணை மழை எல்லோர்க்கும் - பொழிந்திடுவாய்
சொல்லரிய பாரதத்தை சொல்ல அன்று எழுதியவா
நல்ல ஊரான் சோதரனே நாவினிக்கப் பாடி நின்றோம்

- தொழும் -

யாழ் - கண்டித் தெருவோரம் நலமுடனே அரசாளும்
வாள் கொண்ட வன்னியனின் வழித்தெய்வம் நீயல்லவோ
சூழ்கலிளைத் தீர்ப்பவனே அச்சுதனின் மருமகனே
நாள் எல்லாம் உனைப்பாட நல் அருளைத் தருவாயே                    - தொழும் -


ஆக்கம்
**வீரசிங்கம் பிரதீபன்**
**கலாசார உத்தியோகத்தர் (பதில்)**
**பிரதேச செயலகம்,**
**ஒட்டுசுட்டான்.**

உள்ளே ....


| | | |
|---|---|---|
| 01. | யுத்தத்தின் பின்னா் 'தச்சடம்பன்' பிரதேச மக்கள் எதிா்நோக்கும் பிரச்சினைகளும் அதற்கான தீா்வுகளும் | 1 |
| 02. | ஒட்டுசுட்டான் கோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள் | 7 |
| 03. | தண்டுவான் பாகற்காய்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வரலாறும் அதன் கிராமிய வழிபாட்டு முறைகளும். | 18 |
| 04. | அடங்காப்பற்றின் இறுதி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியன் | 21 |
| 05. | பெருகிவரும் சிறுநீரகச் செயலிழப்பும் கட்டுப்பாடற்ற பரசிற்றமோல் குளிகையின் பாவனையும் | 24 |
| 06. | ஆலய வழிபாடு : ஓர் உளவியல் நோக்கு | 25 |
| 07. | தற்காலத்தில் இந்துசமயமும் ஆலயங்களின் அறப்பணியும் | 28 |
| 08. | சட்ட ஆவணங்களும் பெற்றுக் கொள்ளும் வழிகளும் | 32 |
| 09. | அதிகரித்து வரும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் | 39 |
| 10. | இஸ்லாமும் அறிவியலும் | 45 |
| 11. | தமிழா் நோக்கில் பண்பாடு | 48 |
| 12. | காதினுள் பாயும் நஞ்சு | 50 |
| 13. | இன்றைய நிலையில் நாட்டுப்புற நிகழ்த்து கலைகள் | 54 |
| 14. | நாட்டார் வழக்காற்று மரபுகளைப் பேணிப் பாதுகாப்பதில் கல்வி தீர்க்கமான பங்கினை வகிக்கிறதா? விவாதத்திற்கான ஒரு முன்னுரை | 56 |
| 15. | சைவசமயமும் அருகிவரும் ஆலய வழிபாடும் | 58 |
| 16. | வந்ததே முதுமை | 60 |
| 17. | இசையின் சிறப்பு | 61 |
| 18. | முதுமையின் சவால்களை எதிர்கொள்ளல் | 63 |
| 19. | வாழ்க்கை வட்டச்சடங்குகள் | |
| 20. | புதுக்கவிஞர்க்கோர் விண்ணப்பம் | 73 |
| 21. | சித்த வைத்தியத்தின் சிறப்புக்கள் | 75 |
| 22. | அறிவியல் மொழியாக்கத் தமிழ் | 79 |
| 23. | ஒட்டுசுட்டான் | 81 |
| 24. | மருவிச்செல்லும் தமிழர் பாரம்பரியங்கள் | 82 |

# யுத்தத்தின் பின்னர் 'தச்சடம்பன்' பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவினுள் அடங்கும் ஒரு கிராம அலுவலர் பிரிவாக தச்சடம்பன் பிரதேசம் அமை கிறது. பௌதிக, பொருளாதார, பண்பாட்டு வளமும் தொன்மையும் மிக்கதான இப்பிர தேசம் வன்னியில் தொடர்ச்சியாக நடைபெற்ற யுத்தத்தாலும் இடப்பெயர்வுகளாலும் உள நெருக்கிடிகளாலும் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசமாகக் காணப்படுகிறது. இதனால் சமூக பொருளாதார பண்பாட்டு ரீதியிலான பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. அவற்றை இனங்கண்டு காட்டுவதாகவே இச் சிறுகட்டுரை அமைகிறது.

**பொருளாதாரப் பிரச்சினை**

இப்பிரதேசத்தின் பிரதான பொருளாதார உற்பத்தி நடவடிக்கையாக விவசாயம் உள்ளது. சிறுபோக, பெரும்போக நெல் உற்பத்தி மற்றும் சிறுதானிய உற்பத்தியோடு மிருக வளர்ப்பும் இங்கு சிறப்பாக இடம்பெற்று வந்தது. ஆனால் யுத்தமும் இடப்பெயர்வும் காரணமாக பெரும்பாலான மக்கள் தமது சொந்த நிலங்களை விட்டு இடம்பெயர்ந்தனர். இதனால் இப்பிரதேசம் காடுமண்டிப் போனதுடன் கண்ணிவெடி புதைக்கப்பட்ட நிலமாகவும் உள்ளமையால் முழுமையாக உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளது.

இங்கு வாழ்ந்த அனைத்துக் குடும்பங்களும் ஆடு, மாடு, கோழி முதலியவற்றை பெருமளவு வளர்த்து வந்தனர். யுத்தத்தின்போது அனைத்தையும் இழந்ததுடன் அவற்றை மீளவும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலே இன்றளவும் உள்ளனர். (பெரும்பாலான கால்நடைகள் இராணுவத்தினரின் பிடிக்குள் சிக்கியுள்ளன) மீள்குடியமர்த்தப்பட்ட பின்னர் தொண்டு நிறுவனங்கள் ஆடு, மாடு, கோழி முதலியவற்றை சிறு அளவில் வழங்கிய போதும் அவை நீடித்த பயனைத் தருவதாகவில்லை. வெளிநாடுகளிலிருந்து வேறுபட்ட பௌதிக சூழலிலிருந்தும் இவ்விலங்குகள் கொண்டு வரப்படுகின்றன. இவை இப்பிரதேச சூழலுக்கு தாக்க பிடிக்கமாட்டாது பெரும்பாலனவை இறந்து விடுகின்றன.

அத்தோடு இப்பிரதேசம் காடு சார்ந்த பிரதேசமாக இருப்பதால் வேட்டையாடுதல், தேன் எடுத்தல் மற்றும் காட்டுவிலங்குகளை பிடித்துப் பழக்கி அவற்றை உற்பத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தி வந்தனர். இன்று காடுகளில் இராணுவப் பிரசன்னம் மற்றும் நிலக்கண்ணி வெடிகளின் ஆபத்து என்பவற்றால் இத்தகைய பொருளாதார நடவடிக்கைளில் மக்கள் ஈடுபட முடியாத நிலையுள்ளது.

இவை யாவற்றுக்கும் அப்பால் பெரும்பாலான குடும்பங்கள் குடும்பத்தலைவர்களை இழந்துள்ளமை, பலர் அங்கவீனமாகியுள்ளமை, பலர் காணாமற்போகச் செய்யப்பட்டுள்ளமை உள ரீதியிலான நெருக்கீடுகளுக்குள்ளானமை காரணமாக பொருளாதார உற்பத்தியை மேற் கொள்ள முடியாத நிலையில் எதற்குமே மற்றவர்களைத் தங்கியிருக்கும் பெரும் துயர நிலை நீடித்து காணப்படுகின்றது.

இது மாத்திரமன்றி அனைவரும் வீடிழந்து இருந்தமையால் அரசாங்கத்தினால் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது. ஆனால் அரசு வழங்கிய நிதி முழுமையாக வீட்டை அமைப்பதற்கு போது மானதாக இருக்கவில்லை. இதனால் மக்கள் தம்மிடம் எஞ்சியிருந்த நகை, சொத்துக்களை விற்றும் அடகு வைத்தும் வீட்டைக் கட்டினர். இதனால் இன்று பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். அரை குறையான ஒரு வீடு இருக்கிறது. ஆனால் வாழ்வதற்கு அடிப்படையான பொருளாதாரமோ மனநிம்மதியோ மக்களுக்கு இன்னும் கிட்ட வில்லை.

இது மாத்திரமன்றி வரட்சி, வெள்ளப் பெருக்கு, பருவம் தப்பிப்பெய்யும் மழை, யானை, பன்றி முதலிய வனவிலங்குகளின் தாக்கம், பயிர்களைத் தாக்கும் பீடைகளின் தாக்கம் என்பன இன்று விவசாயிகளின் பொருளாதார நடவடிக்கையை பெரிதும் பாதிக்கின்றன. இதைவிட அசேதனப் பசளைகளின் அதிகரித்த பயன்பாடு, கிருமி மற்றும் களைநாசினிகளின் பிரயோகம், நிலம் உவர்த்தன்மையாகவும் அமிலத்தன்மையாகவும் மாறுதல், நீர் நஞ்சாதல் என்பற்றால் விளைச்சல் நிலம் பாதிக்கப்படுவதோடு உற்பத்தி அளவும் மிகக்குறைந்த அளவாக இருக்கின்றது. எதிர்காலத்தில் பயிர்ச்செய்கைக்கான பௌதிகச் சூழலே இல்லாமல் போய்விடக் கூடிய பெரும் அபாயம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

அத்தோடு அதிகமாக காடழிக்கப்பட்டமை, மேய்ச்சல் நிலங்கள் இல்லாமல் போனமை, கோமாரி போன்றும் கொள்ளை நோய்களின் தாக்கம், சூழலுக்கு ஒவ்வாத, இப்பிரதேச சூழலுக்கு அந்நியமான விலங்கினங்களையும் பறவைகளையும் அறிமுகம் செய்தல், அவை இறந்து விடுதல் முதலியன மிருக வளர்ப்பு விலங்கு வேளாண்மை நடவடிக்கையை பெருமளவு பாதித்துள்ளது.

விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையான விலை வழங்கப்படாமை, உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் இன்மை, பொருத்தமான ஆலோசனைகள் இன்மை, களஞ்சிய வசதியின்மை மற்றும் அரச பாதுகாப்பின்மை, முதலிய காரணங்களினால் இப்பிரதேச விவசாயிகள் பெருமளவு பாதிப்புக்குள்ளாகின்றனர். இதனால் வெளிப்பிரதேச வியாபாரிகளும் இடைத்தரகர்களும் தங்களுக்கு கொள்ளை இலாபம் கிடைக்கும் வகையில் விவசாயிகளிடம் இருந்து குறைந்த விலையில் உற்பத்திப் பொருட்களைச் சுரண்டிக்கொண்டு செல்கின்றனர்.

இதனால் விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு கூட கிடைக்காத அளவு நஸ்ரம் ஏற்படுகிறது. உண்மையில் "உழவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது" என்ற நிலையி ல்தான் இப்பிரதேச மக்களின் பொருளாதார நிலை உள்ளது.

**சுகாதாரப் பிரச்சினை**

இந்தப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் மக்கள் எதிர்நோக்கும் மிக முக்கியமான பிரச்சினையாக சுகாதாரப் பிரச்சினை காணப்படுகிறது. யுத்தத்தின் போதும் யுத்தம் முடிந்த பின்னரும் கூட முடிவில்லாது தொடரும் பிரச்சினையாக இது உள்ளது. இங்கு வாழும் மக்கள் பல்வேறு தொற்றும், மற்றும் தொற்றாத நோய்களுக்குட்பட்டு வருகின்றனர். இந்த வகையில் மலேரியா, வாந்திபேதி, சிறுநீரக தொற்று, டெங்கு, காசநோய், ஈர்ப்புவலி, நீரிழிவு, கொப்பளிப்பான், சின்னம்மை, விசக்கடி, உளநலப்பாதிப்பு, போசாக்கின்மை முதலியவற்றால் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி விடுகின்றனர்.

குறிப்பாக சுவாச நோய், உளநலப் பாதிப்பு, போசாக்கின்மை போன்ற பாதிப்புக்கள் மிக வலுவாக உணரப்படுகின்றது. யுத்தத்தின் பின்னர் வன்னிப் பிரதேச மக்களை பாதித்துள்ள மோசமான தொடர் நோயாக சுவாச நோய் காணப்படுகின்றது. யுத்தத்தின் போது பயன்படுத்தப்பட்ட இரசாயன ஆயுதங்களின் தாக்கம், போசாக்கின்மை, சுத்தமான குடிநீர் மற்றும் வாழ்க்கைச் சூழல் இன்மை, சரியான மருத்துவ உதவியின்மை போன்றன இந்நோய் பரவக் காரணமாக இருக்கின்றன. இங்கு கணிசமானவர்களுக்கு சுவாச நோய் இருப்பதாக அறிய முடிகின்றது.

மேலும் இப்பிரதேசத்தின், ஏன் வன்னிப் பிரதேசம் முழுவதையும் தொடர்ச்சியாக வாட்டிவரும் பாதிப்பாக உளநலப்பாதிப்பு காணப்படுகிறது. தொடர்ச்சியாக இடம்பெற்ற யுத்தம், இடப்பெயர்வு, உயிர், சொத்து இழப்பு

முதலிய காரணங்களினால் அநேகமானோர் மிதமான மற்றும் பாரிய உளநோய்களுக்கு ஆளாகியுள்ளமையினை அவதானிக்க முடிகிறது. பயம், பதகளிப்பு, மெய்ப்பாடு, மிதமான மனச்சோர்வு மற்றும் நெருக்கீடுகளுக்குப் பிற்பட்ட மனவடு (PTSD) போன்ற மிதமான உள நோய்களும், மனச்சோர்வு (Depression), பித்து (Mania), தீவிர உளநோய் (Acutepsychosis), நாள்பட்ட உளமாய நோய் (Schiznphrenia) முதலான பாரிய உள நோய்களாலும் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக இங்கு வாழ்கின்றனர்.

இதனால் குடும்ப ஆரோக்கியம், குடும்ப கட்டுமானம், சமூக கௌரவம் என்பன பாதி க்கப்படுவதோடு, குடும்பச் சுமையும், தங்கிவாழும் நிலையும் அதிகரிப்பதோடு பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்படவும் காரணமாக அமைந்துள்ளது. உளவியல் பேராசிரியர் தயா சோமசுந்தரம், மருத்துவர் சிவதாஸ், உள மருத்துவர் அருள்மொழி முதலானவர்கள் இப்பிரதேசத்தில் (பொதுவாக வன்னிப் பிரதேசத்தில்) உள ஆற்றுகை மற்றும் உள நலச் சிகிச்சைகளுக்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேச மக்களிடையே காணப்படும் மிகப்பெரும் உடற்பாதிப்பாக போசாக்கின்மை காணப்படுகின்றது. இதற்கு பல காரணிகள் துணை புரிகின்றன. பொருளாதார நெருக்கடி, விவசாய உற்பத்தி பாதிப்பு, தரமற்ற உணவுப் பண்டங்களின் பயன்பாடு, சரியான உணவு பற்றிய அறிவின்மை, தொற்றுநோய்களின் தாக்கம், உள்ளூர் உணவுகளில் நாட்டமின்மை முதலியன முக்கியமான காரணிகளாக அமைகின்றன. இதனால் பெரும்பாலானவர்கள் உடல் மற்றும் உள பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறே மலேரியா, வாந்திபேதி, டெங்கு காசநோய், நீரிழிவு, விசக்கடி, ஈர்ப்பு வலி, கொப் பளிப்பான், சின்னம்மை போன்ற நோ ய்களின் தாக்கங்களும் இங்கு உள்ளமை உணரப்படுகின்றது.

**பெண்கள் எதிர்நோக்கும் குடும்ப மற்றும் சமூகப் பிரச்சினைகள்**

எமது சமூகத்தில் பெரிதும் சவால்களை எதிர்நோக்கும் ஆபத்தான நிலையில் உள்ள வர்களாக குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்கள் காணப்படுகின்றனர். சமூக பொ ருளாதார பண்பாட்டு ரீதியாக ஏற்பட்டு வருகின்ற மாற்றங்கள் இவர்களை வெகுவாகப் பாதிப்புக்குள்ளாக்குகின்றன. இந்நிலைமை இப்பிரதேசத்திற்கும் பொருந்தும். உண்மையில் இப்பிரதேசத்தைப் பொறுத்தவரையில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் நிலைமை மிகவும் பாரதூரமானரமானதாகவும் கடந்து செல்ல முடியாத துயர் நிறைந்ததாகவும் உள்ளதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக பெண் அடக்குமுறை, பாலியல் அடக்குமுறை - அடாவடித்தனம், கட்டிளமைப் பருவத்துக் கர்ப்பம், வீட்டு வன்முறை, இளவயதுத் திருமணம், விபச்சாரத்திற்கு தூண்டப்படுதல் மற்றும் விதவைகள் முதலான பிரச்சினைக்கு முகம் கொடுப்பவர்களாக உள்ளனர்.

குறிப்பாக வன்னியில் நிகழ்ந்த இறுதிக்கட்டப் போரின்போது போராளிக்குழுக்களால் இளைஞர், யுவதிகள் கட்டாய ஆட்சேர்ப்புக்க உள்ளாக்கப்பட்டதோடு 16 வயதை அடைந்த அனைவரும் திருமணம் செய்து கொள்வதன் மூலம் கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் இருந்து தப்பிக்க முடிந்தது. ஆனால் அது இன்று முடிவுற்ற மரணத் துயராக அவர்களை வாட்டி வதைக்கிறது.

இதேபோன்று கணவனை இழந்து விதவைகளான பெண்கள் எண்ணிக்கை அதிகமாக வுள்ளது. யுத்தம் பெரும்பாலான ஆண்களை காவுகொண்டதோடு; பலரை காணாமலும் போகச்செய்தது. இதனால் துணையை இழந்தவர் தொகை அதிகரித்துள்ளது. இப்பிர தேசத்தில் உருவாக்கப்பட்டுள்ள "புதிய நகர்" குடியேற்றத் திட்டத்தில் குடியேற்றப்பட்டுள்ள அனைத்துக் குடும்பங்களும் துணையை இழந்த குடும்பங்களே அதாவது இங்குள்ள குடும்பங்களில்

கணவனை இழந்த 55 குடும்பங்களும், மனைவியை இழந்த 03 குடும்பங்களும், இருவரை யும் இழந்த குடும்பங்கள் 02 மாகவுள்ளமை துயர் தரும் உதாரணமேயாகும்.

இத்தகைய பிரச்சினைகள் ஏற்படுவதற்கு பல்வேறு காரணிகள் ஏதுவாக அமைகின்றன. சட்டப் பாதுகாப்பு இன்மை, எமது சமூக குடும்ப கட்டமைப்பு, அதிகாரத்தில் உள்ளவர்களும் ஆண்மையச் சிந்தனையோடு செயற்படுதல், பெண்களிடம் காணப்படும் விழிப்புணர்வின்மை, அடிப்படையான கல்வியறிவின்மை, வாழ்க்கை பற்றிய மரபு சார்ந்த மதிப்பீடுகள், பொருளாதார ரீதியில் தங்கியிருத்தல், அகதி வாழ்வு, போர் நெருக்கடி - யுத்தச் சூழல், மாறிவரும் உலகச்சூழல் பாதிப்புக்கள் முதலியன குறிப்பிடத்தக்கன.

**மதுபோதைப் பாவனை**

யுத்தத்திற்கு பின்னர் இப்பிரதேசத்தில் தலைதூக்கியுள்ள ஒரு பிரச்சினையாக மது மற்றும் போதைப்பொருள் பாவனை காணப்படுகின்றது. இதற்கு பல்வேறு காரணங்கள் ஏதுவாக அமைகின்றன. போதைப்பொருட்களைப் பெறக்கூடிய சூழல், உடல் உள பாதிப்புக்கள், இதுபற்றிய விழிப்புணர்வின்மை, குடும்பச் சூழல், பணப்புழக்கம் முதலியன முக்கிய காரணங்களாகக் காணப்படுகின்றன.

இதனால் குடும்பத்திலும் சமூகத்திலும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது. அதாவது உள உடல் ரீதியாக பாதிப்பு ஏற்படல், குடும்பப் பிரச்சினைகள் ஏற்படல், பொருளாதர நெருக்கடியை தோற்றுவித்தல், குடும்ப சமூக கௌரவத்தை இழத்தல், தன்னிலிருந்தும் குடும்பத்திலிருந்தும் சமூகத்திலிருந்தும் அந்நியமாதல், பல்வேறு வகையான நோய்கள் ஏற்படல் முதலானவை குறிப்பிடத்தக்கவை.

**போக்குவரத்துப் பிரச்சினை**

இப்பிரதேசம் மாங்குளத்தில் இருந்து 5km தூரத்திலும் முல்லைத்தீவிலிருந்து 3km தூரத்திலும் அமைந்துள்ளது. ஆனால் சீரான பேருந்து சேவையில்லை. அத்தோடு பிரதான வீதியிலிருந்து உள்ளூருக்குப் போக எந்த வழியும் இல்லை. தெருக்கள் திருத்தப்படாமலும் காடுகள் சூழ்ந்தும் காணப்படுவதோடு மழை காலத்தில் வெள்ளப்பெருக்கேற்பட்டு வெளியே செல்ல முடியாத அளவுக்கு போக்குவரத்து சீர்கெட்டிருக்கும். இதனால் பிறவூர்த் தொடர்பு வர்த்தகம், கல்வி, தொழில் யாவுமே பாதிக்கப்படுகிறது. இதனை சீர்செய்து தருவது பொறுப்பு வாய்ந்தவர்களின் கடமையாகும்.

**கல்விப் பிரச்சினை**

இங்கு கல்வி வாய்ப்பபு மிகவும் மோசமான நிலையிலேயே உள்ளது. இதற்கு பல விடயங்கள் காரணமாகின்றன. போக்குவரத்து வசதியின்மை, பாடசாலை வசதி சரியான முறையில் இல்லை, அக்கறையின்மை, ஆசி ரியர் பற்றாக் குறை, பொருளாதார மந்தநிலை - வறுமை, உடல் உள ரீதியாக பாதிக்கபட்டிருத்தல், பெற்றோர்களை இழந்திருத்தல், தொற்றுநோய், இரத்தச்சோகை முதலிய பாதிப்புக்களால் மாணவர்கள் கல்வியில் நாட்டம் குறைந்திருத்தல் முதலியன கல்வி நிலையை வெகுவாய் பாதிக்கிறது.

**பிரச்சினைகளுக்கான தீர்வுகள்**

இந்தப் பிரதேசத்தில் ஆரோக்கியத்தையும் நீடித்த அபிவிருத்தியையும் ஏற்படுத்த வேண்டுமானால் மேற்படி பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அதற்கான வழிவகைகளை கண்டறியப்பட வேண்டும். அந்த வகையில் பின்வரும் ஆலோசனைகளை முன்வைக்கலாம்.

- சரியான முறையில் பௌதிகச் சூழலை திட்டமிடல்.
- பொருளாதார உற்பத்தி நடவடிக்கைகளைத் திட்டமிட்டமுறையில் மேற்கொள்ளுதல்.
- அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் யாவும் ஒன்றுபட்டு ஒரு நேர் கோட்டுத் திட்டத்தில் செயலாற்றுதல்.

- போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தல்.
- மருத்துவ சுகாதார சேவைகளை நல்ல முறையில் விருத்தியாக்குதல்.
- சுகாதாரக் கல்வியை மக்களுக்க போதியளவில் வழங்கல்
- பாலியல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- சமூக நிறுவனங்களை ஒன்றிணைத்து ஒரு வலைப்பின்னலை உருவாக்குதல்
- வெளிநாட்டில் உள்ளவர்களை இணைத்து பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்தல்
- சட்டம், நீதி, ஒழுங்கினைப் பேண வழியமைத்தல்.
- கலைஞர்களை ஒன்றிணைத்து கலை பண்பாட்டு அடிப்படைகளை கட்டி எழுப்புதல்
- மனித உரிமைகள் சம்பந்தமான அறிவை மக்களுக்கு ஏற்படுத்தல். இதற்கு சட்டத் துறையினரின் உதவி பெறுதல் அல்லது ஒன்றிணைத்தல்.
- பாரம்பரிய அறிஞர்களையும் நவீன சிந்தனையாளர்களையும் ஒன்றிணைத்து இத்திட்ட முன்வரைபை நீட்டி நடைமுறைப்படுத்தி மேற்பார்வை செய்து உறுதிப்படுத்தினால் ஈடாடிப் போன இப்பிரதேச வாழ்வையும் பொருளாதாரத்தையும் நீடித்து நிலைக்கும் வகையில் கட்டியெழுப்ப முடியும்.

**பின்னிணைப்பு**

பிரதேச அறிமுகம்

**எல்லை**

- A9 வீதியிலிருந்து மாங்குளம் முல்லைத்தீவு வீதியில் 5 km தொலைவில் அமைந்துள்ளது.
- வடக்கே தேராவில் கிராம சேவையாளர் பிரிவையும் தெற்கே கனகராயன
- குளத்தையம் கிழக்கே மணவாளன் கட்டமுறிப்பையும் மேற்கே ஒலுமடுவை யும் எல்லை யாக கொண்டு அமைந்துள்ளது.

**அமைவிடம்**

- வன்னியின் ஒரு பகுதியாகவுள்ளது.
- வன்னிப் பிரதேசத்தின் பௌதிக அம்சங்களைக் கொண்டிருத்தல் அண்சமவெளிப் பகுதியில் அமைந்துள்ளது.
- வயல்களாலும் காடுகளாலும் சூழப்பட்டது.

**காலநிலை**

- வட கிழக்கு மொன்சூன் காலத்தில் ஒக்டோபர் முதல் ஜனவரி மாதம் வரை யான காலப்பகுதியில் மழையைப் பெறுகிறது.
- வருடச் சராசரி மழைவீழ்ச்சி 626 mm - 3276 mm வரையும் கிடைக்கிறது.
- சராசரி வெப்பநிலை $23.0^{\circ}$ C - $39.3^{\circ}$ C வரையும் வேறுபட்டுக் காணப்படு கின்றது

**நிலப்பயன்பாடு**

- இங்கு பிரதானமாக காடுகள், புதர்கள், தென்னந்தோப்புக்கள், விவசாய நிலங்கள் மற்றும் நீர்நிலைகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

- இதன் மண்நிறமானது செங்கபில செம்மஞ்சள் மற்றும் வண்டல் மண் தொகுதிகளைக் கொண்டுள்ளது.
- இது விவசாயப் பொருளாதார நடவடிக்கைக்கு மிகவும் பொருத் தமான தாகவுள்ளது.

**நீர்வளம்**

- இங்கு மேற்பரப்பு நீர்நிலைகள், பெரிய சிறிய குளங்கள் காணப்படுகின் றன. குறிப்பாக 4 ஆறுகள் பருவகாலத்தில் இப்பி ரதேசத்தை ஊட றுத்துப் பாய்கின்றன.

**சமூகம்**

- இங்கு நான்கு சமூகத் தொகுதிகள் காணப்படுகின்றன. இவை சில நிலையில் தனித்துவமானதாகவும் பொருளாதார உற்பத்தி யில் கூட்டாகவும் இணைந்து செயற்படுகின்றன.
- இப்பிரதேசத்தின் பூர்வீக குடிகள்.
- இடையிட்டு இங்கு வந்து வாழும் யாழ்ப்பாணக் குடியேறிகள்.
- மலையகத்தில் இருந்து வந்து தங்கி வாழும் இந்திய வம்சாவளியினர்.
- யுத்தத்தின்பின் ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் குடியமர்த்தப்பட்டவர்கள் என நான்கு சமூகத் தொகுதிகள் காணப்படுகி ன்றன.

**பொருளாதாரம்**

- விவசாயம்
- நன்னீர் மீன்பிடி
- வேட்டையாடுதல்
- விலங்குவேளாண்மை
- பாலுற்பத்தி
- பிரம்புப் பின்னல் - பன்ன வேலை
- அரச ஊழியம்

**குடித்தொகை**

2015ஆம் ஆண்டு குடித்தொகை விபரத்தின் அடிப்படையில் பின் வருமாறு அமைந்துள்ளது.

- குடும்பங்களின் எண்ணிக்கை - 216
- ஆண்களின் எண்ணிக்கை - 344
- பெண்களின் எண்ணிக்கை - 378
- சிறுவர்களின் எண்ணிக்கை - 226
- முதியர்களின் எண்ணிக்கை - 53
- அங்கவீனமானவர்களின் எண்ணிக்கை - 14
- தலைவனை இழந்த குடும்பங்களின் எண்ணிக்கை - 55
- தலைவியை இழந்த குடும்பங்களின் எண்ணிக்கை - 63
- இருவரும் இல்லாத குடும்பங்களின் எண்ணிக்கை - 02
- காணாமல்போனவர்களின் எண்ணிக்கை - 08

**ஆரணி பரஞ்சோதி**
**தச்சடம்பன்,**
**பெரியபுளியங்குளம், மாங்குளம்**

# ஒட்டுசுட்டான் கோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள்

வன்னிப்பகுதியில் உள்நாட்டு யுத்தம் உக்கிரம் பெற்ற 2007ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒட்டுசுட்டான் கோட்டத்தில் 24 பாடசாலைகள் இயங்கின. அவற்றுள் '1AB' தர பாடசாலை ஒன்றும், '1C' தர பாடசாலை மூன்றும், 'வகை 2' பாடசாலை எட்டும், ஆரம்ப பாடசாலை பன்னிரெண்டும் அடங்கும். சில பாடசாலைகள் இடம்பெயர்ந்து புதிய இடங்களில் இயங்கின. 2008 வைகாசி 18ஆம் நாள் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டதாக பிரகடனப்படுத்தப்பட்ட வேளையில் இப் பாடசாலைகள் 'செட்டிகுளம் மெனிக்பாம் நலன்புரி முகாமில்' தற்காலிகமாக இயங்கின. வன்னியில் 2009 இறுதிப்பகுதியில் மீள்குடியேற்றம் ஆரம்பமானது. 2010.01.07 திகதி தொடக்கம் 2011.01.03ஆம் திகதி வரையுள்ள காலகட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசப் பாடசாலைகள் அனைத்தும் (24 பாடசாலைகள்) மீளத் திறக்கப்பட்டன. மு/பெரியகுளம் அத.க பாடசாலை தவிர ஏனைய அனைத்தும் அவற்றிற்குரிய நிரந்தர இடங்களில் தமது பணியைத் தெடங்கின.

நாட்டில் அமைதியேற்பட்ட பின்னர் வன்னியின் கிராமங்கள், நகரங்களின் 'உட்கட்டுமானங்கள்' வேகமாக விருத்தியடைந்து வந்தன. முக்கிய நகரங்கள் 'காபெற் வீதி வலையமைப்பால்' இணைக்கப்பட்டன. விளைவாக போக்குவரத்து வசதிகள் மேம்பட்டுள்ளன. அவ்வாறே பாடசாலைகளின் உட்கட்டுமானங்களும் வசதிகளும் துரித அபிவிருத்தியைக் கண்டன. பல மில்லியன் டொலர்கள் செலவில் பாடசாலைக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டன, சில புனரமைக்கப்பட்டன. உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற காலகட்டத்தில் மரநிழலில் நிலத்திலிருந்து கல்வி கற்ற மாணவர்கள் இன்று நிரந்தரக் கட்டிடங்களில் தளபாடங்களில் இருந்து கல்வி கற்கின்றனர். பாடசாலைகளில் கற்றல் சூழ்நிலை நன்கு வளப்படுத்தப்பட்டு சிறப்பாகவுள்ளது. சகல பாடசாலைகளிலும் போதியளவு நிரந்தர கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நவீன கற்றல் உபகரணங்களும் பாடசாலைகளுக்கு கிடைத்துள்ளன. ஆசிரிய வளம் இன்று ஓரளவு திருப்திகரமாகவுள்ளது. ஒருசில பாடங்களுக்கு மட்டும் பற்றாக்குறையுண்டு.

### 1. நகரபுற பிரபல பாடசாலைகளை நோக்கிய மாணவர்களின் பெயர்வு

எமது நாட்டில் தரம் 1 தொடக்கம் பல்கலைக்கழகம் வரை முற்றிலும் இலவசக் கல்வி வழங்கப்படுகின்றது. அதில் போட்டித்தன்மை மிக அதிகமாக உள்ளது. 1998.01.01 திகதி முதல் கட்டாய கல்விச் சட்டம், 6 வயது தொடக்கம் 14 வயது வரை நடைமுறையிலுள்ளது. சகலருக்கும் இலவசக் கல்வி வழங்கப்பட்ட போதிலும் அனைத்து மாணவர்களுக்கும் 'கல்விக்கான சந்தர்ப்பத்தை சமஅளவில்" வழங்குவதென்பது மிகவும் சவால்மிக்க பணியாக உள்ளது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் 'நகரமயமாதல்' முக்கிய நிகழ்வாக இருக்கிறது. வேலைவாய்ப்பு நகரங்களில் ஏற்படுகின்றது, அதனைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் கிராமங்களில் இருந்து வெளியேறி நகரங்களில் குடியேறுகின்றனர். எமது பிரதேசத்திலும் இந்நிலைமை 'கல்விக்காகக்' காணப்படுகின்றது. வன்னியின் இறுதி யுத்தத்தின் முடிவில் மக்கள் தமது சகல சொத்துக்களையும் இழந்த நிலையில்

அல்லது கைவிட்ட நிலையில் செட்டிகுளம் நலன்புரி நிலையத்திற்கு சென்றவேளையில் அவர்களிடம் எஞ்சியிருந்தது 'கல்விச் செல்வம" மட்டுமேயாகும். இதன்மூலம் கல்வியின் முக்கியம் பற்றி அவர்களிடம் நல்ல பட்டறிவுண்டு. வசதிபடைத்தவர்கள் தரமான கல்வியை தமது பிள்ளைகளுக்கும் பெற்றுத் தரவேண்டும் எனும் நோக்கில் வன்னிப்பகுதிக் கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கி குடிபெயரும் நிலை காணப்படுகின்றது.

இச்செயற்பாடு தனிமனித அல்லது குடும்ப நோக்கில் சரியானதாக இருக்கக் கூடும் ஆனால் சமுதாய அல்லது பிரதேச நோக்கில் ஆரோக்கியமானதல்ல. இவ்வாறு வெளியேறும் பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் பல்கலைக்கழக அனுமதியை எமது பிரதேச பாடசாலைகளினூடாக பெற்றுக் கொள்வதற்காக முயல்வதும் இங்கு கூர்ந்து நோக்கத் தக்கது. ஒட்டுசுட்டான் பிரதேசத்தை பூர்வீக வதிவிடமாகக் கொண்ட ஆசிரியர்கள் கூட தமது பிள்ளைகளை நகர புறப்பாடசாலைகளில் இணைப்பதற்காக நகரபுறங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் நிலைமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. தாம் சார்ந்த பிரதேச பாடசாலைகளின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டிய உள்ளூர் ஆசிரியர்கள் இவ்வாறு இடமாற்றம் பெற்றுச் செல்வது பிரதேச பாடசாலைகளின் நிலைபேறான கல்வி அபிவிருத்திக்குத் தடையாகவுள்ளது.

நகரபுற பாடசாலைகளை நோக்குவோமாயின் அங்கும் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. பெற்றோர்களின் அனுமதிக்கான வற்புறுத்தல்கள், பாடசாலையை அதிக மாணவர் கொண்ட பாடசாலையாக்க வேண்டுமென்ற அதிபர்களின் இடையறாத அவா, மாணவர் அனுமதியூடாக பாடசாலைகளுக்கு கிடைக்கக் கூடிய அனுகூலங்கள் போன்ற காரணங்களினால் இப்பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை கட்டுக்கடங்காமல் அதிகரித்து வருகிறது. அவை சிறு கிராமங்கள் போன்று விரிவடைந்துள்ளன. எமது நாட்டில் 1000 மாணவர்களுக்கு மேல் 8000 மாணவர்கள் வரை மாணவர்களைக் கொண்ட பல பெரிய பாடசாலைகள் காணப்படுகின்றன. விளைவாக அப்பாடசாலைகளில் மாணவர் நெரிசல்கள் ஏற்பட்டுள்ளன. அத்துடன் அங்கு இடப்பிரச்சினை வளத்திற்கான போட்டி ஏற்பட்டுள்ளது. ஒரேவகுப்பில் பல்வேறு பிரிவுகள் காணப்படுகின்றன.

அங்கு எல்லா மாணவர்களுக்கும் சமசந்தர்பம், ஒரேவிதமான கவனிப்பு இருக்கும் என உறுதியாக கூறமுடியாத நிலை காணப்படுகிறது. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் உயர்ந்த புள்ளிகளை பெற்றவர்கள் சித்தியடைகின்றனர். அப்படி சித்தி அடைந்தவர்களிருந்து சித்திக்குரிய வெட்டுப்புள்ளியை விடவும் அதிக புள்ளி பெற்றவர்களே பிரபல பாடசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வாறு மிகச்சிறந்த புத்திசாலி மாணவர்களை கொண்ட பிரபல பாடசாலைகளின் க.பொ.த (சா/த) பெறுபேற்றில் "எந்தப்பாடத்திலாயினும் சித்தியடையாத" கணிசமான அளவு மாணவர்கள் வருடா வருடம் காணப்படுகின்றமை பிரபல பாடசாலைகளில் கூட கல்வியில் சமசந்தரப்பம் வழங்கப்பட முடியவில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இவ்வாறான பெரிய பாடசாலைகள் இல்லை என்பதும் இங்கே சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வரும் வரை கல்விக்கு பிரபல பாடசாலை எதுவும் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உருவாகி இருக்கவில்லை. தரம் 5 புலமை பரிசில்

பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளை களில் சிலர் முல்லைத்தீவு கல்வி வலய பாடசாலை களுக்கு அல்லது வவுனியா தெற்குவலய பாடசாலைகளுக்குச் சென்று கல்வியைத் தொடர்ந்தனர். ஆனால் இன்று ஒட்டுசுட்டான் பிரதேச பாடசாலைகளிலேயே கல்வியை தொடர்வது இப்பாடசாலைகள் சிலவற்றின் கல்வித்தரம் உயர்ந்து செல்வதை மக்கள் உணர்ந்துள்ளமையை குறிக்கின்றது.

## 2. பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டங்கள்

மக்கள் நகரங்களை நோக்கி சென்று குடியேறுதல் நாட்டில் பல நெருக்கடிகள் தோன்றுவதற்கு மூல காரணமாகியுள்ளது. பாடசாலைகளில் இடப்பற்றாக்குறை, மக்களுக்கு வதிவிடப்பிரச்சினை, வடி கால்களின் பராமரிப்பில் திருப்தியற்ற நிலை யால் நுளம்புப்பெருக்கம், வதிவிடத்திற்காக சதுப்பு நிலங்களை நிரப்புதல், குளங்கள் ஆற்றங்கரையோரங்களில், கடற்கரை யோரங்களில் சட்டவிரோத குடியிருப்புக்கள் தோன்றல் என்பன அவற்றுட் சில நெருக் கடிகளாகும். இவ்வாறான செயற்பாடுகளின் விளைவாக காலத்திற்கு காலம் பல்வேறு அனர்த் தங்களை மக்கள் சந்திக்க வேண்டியிருந்தது.

திட்டமிடப்படாத சட்டவிரோத குடியிருப்புக்கள் உருவாகியிருப்பதனால் நகரங்களில் இன்றும் 'டெங்கு' நுளம்பின் அச்சுறுத்தல் தொடர்கின்றது. அண்மையில் கொழும்பு மாநகரில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்திற்கு இயற்கை வடிகால்களை மூடி கட்டிடங்கள், குடியிருப்புக்கள் சட்டவி ரோதமான முறையில் கட்டப் பட்டமையும், ஆற்றுப்படுக்கைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய இடங்களில் அமைக்கப்பட்ட அனுமதியற்ற குடியிருப்புகளும் காரணமெனக் கூறப்படுகிறது. எனவே நகரங்களை நோக்கி மக்கள் படையெடுப்பை கட்டுப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத் துள்ளது. கிராமங்களில் உரியமக்களை வசிக்கச் செய்வதற்காக பிரதேச செயலர் பிரிவு அடிப்படையில் அரசினால் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டிருக்கின்றன. அத்துடன் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் பிரதேச செயலர் பிரிவு ரீதியான பாடசாலைகள் அபிவிருத்தி திட்டங்களும் அடங்கும். அத்திட்டங்களில்

1. 'நவோதய' பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
2. 'இசுரு' பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.
3. 'மகிந்தோதய' ஆயிரம் இடைநிலை பாடசாலை அபிவிருத்தி நிகழச்சித்திட்டம்
4. 'அயலிலுள்ள சிறந்த பாடசாலை' அபிவிருத்தி நிகழ்சித்திட்டம்

என்பன குறிப்பிடத்தக்கவை. இவை அனைத்தும் இடைநிலைப் பாடசாலைகளின் அபிவிருத்தியை பிரதான இலக்காக கொண்டவை.

### 2.1.'நவோதய' இடைநிலை பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்:

எமது பிரதேசத்தில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் இந்நிகழ்சசித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மு/முத்தை யன்கட்டு வலதுகரை அ.த.க பாடசாலை (தற்போதைய முத்தையன்கட்டு வலது கரை மகாவித்தியாலயம்) இதற்குத் தெரிவு செய்யப்பட்டது. துரதிஷ்டவசமாக அக்காலத்தில் வன்னிப்பகுதிக்கு "இறுக்கமான பொருளாதாரதடை" நடைமுறைப்படுத்தப் பட்டது. அத்தியாவசிய உணவு, மருந்துப் பொருட்களைத் தவிர வேறுபொருட்களைக் கொண்டு வரமுடியாது. கட்டடப்

பொருட்களையும் அவசியமான ஏனைய பொருட்களையும் கொண்டுவர பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்கவில்லை. அதனால் நவோதய இடைநிலை பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் பயன் ஒட்டுசுட்டான் கோட்டப் பாடசாலைகளுக்குக் கிடைக் கவில்லை. "பொருளாதார தடைநிலைமை" தசாப்த காலமாக நீண்டதாக இருந்ததால் நீண்ட காலமாக பாடசாலைகளில் பௌதீக வளவிருத்தி (கட்டடம் அமைத்தல், புனர மைத்தல் தளபாட விநியோகம் நடைபெற வில்லை) ஏற்படவில்லை. மாணவர்கள் வெற்றுத்தரைகளில் UNICEF நிறுவனத்தால் வழங்கப்பட்ட 'பாய்களில்' அமர்ந்திருந்து மரநிழல்களில் கல்வி கற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்பட்டது. இந்நிலை யுத்தம் முடியும் வரை நீடித்தது.

**2.2. 'இசுரு' இடைநிலை பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்:**

'நவோதய' பாடசாலைகள் அபிவிருத்தி திட்டத்தின்பின் இடைநிலை பாடசாலைகளை சகல வசதிகளும் கொண்ட பாடசாலைகளாக மாற்றியமைக்கும் நோக்குடன் இந்நிகழ்ச்சி திட்டம் முன்னெடுக்கப்பட்டது. யுத்தம் இறுதிக்கட்டத்தில் இருந்தபோது இது முன்னெடுக்கப்பட்டு, மீள்குடியேற்றம் நடைபெற்ற பின் வன்னிக்கு அறிமுகப்படுத்தப் பட்டது. அக்காலத்தில் திட்டம் முடிவுக் காலத்தை அண்மித்திருந்தது. இத்திட்டத்தில் மு/ஒட்டுசுட்டான் ம.வி பாடசாலை உள் வாங்கப்பட்டிருந்தது. அத் திட்டத்தின் நிபந்தனைக்கு அமைவாக இப் பாடசாலையின் ஆரம்ப பிரிவு நீக்கப்பட்டு மு/ஆறுமுகம் வித்தியாலயம் எனும் புதிய ஆரம்ப பாடசாலை உருவாக்கப்பட்டது. இப்போது ஒட்டுசுட்டான் பாடசாலைகளின் எண்ணிக்கை 25ஆக உயர்ந்தது. இத்திட்டத்தின் சில பயன்கள் பாடசாலைக்கு கிடைத்தபோதும், மகிந்தோதய ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்டமையால் 'இசுரு' திட்டத்தின் முக்கிய பயனாகிய நிர்வாக கட்டட தொகுதியைக் கொண்ட மூன்று மாடிக்கட்டடம் ஒட்டுசுட்டான் ம.வி இற்கு கிடைக்கவில்லை என்பது கவலை தரும் விடயமாகும். எனினும் சம நேரத்தில் மு/ மல்லாவி மத்திய கல்லூரிக்கு அக்கட்டிட தொகுதி கிடைத்திருந்தமை குறிப்பிடப் படவேண்டிய விடயம். தவறு எங்கே நடைபெற்றது? என்பது தெரியவில்லை.

**2.3. மகிந்தோதய ஆயிரம் இடைநிலைப் பாடசாலை அபிவிருத்தி நிகழ்சித்திட்டம்:**

மகிந்தசிந்தனை எதிர்கால நோக்கு 2010இன் சிபார்சுகளுக்கு அமைவாக, எதிர்கால இலங்கையின் அபிவிருத்தி இலக்குகளை அடையும் வகையில் ஆரம்ப பாடசாலைகள் ஐயாயிரம்(5000), மற்றும் ஆயிரம்(1000) இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டமாகும். பிரதேச செயலர் பிரிவு அடிப்படையில் ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளும் மற்றும் ஐயாயிரம் ஆரம்ப பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. கல்வியில் யாவர்க்கும் சமவாய்பை வழங்கி மாணவரை அவர்களின் சொந்த இடங்களிலிருந்து கற்கச்செய்வது அதன் நோக்கமாகும். மேலும் இலங்கையின் எதிர்கால அறிவுக் கேந்திரத்திற்கு தேவையான மனித மூலதனத்தை கட்டியெழுப்புவதற்கு தேவைப்படுகின்ற தரரீதியிலான இடைநிலை பாடசாலை முறைமையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் சர்வதேச தொழிற்சந்தையில் கேள்வி அதிகமாகவுள்ளவர்கள் கொண்டிருக்க வேண்டிய குழுச்செயற்பாடுகள், தொடர்பாடற் திறன்கள், கடின வேலைகளை நிறைவேற்றும்

ஆற்றல் தலைமைத்துவ திறமைகள் வர்த்தக ஆற்றல்கள் போன்ற திறமைகளை தன்னகத்தே கொண்ட இலங்கை இளைஞர் சந்ததியை உருவாக்கல். அத்துடன் நாட்டிலுள்ள பாடசாலைகளுக்கிடையில் உள்ள ஏற்றதாழ்வுகளை குறைத்தல் என்பவற்றை அடைவதற்காக இந்நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

பதினொரு ஆண்டுகள் பொதுக்கல்வியை முடித்தபின் மாணவர்கள் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த பின்னர் உயர்தரத்திற்கு அனுமதிக்கப் படுகின்றனர். உயர்தரக் கல்வியானது துறைசார்ந்த விசேட கல்வியாகும். இது எதிர்கால வேலைவாய்ப்புடன் சம்பந்தப்பட்ட திருப்பு முனையாகும். 2012ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரத்தில் கல்விகற்ற மாணவர் வீதம் துறை ரீதியாக வருமாறு கலைத்துறை 51%, வர்த்தக துறை 27%, கணித விஞ்ஞான துறை 22%, இதனை பின்வருமாறு 2016இல் மாற்றியமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அவை வருமாறு கணித விஞ்ஞான துறை 40%, வர்த்தக துறை 35%, கலைத்துறை 25%. இங்கு கலைத்துறையில் கற்கும் மாணவர் தொகையை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருப்பது கண்கூடு. காரணம் கலைத்துறையில் கற்றவர்களுக்கான கேள்வி, வேலைச் சந்தையில் குறைந்திருப்பதேயாகும். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாட்டில் முதல் முறையாக க.பொ.த. உயர்தரத்தில் புதிதாக 'தொழில்நுட்பத்துறை' என்னும் கற்றல் துறை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இத் துறை மாணவர்களுக்கு வேலைவாய்பை இலகுவாக்கும் என நம்பப்படுகின்றது.

இதனடிப்படையில் மூன்று இடைநிலை பாடசாலைகள் இப்பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவை மு/ ஒட்டுசுட்டான் ம.வி, மு/முத்தையன்கட்டு வலதுகரை ம.வி, மு/மாங்குளம் ம.வி என்பனவாகும். இவை உள்ளூரில் உயர் பண்பு தரமான கல்வி வழங்கும் நிறுவனங்களாக விரைவில் மாறியுள்ளன. அத்துடன் அப்பாடசாலைகளில் உயர்தரத்தில் கணிதஃ விஞ்ஞானப்பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு '1AB' பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளன. இதனால் உயர்தரத்தில் விஞ்ஞான கணிதபிரிவில் கற்கும் மு/முத்தையன்கட்டு வலதுகரை ம.வி மாணவர்கள் மு/வித்தியானந்தாக் கல்லூரிக்கு செல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. சொந்த வீட்டிலிருந்து கற்கின்றனர். இவ்வாறே மு/மாங்குளம் ம.வி பிள்ளைகட்கு மல்லாவிக்கு சென்று கல்வியைத் தொடர வேண்டிய நிலை தவிர்க்கப்பட்டுள்ளது. இவ்விடயத்தில் அரசின் எதிர்பார்ப்புக்கள் வெற்றியடைந்துள்ளமை சுட்டிக்காட்டத் தக்கது. அத்துடன் உயர் தரத்தில் விஞ்ஞான கணித பிரிவில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றமை வரவேற்கத்தக்கது. மேற்படி பாடசாலைகளுக்கு 'மகிந் தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடம்' வழங்கப்பட்டுள்ளது. மு/ஒட்டுசுட்டான் ம.வி இற்கு மேலதிகமாக 'மகிந்தோதய தொழில்நுட்ப பீடம்' வழங்கப்பட்டுள்ளது. இவ்அபிவிருத்தி திட்டத்திலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளிலிருந்து ஆரம்பக் கல்வியை நீக்கவேண்டும் என்ற நிபந்தனை உண்டு. எனவே மாங்குளம் ம.வி இலிருந்து ஆரம்பக்கல்வி பிரிவு பிரிக்கப்பட்டு மு/சண்முகரத்தினம் வித்தியாலயமும், முத்தயன்கட்டு வலதுகரைப் பாடசாலையிலிருந்து மு/முத்துவிநாயகர் தமிழ் வித்தியாலயமும் புதிய ஆரம்ப பாடசாலைகள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன. தற்பொழுது ஒட்டுசுட்டான் கோட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 27 ஆக அதிகரித்துள்ளது.

**2.3.1.மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடம்:**

தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் இடைநிலை பாடசாலைகளுக்கு 'மகிந்தோதய தொழினுட்ப ஆய்வுகூடம்' வழங்கப் பட்டுள்ளது. ஒவ்வொன்றும் 20 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் இரண்டு வகைகள் காணப்படுகின்றன வகை 1 , வகை 2 என்பன அவையாகும். எமது 3 பாடசாலைகளுக்கும் வகை 1 தொழினுட்ப ஆய்வுகூடம் கிடைத்துள்ளது. இங்கு உயர்தர மாணவர்கள் கணிதம், பௌதிகம், இரசாயனவியல், உயிரியல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் செயல்முறை ஆய்வுகளில் ஈடுபடமுடியும். நிலமட்ட கட்டடத்தில் (1)உயிரியல்/இரசாயனவியல் ஆய்வுகூடம் (2)கணித/பௌதீகவியல் ஆய்வுகூடம் என்பன உரிய உபகரணங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேல் மாடியில் (3) 41 கணினிகளைக் கொண்ட தகவல் தொடர்பாடல்தொழில்நுட்பஆய்வுகூடம்(4.) 21 கணினிகள் மற்றும் நவீன உபகரணங்களைக் கொண்ட 'மொழிக்கூடம்". (5) டிஜிற்றல் தொழில்நுட்பத்தில் இணைப்புடன் கூடிய தொலைக் காட்சிப் பெட்டி கொண்ட 'தொலைக்கல்வி அலகு' என்பன காணப்படுகின்றன.

மகிந்தோதயதொழில்நுட்ப ஆய்வு கூடத்தின் பயன்கள்:

1. உயர்தரத்தில்விஞ்ஞான கணிதபிரிவில் கற்கும் மாணவர்கள் கணிதம், பௌதிகம், இரசாயனவியல், உயிரியல் பாடங்களில்பரிசோதனை செயல்முறை ஆய்வுகளில் ஈடுபடமுடியும். அதற்கு தேவையான ஆய்வுகூட உபகரணங்கள், இரசாயன பொருட்கள் உண்டு.
2. தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப ஆய்வுகூடத்தில் 41 கணினி கள் LAN வலையமைப்பில் இணைக் கப்பட்டு இணைய Internet இணைப்புடன் காணப்படுகின்றது. மாணவர் இணையத்தில் உலாவி தமக்குத் தேவையான அறிவை தேடிப்பெற்று திரட்டிக் கொள்ளமுடியும். இந்நிலையைத்தில் உள்ளூர் இளைஞர்களுக்கும் சிறுதொகைப் பணத்தை அறவிட்டு கணினிப் பயிற்சியை வழங்க அதிபருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
3. மொழிக்கூடத்தில் 21 கணனிகள் இணைய இணைப்புடன் நவீன தொடர்பாடல் உபகரணங்களுடன் காணப்படுகின்றது. மாணவர்கள் இங்கு பல்வேறு சர்வதேச மொழி களில் பயிற்சிகளில் (உச்சரிப்புப் பயிற்சி அடங்கலாக) சுயமாக ஈடுபடமுடியும். தேவைப்பட்டால் இணையத்தின் உதவியுடன் காணொளி தொடர்பாடலிலும் (Video conferencing)ஈடுபடமுடியும். வெளிநாட்டில் இருப்பவருடன் விரும்பிய மொழியில் உரையாடும் வசதிகளும் உண்டு.
4. 'மொழிக்கூடத்தின்' ஒரு பகுதியாக 'தொலைக்கல்வி அலகு' காணப்படுகின்றது. இலங்கையில் பாடசாலைக்கல்வி முறைக்கு புறம்பாக தொலைக்கல்வி முறையிலும் கல்வி வழங்கப்படுகிறது. மத்திய நிலையில் மத்தியகல்வி அமைச்சினால்இத்திட்டம் (nedry) முன்னெடுக்கப்படுகிறது. கல்வி ஒலி ஒளி பரப்பு தொலைக்காட்சியினூடாக நடைபெறுகின்றது. இவ் தொலைக்காட்சி கல்வி ஒலி ஒளி பரப்பு டிஜிற்றல் தொழில்நுட்பத்தின்

மூலம் பாடசாலைகளிலுள்ள தொலைக்கட்சிப் பெட்டியுடன் இணைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் அமைச்சின் நேரசூசியின்படி கல்வி ஒலி,ஒளி பரப்பை இங்கு பார்வையிட முடியும். முக்கிய விடயங்களை பதிவு (record) செய்து வைத்து பின்னர் பயன்படுத்தவும் வசதிகளுண்டு. இம்முறையிலுள்ள சிறப்பு யாவருக்கும் ஒரே மாதிரியான சமமான கல்வி வழங்கப்படுவதாகும். அத்துடன் நகரத்தில் கற்பிக்கப்படும் புதிய விடயம் சமநேரத்தில் கிராமப்புற மாணவர்களையும் சென்றடைய கூடிய வசதியிருத்தலாகும்.

### 3.0. க.பொ.த உயர்தரத்தில் தொழில்நுட்ப பாடத்துறையின் ஆரம்பம்:

இளைஞர் அமைதியின்மை ஆணைக் குழுவின் அறிக்கை மற்றும் 1997 ஆண்டின் தேசியகல்வி ஆணைக்குழுவின் அறிக்கைகளில் தொழில் சந்தைக்குப் பொருத்தமான மாணவர் அணியை உருவாக்குவதற்கு உயர்தரத்தில் 'தொழில்நுட்ப பாடதுறை' ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப பாடத்துறை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள்:

1. க.பொ.த (உ/த) இல் பாடத்தை தெரிவு செய்வதிலுள்ள குறைபாடுகளை சீராக்கல்.
2. நிலவும் தொழிற்சந்தைக் கேள்வியை ஈடுசெய்யும் அறிவாளிகளை உயர்கல்வி மூலம் உருவாக்குதல்.
3. நாளாந்த வாழ்க்கைக்கு பயன்படும் தொழில்நுட்பத் திறனை மாணவருக்கு வழங்குதல்.
4. தொழினுட்ப உலகில் பிரச்சினைகளுக்கு தொழில்நுட்பத் தீர்வு வழங்கும் ஆற்றலை மாணவரிடையே வளர்த்தல்.
5. தொழிலாளர் சந்தைக்கு ஏற்ற திறன்களை மாணவரிடையே வளர்த்தல்.
6. தேசிய தொழிற்றகுதி சட்டகத்துக்கு அமைய தொழிற்கல்வியில் மாணவரை ஈடுபடச்செய்தல்.

### 3.1.மகிந்தோதய தொழில்நுட்ப பீடம்:

ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் மு/ஒட்டுசுட்டான் ம.வி பாடசாலைக்கு ஒரு தொழில்நுட்ப பீடம(Technology Faculty) கிடைத்தமை உண்மையில் மிகப்பெரிய வரப்பிசாதமாகும். ஆரம்பத்தில் மாவட்டத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் மாவட்டத்தில் ஒரே ஒரு பாடசாலையாக இப்பாடசாலை தெரிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் இப்பாடசாலையில் உயர்தரத்தில் 2013ஆம் ஆண்டில் புதிய தொழில்நுட்பபிரிவு (Technology Stream) தொடங்கப்பட்டது. பின்னர் அதே ஆண்டில் மு/வித்தியானந்தாக் கல்லூரிக்கும் இவ் அனுமதி கிடைத்தது. 2014இல் மல்லாவி மத்திய கல்லூரிக்கும் புதிய பிரிவை நடாத்த அனுமதி கிடைத்துள்ளது.

தொழில்நுட்பதுறை 2 பிரதான துறைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. பொறியியல் தொழில்நுட்ப துறை (Engineering technology)
2. உயிர் முறைமைகள் தொழில்நுட்ப துறை (BioSystem technology)

என்பன அவையாகும். இவ்விரு பிரிவுகளுக்குமான பொதுப்பாடமாக 'தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்'(Science for Technology) அமைந்துள்ளது. இரண்டாவது பாடமாக பொறியியல் பிரிவு மாணவர்கள் 'பொறியியல் தொழில்நுட்பபாடத்தையும்'

உயிர் முறைமைகள் தொழினுட்ப மாணவர்கள் 'உயிர் முறைமைகள் தொழில்நுட்ப பாடத்தையும்' மூன்றாவது பாடமாக கல்வி அமைச்சால் சிபார்சு செய்யப்பட்டுள்ள 11 பாடங்களிலிருந்து விரும்பிய ஒரு பாடத்தை மாணவர் தெரிவு செய்து கற்கமுடியும்.

மூன்றாவது பாடமாக ICT தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைத் தெரிவு செய்த பிள்ளைகட்கு பல்கலைகழகங்களில் பரந்து பட்ட அதிகளவான கற்கை நெறிகள் காத்திருக்கின்றன. இம் மாணவர்களின் செயல்முறைப் பயிற்சி வேலைத்திட்டத்திற்காக 65 மில்லியன் ரூபா செலவில் ' மகிந்தோதய தொழில்நுட்ப பீடம்' எனப்படும் விசேட ஆய்வு கூடம் இப்பாடசாலைக்கு வழங்கப் பட்டுள்ளது. புதிய தொழில்நுட்ப பிரிவில் கல்வி கற்ற முதலாம் தொகுதி மாணவர்கள் 2015ஆம் ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றி தற்பொழுது பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்திருக்கின்றனர்.

**4.0. ஐயாயிரம் சிறுவர் நேயப்பாடசாலைகள் அபிவிருத்தி வேலைத் திட்டம்:**

இது ஆயிரம் பாடசாலைகள் அபிவி ருத்தி திட்டத்துடன் இணைந்த வேலைத் திட்டமாகும். ஆரம்பக் கல் விப் பிரிவு காணப்படாத, ஆயிரம் பாட சாலை அபிவிரு தித்தி திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட இடைநிலைப் பாடசாலைகளுக்கு, தரம் 6 இற்கு பிள்ளைகளை வழங்கவுள்ள ஊட்டற் பாடசாலைகள் ஐயாயிரம் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றை பிள்ளை நேயத்தின் ஆறு பரிமாணங்களையும் கொண்ட பாடசாலைகளாக அபிவிருத்தி செய்தல் இவ் வேலைத்திட்டமாகும். அதற்காக ஒவ்வொரு பாடசாலைக்கும் தலா 5 இலட்ச ரூபா வழங்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் பிரிவில் 12 பாடசாலைகள் இவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்டன.

1. மு/பனிக்கன்குளம் அ.த.க. பாடசாலை
2. மு/சண்முகரட்ணம் வித்தியாலம்
3. மு/புலிமச்சிநாதகுளம் அ.த.க. பாடசாலை
4. மு/அம்பகாமம் அ.த.க. பாடசாலை
5. மு/ஆறுமுகம் வித்தியாலம்
6. மு/கருவேலன்கண்டல் அ.த.க. பாடசாலை
7. மு/காதலியார் சம்மளம் குளம் அ.த.க.பாடசாலை
8. மு/ஒட்டுசுட்டான் அ.த.க.பாடசாலை
9. மு/பெரியஇத்திமடு அ.த.க.பாடசாலை
10. மு/பேராறு தமிழ் வித்தியாலயம்
11. மு/முத்துவிநாயகர்தமிழ்வித்தியாலயம்
12. மு/ஈஸ்வரன் வித்தியாலயம்

என்பன அப்பாடசாலைகளாகும். மின்சாரவசதி, குடிநீர்வசதி, கட்டடம் புனர மைத்தல், பூங்கன்றுகள் பயன் தருமரங்கள் நாட்டல், பாடசாலையை அழகுபடுத்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு சிறுவர் உரிமைகளை மதித்து பேணும் பாடசாலைகளாக மாற்றி அமைக்கப்பட்டன.

வேறு மாவட்டங்களில் மேற்படி இடைநிலை பாடசாலை அபிவிருத்திக்காக தெரிவு செய்யப்பட்ட பிரபல பாடசாலைகள் சில திட்டத்திலிருந்து தாமாகவே விலகிக் கொண்டன. அதற்காக கூறப்பட்ட முக்கிய காரணம் தமது பாடசாலையிலிருந்து ஆரம்ப பிரிவை நீக்கப் பெற்றோர் (பாடசாலை அபிவிருத்திக் குழு) விரும்பவில்லை என்பதாகும். ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகள், உயர் கல்விப்பண்பு தரம்

கொண்ட பிரபல பாடசாலையில் இடைநிலை கல்வியை தொடர்வதை தரம் ஒன்றிலிருந்து உறுதிப்படுத்தவே விரும்புகின்றனர்.

பிரபல பாடசாலையில் தரம்-1இல் எப்படியாவது தமது பிள்ளைகளுக்கு அனுமதி பெற்றுவிட்டால் அப்பாடசாலையில் தொடர்ந்து இடைநிலை வகுப்புகளிலும் கற்கமுடியும் என பெற்றோர் நம்புகின்றனர். ஆனால் அதே பாடசாலைகளில் தரம் 6 இற்கு அனுமதி பெறுவதென்பது கடினமான விடயம் என்பதால் பாடசாலைகளிலிருந்து ஆரம்பக்கல்வி நீக்கப்படுவதை பெற்றோர் விரும்புவதில்லை. ஆரம்பக் கல்வி விடயத்தில் பெற்றோரின் கரிசனை அதிகமாகவுள்ளது. தரம் 6 இல் பிரபல பாடசாலைகளுக்கு அனுமதி பெறுவதற்காக புலமைப் பரிசில் புள்ளிகள் அடைப்படையில் நாடு முழுவதிலும் இருந்தும் விண்ணப்பிக்க முடியும். போட்டி காரணமாக பாடசாலைக்கு அருகிலுள்ள சில பிள்ளைகளுக்கு அனுமதி கிடைக்காமல் போகவாய்புண்டு. இவ்வாறான பிள்ளைகளின் பெற்றோர்கள் ஒன்றுதிரண்டு அழுத்தக் குழுக்களாக மாறி அரசுக்கு தலையிடி கொடுக்கின்றனர்.

2015ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தலும், பாராளுமன்ற தேர்தலும் நடைபெற்று இலங்கையில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கல்விக் கொள்கைகளில் மாற்றம் ஏற்பட்டது. 'மகிந்தோதய ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு' பதிலாக 'அயலிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை நிகழ்ச்சித் திட்டம்' முன்னெடுக்கப் பட்டுள்ளது.

**5.0. 'அயலிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை நிகழ்ச்சித் திட்டம்' :**

இவ் வேலை திட்டத்தில்ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் இரண்டு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றை சகல வளங்களும் கொண்ட கொழும்பிலுள்ள கீர்த்தி மிக்க றோயல் கல்லூரி, ஆனந்தாக் கல்லூரி போன்ற பாடசாலைகளுக்கு இணையாக மாற்றுவது இத்திட்ட மாகும். அதாவது பௌதீக ,மானுட வளங்களை இப்பாடசாலைகளுக்கு வழங்கி அதனூடாக உயரிய கல்வியின் பண்புசார் தரத்தை எட்டச் செய்வதாகும். இதனூடாக அப்பிரதேச மக்களால் தமது அயலிலுள்ள (பிரதேச) பாடசாலை மிகச்சிறந்த பாடசாலை என அவ்வூர் மக்களால் சுயஉணர்வின் மூலம் விரும்பி ஏற்கச் செய்வதாகும்.

இதன் மூலம் நகரங்களை நோக்கி குடும்பங்கள் கல்விக்காக குடிபெயர்ந்து செல்லும் நிலைமையை இழிவுபடுத்த முடியும். இத்திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் தேசிய மட்ட நிகழ்வுகள் 15.06.2016ஆம் திகதி நாடெங்கும் இடம்பெற்றது. வடமாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தனில் கௌரவ கல்வி இராஜங்க அமைச்சர் திரு. வே.இராதாகிருஷ்ணன் அவர்களால் அடிக்கல்

| | செயற்றிட்டம் | விபரம் | தெரிவு செய்யப்பட்ட பாடசாலை |
|---|---|---|---|
| 1 | செயற்றிட்டம் A | 1AB பாடசாலைகள் | 1.மு/ஒட்டுசுட்டான் மவி<br>2.மு/மாங்குளம் மவி |
| 2 | செயற்றிட்டம் B | 1AB,1C பாடசாலைகள் | 1.மு/கற்சிலைமடு அதகபாடசாலை |
| 3 | செயற்றிட்டம் C | எத்திட்டதிலும் தெரிவு செய்யப்படாதபாடசாலை | 1.மு/முத்துயைன்கட்டு வலதுகரை மவி |
| 4 | செயற்றிட்டம் D | ஆரம்ப பாடசாலைகள் | சகல ஆரம்ப பாடசாலைகளும் 15 |

நாட்டப்பட்டு தொடக்கி வைக்கப்பட்டது. 2016ஆம் ஆண்டில் 55000 மில்லியன் ரூபா செலவில் 6058 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இவ் நிகழ்ச்சித் திட்டத்தில் நான்கு செயற்றிட்டங்கள் உண்டு அவை செயற்றிட்டம் A , செயற்றிட்டம் B, செயற்றிட்டம் C, செயற்றிட்டம் D என்பவையாகும். செயற்றிட்டம் A யில் 1.மு/ஒட்டுசுட்டான் மவி 2. மு/மாங்குளம் மவி பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இவற்றிற்குத் தான் உயர்ந்த பட்ச அனுகூலம் கிடைக்கும். எனைய செயற்றிட்டங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் விபரம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

செயற்றிட்டம் A இல் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் தன்மைகள்:

1. இப் பாடசாலைக் கட்டமைபில் தரம் 1 தொடக்கம் 13 வரை காணப்பட முடியும்.
2. க.பொ.த உயர்தரத்தில் 5 பிரிவுகளைக் கொண்டிருக்கும்˙ விஞ்ஞான,கணிதப் பிரிவுகள், கலை வர்த்தக பிரிவுகள், தொழில்நுட்ப பிரிவு என்பன அவை யாகும்.
3. இப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் இடைநிலை வகுப்புக்களில் இருமொழிக் கற்பித்தல் இடம்பெறும். குறைந்த பட்சம் ஒன்று அல்லது இரண்டு பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்கும் சில மாணவர்கள் காணப்படுவார்கள்.
4. இப்பாடசாலைகளில் குறைந்தது 20 விளையாட்டு அல்லது இணை பாடவிதான செயற்பாடுகள் விருத்தி செய்யப்படும்.
5. இப் பாடசாலைக்கு அதிபர் ஆசிரியர்கள் விசேட முறையில் தெரிவு செய்யப்படுவார்கள்.
6. இப்பாடசாலைகளின் நிர்வாக, கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள் தகவல் முறைமை வலையமைப்பில் உட்படுத்தி அபிவிருத்தி செய்யப்படும்.

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்குள் உள்ளடக் கப்பட்ட 4 செயற்றிட்டங்களிலும் உள்ளடங் கும் பாடசாலைகளுக்கு பின்வரும் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

1. நீர், மின்சாரம், மலசல கூட வசதிகளை வழங்குதல்.
2. உபகரணங்கள் வழங்குதல்.
3. புதிய கட்டடங்களை நிர்மாணம் செய்தல்.
4. மனிதவள அபிவிருத்தி கல்வி அதிகாரிகள், அதிபர்கள், பிரதி அதிபர்க ளுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சி வழங்குதல்.

தொகுத்து நோக்கும் போது காலத்திற்கு காலம் கல்வியில் சமசந்தர்பம் சமவாய்ப்பை மாணவர்களுக்கு வழங்குவதற்கு அரசினால் பல்வேறு முயற்சிகள் பிரதேச மட்டத்தில் எடுக்கப் பட்டுவந்திருக்கிறது. அவை மக்களை அவர்களின் சொந்தக் கிராமங்களில் வசிப்பதை ஊக்குவிப்பனவாய் இருந்திருக்கின்றன.

மகிந்தோதய ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தையும், அயல் பாடசாலை சிறந்த பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தையும் ஒப்பிட்டால் முதலாவதில் 1000 பாட சாலைகளும் இரண்டாவதில் 600 பாட சாலைகளும் உச்சபயனைப் பெறும். முதலாவதில் மொத்தமாக 6000 பாடசாலை களும் இரண்டாவதில் மொத்தமாக 6058

பாடசாலைகளும் பயனடையும். மகிந்தோதய ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் தொழில்நுட்ப வசதிகள் மட்டுமே வழங்கப்பட்டதாகவும். ஆனால் அயல் பாடசாலை சிறந்த பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் பரந்துபட்ட நன்மைகளை வழங்கவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. எப்படியிருப்பினும் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் வழங்கப்பட்ட கட்டடங்கள் உபகரணங்கள் அனுகூலங்கள் உரிய பாடசாலைகளை முழுமையாக சென்றடைய முன் அயல்பாடசாலை சிறந்த பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப் பட்டுவிட்டது.

'இசுரு','மகிந்தோதய' பாடசாலைகள் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் பாடசாலைக் கட்டமைப்பில் 'இரட்டை தட்டு முறை' 1. ஆரம்ப பாடசாலை முறைமை (தரம் 1 -5 வரை கொண்டது) , 2. இடைநிலை பாடசாலை முறைமை (தரம் 6 – 13 வரை கொண்டது) வலியுறுத்தப்பட்டது. உலகில் பரந்துபட்ட அளவில் ஏற்றுக் கொள்ளபட்டது இம்முறையாகும். ஆரம்பப்பிரிவு பிள்ளைகள் நியமசிந்தனை பருவத்திற்கு முற்பட்ட பருவ பிள்ளைகளாகும். இவர்களின் தேவைகள், நடத்தை கோலங்கள், உளவியல் தன்மைகள் நியமசிந்தனையை கொண்ட சிரேஷ்ட மாணவர்களின் தன்மைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். இருவகை பிள்ளைகளையும் கையாளும் அணுகுமுறைகள் வேறுபட்டவை. ஆகவே இப் பாடசாலைகள் தனித் தனிப் பாடசாலைகளாக இயங்க வேண்டுமென்பது உளவியல் அடிப்படையில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை யாகும். உலக நாடுகளிலும் அவ்வாறே நடை முறைப் படுத்தப் படுகிறது. இருப்பினும் அயல்பாடசாலை சிறந்த பாடசாலை அபி விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் பாடசாலைக் கட்டமைப்பில் ஆரம்ப, இடைநிலை பிரிவுகள் ஒரு பாடசாலையில் இயங்க மீண்டும் அனுமதி வழங்கப்பட்டிருப்பது வியப்பாக இருக்கிறது. அரசின் கொள்கையில் அழுத்தக் குழுக்கள் செல்வாக்கு செலுத்தியுள்ளனவா? என எண்ணத் தோன்றுகின்றது. ஆயினும் எமது மூன்று பாடசாலைகளும் அவ்வாறு மீண்டும் இணைய முயலாமலிருப்பது திருப்தி அளிப்பதாயுள்ளது.

உள்நாட்டு யுத்தத்தில் சிக்குண்டு சிதறிபோயுள்ள வன்னிப் பாடசாலைகளுக்கு இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் பல நன்மைகளை வழங்கியுள்ளமையை நாம் நன்றியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**திரு. த. பங்கயச்செல்வன்**
B.sc(Agric),PGDE (Merit),M.Ed,SLTS-1,SLPS-1.
**கோட்டக்கல்வி அதிகாரி, ஒட்டுசுட்டான்.**

# தண்டுவான் பாகற்காய்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வரலாறும் அதன் கிராமிய வழிபாட்டு முறைகளும்



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவினுள் அடங்கும் கிராமங்களுள் தண்டுவான் கிராமமும் ஒன்றாகும். தண்டுவான் எனும் பெயர் பெறுவதற்கான காரணத்தை நோக்கின் முற்காலங்களில் தண்டுவான் பகுதியினூடாக போக்குவரத்து இடம்பெற்றதாகவும், தண்டுவான் கிராம மக்களின் விருந்தோம்பல் சிறப்பு காரணமாக இரவில் அங்கு தங்கி மறுநாள் பயணத்தைத் தொடரும் வழக்கம் இருந்ததாகவும் அதனால் அவ்விடத்திற்கு "தங்குவான்" எனும் பெயர் உருவாகி பின் திரிபடைந்து "தண்டுவான்" எனும் பெயர் உருவாகியது. இத்தகைய பெயர்பெற்ற கிராமமான தண்டுவானிலிருந்து பண்டாரக்குளம் செல்லும் வீதியில் பாகற்காய்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

ஏறத்தாழ முன்னூறு வருடங்களுக்கு முன் வவுனியா வடக்கு பகுதியிலுள்ள நெடுங்கேணி பிரதேசம் தண்டுவான் கிராமத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது. நெடுங்கேணியில் பெரியகுளம் எனும் கிராமத்தில் பாகற்காய்குளம் எனும் சிற்றூர் அமைந்துள்ளது. இங்கு வசித்துவரும் மக்கள் விவசாயத்தில் முன்னனி வகித்தனர். மரக்கறிவகைகளுள் ஒன்றான பாகற்காய் அதிக விளைச்சலைத் தருவதாலும், அருகில் இக் கிராமத்தில் குளம் இருந்ததாலும் பாகற்காய்குளம் எனப் பெயர் பெற்றது. இந்தியாவிலிருந்து வியாபார நோக்கில் வந்த பெண்மணி ஒருவர் பாகற்காய் குளத்தில் வசித்த அந்தணர் ஒருவரிடம் அம்மன் வடிவிலமைந்த திருவுருவ சிலையை வழங்கி, அதனை வைத்து வழிபடுமாறு கூறிச்சென்றதாகவும், இதனைத் தொடர்ந்து அப் பிராமணர் அந்தச் சிலையை பூசித்து வழிபட்டதாகவும் செவிவழிக் கதைகள் மூலம் அறியக்கூடியதாயுள்ளது.

1962ம் ஆண்டில் இருந்து தற்போது வரை பரம்பரை பூசாரிமார்கள் பூட்டன், பாட்டன், மகன், பேரன் என இக் கோயிலினை ஆதரித்து வருகின்றனர். அவர்களுடைய குலதெய்வமாக வழிபட்ட இடம் பாகற்காய்குளம். தொடர்ந்து அப் பிராமணரின் வம்சாவழியினரால் வழிபட்டு வந்த அம்மன் இடப்பெயர்வுகளால் அம்மனுக்கும் இடமாற்றம் ஏற்பட்டு பின் பூசாரி பரம்பரையினர் வாழும் கிராமமான தண்டுவான் கிராமத்தில் அமர்ந்திருந்து அருள்பாலித்து வருகிறார். இருப்பினும் தான் தோன்றிய இடமான பாகற்காய்குளம் எனும் பெயர் மங்காது அம்மனுக்கு முன் இடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

வழிபாட்டு முறைகளில் ஆகமம் சார்ந்த வழிபாடு, ஆகமம் சாராத வழிபாட்டு முறை எனும் இருவகை உண்டு. இங்கு இவ் ஆலயம் ஆகமம் சாராத வழிபாட்டு முறையில் அமைந்துள்ளது. அதாவது பூணூல் தரித்த ஐயரின்றி ஒரே குடும்பத்தினால் செய்யப்படும், பூஜை முறைகள் ஆகமமுறையின்றியும் நடைபெற்று வருகின்றன. ஆகவே இது கிராமிய வழிபாட்டு முறையென்றும் அழைக்கப்படுகிறது.

தற்போதுள்ள இவ் ஆலயத்தின் அமைவிடத்தை நோக்கின் கிழக்குத் திசையை நோக்கி பிரதான அம்மன் ஆலயம் அஸ்மந்துள்ளது. அத்தோடு காத்தவராயன், நாகதம்பிரான், சிவன், பிள்ளையார், பத்திரகாளியம்மன், ஐயனார், பஞ்சமி வைரவர், முன்னாள் பூஜைசெய்த பரம்பரை பூசாரிமார்களின் நினைவான சமாதி என்பனவும் சிறுதெய்வங்களாக இங்கு அமைந்துள்ளன.

இவ் ஆலயத்தில் பூசாரி பரம்பரையினராக தகப்பனுக்குப் பின் மகன் என்ற ரீதியில் தெரிவுசெய்யப்பட்டு வருகின்றனர். ஏற்கனவே உள்ள பூசாரி தான் உயிர்வாழ முடியாத வயோதிபக் காலத்தில் அவருடைய மகன்களில் ஒருவருக்கு கோயிலின் பொறுப்பை ஒப்படைப்பார். இதன்போது தனது மகனிடம் அம்மனின் மந்திரம் எழுதிய பத்ததி, பூஜைசெய்யும் முறை, பஞ்சமிக்கு நூல் முடியும் முறை என்பவற்றைக் கூறிவைப்பார். இதன்படி தொடர்ந்து பூஜை இடம்பெறும். பூசாரியானவர் உருத்திராட்சமாலை, பூணூல், கையில் வெள்ளிக் காப்பு என்பவற்றை அணிந்து பூஜை நிகழ்த்துவார். வழமையாக ஒவ்வொரு திங்கட்கிழமையும் அம்மனுக்குப் பூஜை நடைபெறும். விசேட தினங்களான தைப்பொங்கல், சிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு, நவராத்திரி போன்றவற்றில் விசேட பூசைகள் இடம்பெற்று வருகின்றன. அத்தோடு ஒவ்வொரு வருடத்திலும் வரும் ஆவணிமாத பூரணையான திங்கட் கிழமையன்று அம்மனுக்குரிய பூஜைகள், திருவிழாக்கள், காவடியாட்டம், கலை நிகழ்ச்சிகள், வளந்து வைத்தல் என்பன சிறப்பாக இடம்பெறும்.

ஆவணி பூரணை தினத்தன்று திங்கட் கிழமை நடைபெறும் அம்மனுக்குரிய திருவிழாவில் மூன்று வேளையும் அம்மனுக்கு அபிடேகம் இடம்பெறும். இத்திருவிழாவுக்கு முந்தைய வெள்ளி அன்று அம்மனை உழவு இயந்திரத்தில் வைத்தபடி தண்டுவான் கிராமத்தினூடாக அயற்கிராமங்களுக்கு அம்மன் சுற்றிவரப்படும். பெரியோர் இதனை "ஊர் சுற்றுதல்" என அழைப்பர். அம்மன் எழுந்தருளி ஊர் மக்களின் குற்றம் குறைகளை கண்டுகொள்வதற்காக ஊர் சுற்றுதல் இடம்பெறுவதாகவும் கூறப்படுகிறது. இதன்போது ஒலிபெருக்கியூடாக அம்மன் வருவதை ஊர் மக்கள் அறிந்து அம்மனுக்குத் தேவையான பூஜைப்பொருட்களை வழங்கி அடுத்து இடம்பெறும் திங்களன்றைய திருவிழாவைச் சிறப்பிக்க கொடுத்து தவுவர். இரு இரவுகளில் அம்மன் அயற்கிராமங் களிலுள்ள ஆலயங்களில் சென்று தங்கி, திங்கள் அதிகாலை மீண்டும் அம்மன் தனது இருப்பிடத்திற்குவர பந்தம் எடுத்து வளந்து வைத்து பொங்கி அம்மனுக்கு அமுது படைக்கப்படும். மறுநாள் செவ்வாய்கிழமை காலை வைரவருக்கும் அம்மனுக்கும் குளிர்த்திமடைபோட்டு திருவிழாவினை முடிப்பர். ஆகமசார் ஆலயங்களில் இதனை "வைரவர்சாந்தி" என்பர். வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு என்பவற்றை சமர்ப்பித்து வழிபடுதலே இதுவாகும்.

தண்டுவான் கிராமத்திலுள்ள மக்களும், அயற்கிராம மக்களுமாக வருகை தந்து அம்மனின் அருளை பெறுவர். திருவிழா தினத்தன்றுபூசாரியால்உருவந்துஆடுதல்எனும் சடங்கு இடம்பெறும். இது இவ்வூர் மக்களால் "கலையாடுதல்" எனவும் அழைக்கப்படுகிறது. இதன்போது நேர்த்திக்கடன் நிறைவேற்றும் அடியவர்கள் காவடி, பாற்செம்பு எடுப்பர். இந் நேர்த்திக் கடன்கள் இவ் அம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள தொடிசுமோட்டை பிள்ளையார் கோயிலிலிருந்தும், தண்டு வான் புளியங்குளத்துப் பிள்ளையார் ஆலயத்திலிருந்தும் தொடங்கி அம்மனை வந்தடைவர். இத்தினத்தன்று மூலஸ்தான அம்மனுக்க பூஜை செய்யப்பட்டு பின் பஞ்சமி வைரவருக்கு நீத்துக்காய் வெட்டி பஞ்சமியில் இறந்தவர்களின் உறவினருக்கு நூல் முடிந்து மந்திரித்துக் கொடுப்பர். இல்லாது விடில் பஞசமி தினத்தன்று இறந்தவரின் வீட்டில் தொடர்ந்து இறப்பு நடக்குமென்றும் பேய் ஆவியாகி உலாவுமென்றும் தண்டுவான் கிராம

மக்களிடம் நம்பிக்கையுண்டு. இதனாலேயே பஞ்சமி வைரவருக்கு நீத்துக்காய் வெட்டி பஞ்சமியை சாந்தப்படுத்தும் முறை காணப்படுகிறது. இப் பஞ்சமி வைரவருக்கான சிறு மண்டபம் பிரதான அம்மன் ஆலயத்திற்கு தென்கிழக்கு மூலையினை அண்மித்து தனியாக அமைந்துள்ளது. இதனையடுத்தே சமாதியும் அமைந்துள்ளது.

இவ்விடத்திற்கு ஆண்களும் வயது முதிர்ந்த பெண்களும் மட்டுமே செல்ல முடியும். ஆனால் அதன் பூஜைகளை மூலஸ்தான மண்டபத்தில் இருந்தபடியே அனைவரும் கண்டுகொள்ளலாம். பூசாரி உருவந்து ஆடுமிடத்து அதனைப் பார்வையிடும் பக்தர்களில் சிலருக்கு உரு வருவதுமுண்டு. பின் பூஜை செய்யும் புசாரி உருவந்தவருக்கு நெற்றியில் திருநீறு பூசியதும் உரு நின்றுவிடும்.

திருவிழாவின் போது காத்தவராயன் கூத்து, கோவலன் கூத்து, பக்திப் பாடல்கள் நிரம்பிய இசைக் கச்சேரிகள் என்பவற்றில் ஏதாவது ஒரு நிகழ்வு தவறாது இடம்பெறும். இக் கிராமிய கலையம்சங்கள் பாரம்பரிய சம்பிரதாயங்களுடன் ஆரம்பமாகும். இக் கலைகள் அம்மனின் அருளை விளக்குவதாகவே அமையும். தண்டுவான் கிராம மக்களால் தொன்றுதொட்டு பேணி வந்த கலையம்சங்களாக இவை இன்றும் கருதப்படுகின்றன. இந் நிகழ்ச்சிகளைக் காண்பதற்கென்றே பல தூர இடங்களிலிருந்தும் மக்கள் கூடிவந்து அலம்மன் அருளையும் பெற்று வளமுடன் வாழ்வர்.


திருவிழாவின் போது பரியலங்களை அழைத்து பூஜை நிகழும். மறுநாள் பூஜைநிறைவடைந்ததும் பரியலங்களை எலுமிச்சைக் காய் வெட்டி அனுப்பி விடுவார். பூஜை நிறைவடைந்த மறுநாட்காலை மடையுடன் காத்தவராயன், வைரவர் போன்ற சிறுதெய்வங்களுக்கு சாராயம் படைக்கப்படும். முன்னைய காலங்களில் பஞ்சமி வைரவருக்கு பலி கொடுக்க ஆடு, கோழி என்பவற்றை வெட்டி பலியிடும் சடங்கு இடம்பெற்றது. ஆனால் தற்காலங்களில் இச் சடங்குகளுக்குத் தடை ஏற்படுத்தப்பட்டது. அதனால் நேர்த்திக்காக வரும் விலங்குகளின் செவிகளை மட்டுமே வெட்டுவர். பின் இவற்றை ஏலம் கூறி விற்று வரும் பணத்தை ஆலய செலவுகளுக்குப் பயன்படுத்துவதுண்டு. இதற்குப் பதிலாகவே நீத்துக்காயினை குறுக்காக இரு பாதிகளாக வெட்டி அதன் நடுவில் குங்குமம் பூசும் முறை இடம்பெறுகிறது. இம்முறை பலியிட்டதற்கு சமமாக எண்ணப்படுகிறது.

இவ்வாலயத்தில் நெய் விளக்கேற்றும் வைபவமும் இடம்பெறுகிறது. அவரவர் நேர்த்திக்கேற்றவாறு ஒன்பது திங்கள், ஏழு திங்கள், ஐந்து திங்கள் என்ற முறையில் எலுமிச்சைகாய் பாதியாக்கப்பட்டு அதற்குள் நெய்யினை ஊற்றி திரியிட்டு அத் தீபம் எரிந்து முடியும்ட்டும் இருந்து அம்மனிடம் வரங்களை வேண்டி நெய்விளக்கேற்றி நிற்பர்.

தண்டுவானில் பசுமை நிறைந்த வயல்வெளிகள், குளங்கள் என்பவற்றிற்கு அருகில் பாகற்காய்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் அமர்ந்திருந்து கிராமிய வழிபாட்டு முறையிலமைந்த வழிபாட்டு முறைகளினை விரும்பி ஏற்று பதிலாக தண்டுவான் கிராமத்திற்கு குளிர்ச்சியையும் மக்களுக்கு நல்விளைச்சலையும், மனஅமைதியையும், செல்வச்செழிப்பையும் வழங்கி வீரமரத்தினை தலவிருட்சமாகக் கொண்டு அருள்பாலித்து குறையின்றி காத்துவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இம்மர நிழலின் கீழ் புதிதாக நாகதம்பிரான் தோன்றியுள்ளார். தனது இருப்பிடத்தை தானே தேடி வந்து குடியமர்ந்துள்ளார். இதுவும் இவ்வூர் மக்களைக் காக்க அம்மன் செய்த திருவருளே ஆகும்.

**சிவானந்தம் வித்தியா**
**(இளங்கலைமாணி)**
**தண்டுவான்.**

# அடங்காப்பற்றின் இறுதி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியன்



வீரம் செறிந்த மன்னர் பரம்பரையில் தோன்றிய மன்னனே குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியன். கி.பி 1777 இல் பிறந்த இவன் ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிப் பகுதியிலும் பிரித்தானியராட்சியின் முற் பகுதியிலும் வன்னியை ஆட்சி செய்தான். இவனது இராசதானியாக விளங்கிய இடம் பனங்காமம். இலங்கையின் வடக்கே ஆட்சி செய்த யாழ்ப்பாண ஆட்சியாளர்களுக்கோ அல்லது தெற்கே இருந்த அநுராதபுர அரசர்களுக்கோ அடிபணியாது இருந்ததால் இவ் இராட்சியம் அடங்காப்பற்று என்று அழைக்கப்பட்டது. பின்னர் வன்னி எனப் பெயர் பெற்றது. ஒல்லாந்தராட்சியில் அவர்களிற்கு எதிராக பண்டாரவன்னியன் செயற்பட்டதால் பனங்காமத்தில் இருந்த இவனது ஆட்சியதிகாரம் நீக்கப்பட்டது. ஆனாலும் பிரித்தானியராட்சியில் மீளக் கிடைக்கப் பெற்றது. அன்றிலிருந்து பிரித்தானியர்களை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கு சபதம் பூண்டான். கிடைத்த சந்தர்ப்பங்களை தக்கவாறு பயன்படுத்திக் கொண்ட பண்டார வன்னியன் இலக்கை எட்ட முயற்சிகள் பல எடுத்திருந்தானாயினும், பிரித்தானியரின் ஆயுதப் படை பலங்களால் அம்முயற்சி கைகூடவில்லை. எனினும் பண்டாரவன்னியன் பிரித்தானியரிடமிருந்து முல்லைத்தீவையும், கொட்டியாரத்தையும் கைப்பற்றியிருந்தமை மகத்தான வெற்றியாகும். இவ் வெற்றிகளைவிட ஏனைய வரலாறு தொடர்பில் அறிந்து கொள்வதற்கு போதிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. அதேநேரம் யுத்த சூழல்களால் தொல்லியல் ரீதியான சான்றுகள் இழக்கப்பட்டு விட்டது. ஆனாலும் வன்னி வரலாற்றின் புகழ்பெற்ற மன்னன் என்ற வகையிலும் அடங்காப்பற்றின் இறுதி மன்னன் என்ற வகையிலும் இவன் பிரித்தானியரால் கற்சிலைமடுவில் தோற்கடிக்கப்பட்டதால் அவ்விடத்தில் நிறுவப்பட்ட நடுகல்லினால் அவ்விடம் "கற்சிலைமடு" என அழைக்கப்படுவதாலும் இவனைத் தோற்கடித்த பிரித்தானியத் தளபதிக்கு பரிசளிக்கப்பட்ட இடம் "பண்டாரிக்குளம்" என்பதாலும் பண்டாரவன்னியன் வரலாறு வன்னிப் பிரதேசங்களுடன் பிணைக்கப்பட்டிருப்பதால் இவன் வரலாறு உயிரோட்டமுடையதாகவும் பெருமைகளை பறைசாற்றுவதாகவும் காணப்படுகின்றது.

மேலும் போர்த்துக்கேயரின் ஆடசிக் குட்பட்ட பகுதிகளாக கோட்டையும், யாழ்ப்பாணமும் உள்ளடக்கப்பட்டிருந்ததாயினும் வன்னியரசு, யாழ்ப்பாண இராட்சியத்திற்கு உட்பட்டிருந்தது. ஆயினும் வன்னியின் உட்பிரதேசங்கள் சுதந்திர அரசாகவே விளங்கியது. அடுத்து ஆட்சியை கைப்பற்றிய ஒல்லாந்தர்கள் வன்னிக்குள் வெற்றிகரமாக நுழைந்தனர். 1782 இல் வன்னியை கைப்பற்ற ஒல்லாந்தர் நடத்திய போர் பற்றி எழுதும் லூயி என்ற வரலாற்று குறிப்பாளர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "உலகில் பல்வேறு நாடுகளுடன் போர் நடத்தியிருக்கிறார்கள். ஆனால் இப்படி வீரத்துடன் போரிட்டவர்களை உலகில் எங்கும் அவர்கள் காணவில்லை". என்று குறிப்பிட்ட கூற்றானது பண்டாரவன்னியன் நடத்திய ஆட்சியையும் அவர்களுக்கு எதிராக நடத்திய தாக்குதல்களையும் பிரதிபலிப்பதாகவும்

உள்ளது. ஆரம்பத்தில் வன்னியர்களிடமிருந்து சாயவேர், காட்டு மரங்கள், நெல் ஆகியவற்றை ஒல்லாந்தர் திறையாகப் பெற்றனர். எனினும் தமக்கு சவாலாக பனங்காமம் விளங்கியதாலும் தமது நிபந்தனைகளுக்கு கட்டுப்படாமல் பண்டாரவன்னியன் செயற்பட்டதாலும் 1782 இல் தம் படை பலத்தை பிரயோகித்த ஒல்லாந்தர் 1785 இல் தமது நேரடி நிர்வாகத்தின் கீழ் வன்னியைக் கொண்டு வந்தனர். இதனையடுத்தே பண்டாரவன்னியன் வன்னியின் ஆட்சியிலிருந்து நீக்கப்பட்டான்.

1796 இல் இலங்கை பிரித்தானியர்களால் கைப்பற்றப்பட்டதை அடுத்தே மீண்டும் பண்டாரவன்னியனுக்கு மன்னிப்பளித்த பிரித்தானியர் அவனை நுவரகலாவிய மாவட்டத்தின் எல்லையில் அமைந்த பனங்காமத்தின் ஆட்சியாளனாக நியமித்தனர். 1803 இல் பிரித்தானியர் கண்டி இராட்சியத்தைக் கைப்பற்ற படையெடுத்த சந்தர்ப்பத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்திய பண்டாரவன்னியன் திருகோணமலை குடாப் பகுதியில் உள்ள கொட்டியாரத்தின் மீது தன் தாக்குதலை மேற்கொண்டு அதனை தன்வசப்படுத்தினான். கெரில்லா போர்முறையில் தேர்ச்சி பெற்ற பண்டாரவன்னியன் படைகளின் யுத்த தந்திரோபாயங்களை பிரித்தானியப் படைகளால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. தொடர்ந்து 1803 ஆகஸ்ட் 25 இல் முல்லைத்தீவுக் கோட்டை மீதும் தாக்குதல் தொடுத்த பண்டாரவன்னியன் படைகளுக்கு ஈடுகொடுக்க முடியாத லெப்ரினற் டிறிபேர்க்கும் அவனது படைகளும் முல்லைத்தீவுக் கோட்டையை கைவிட்டு யாழ்ப்பாணத்துக்கு தப்பியோடினர். முல்லைத்தீவுக் கோட்டையை கைப்பற்றிய ப்ண்டாரவன்னியன் அதனைத் தனது மைத்துனனான அநுராதபுர திசாவை குமாரசிங்க வன்னியனை அதற்கு பொறுப்பாக நியமித்து கைப்பற்றிய பீரங்கிகள் ஆயுதங்களுடனும் மீண்ட பண்டாரவன்னியன் தற்காலிகமாக கற்சிலைமடுவில் தங்கியிருந்தான்.




முல்லைத்தீவுக் கோட்டையை இழந்த பிரித்தானியர் ஆத்திரம் கொண்டு வன்னி மீது மும்முனைத் தாக்குதலைத் தொடுத்தனர். பண்டார வன்னியனிற்கு எதிராக தொடுக்கப்பட்ட முதலாவது தாக்குதல் முல்லைத்தீவை கைப்பற்றும் நோக்குடன் திருகோணமலையிலிருந்து கப்டன் Edward Madge தலைமையில் 19 ஆவது றெஜிமென்ட் படைப்பிரிவு அனுப்பப்பட்டது. இரண்டாவது தாக்குதல் யாழ்ப்பாணத்திலிருந்து லெப்ரினன் John Jewell தலைமையில் முன்னேறியது. மூன்றாவது படை கப்ரன் Drieberg தலைமையில் மன்னாரிலிருந்து புறப்பட்ட படை பண்டாரவன்னியன் தற்காலிகமாக தங்கியிருந்த கற்சிலைமடுவை சென்றடைந்தது. சற்றும் எதிர்பார்க்காத நேரத்திலேயே கப்ரன் Drieberg இன் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் பண்டாரவன்னியன் இவ்விடத்தில் தோற்கடிக்கப்பட்டான். இச்சம்பவம் 1803 ஒக்டோபர் 31 ஆம் திகதி அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றது. இதனையடுத்து பண்டாரவன்னியனைத் தோற்கடித்த கப்ரன் Drieberg இற்கு "பண்டாரக்குளம்" பரிசாக வழங்கப்பட்டது. இப்போர் நிகழ்ந்து நூறு ஆண்டுகளின் பின் முல்லைத்தீவு அரசாங்க அதிபராகவிருந்த Mr.R.A.G.Festing என்பரால் 1904-1905 காலப் பகுதியில் கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. அதன் வாசகம் வருமாறு

HERE ABOUTS CAPTAIN VON DRIBERG DEFEATED

PANDARA VAWNIYAN,

31st OCTOBER 1803

கல்வெட்டில் VAWNIYAN என்னும் சொல் VAWNIYA என்றே பொறிக்கப்பட்டுள்ளது. (முதலியார் குலசபாநாதன் வளமிகு வன்னிநாடு என்ற ஆய்வுக்கட்டுரையில்)

இப்போரில் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டான் என்றே அறிய முடிகின்றது. அதன் பின் 1809 இல் மீண்டும் பண்டாரவன்னியன் கலகம் விளைவித்தான் எனவும் கண்டி ஆட்சியாளர்களுடன் நட்புறவைக் கொண்டிருந்த பண்டாரவன்னியன் மீண்டும் முல்லைத்தீவுக் கோட்டையையும், வன்னியையும் கைப்பற்றுவேன் என கண்டி திசாவைமாரிடம் கூறியிருந்தான். மற்றொரு திசாவை பண்டாரவன்னியனிடம் முல்லைத்தீவைக் கைப்பற்ற வேண்டும் என்று கேட்டதற்கு பண்டாரவன்னியன் கூறியதாவது "ஒரு முறை நான் முல்லைத்தீவுக் கோட்டைகளை கைப்பற்றிதிரும்பக் கொடுத்துள்ளேன். ஆனால் சில வன்னி முதலிமார்கள் ஆங்கிலேயருக்கு சார்புடையவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் எம்மை சுட்டு அகற்றுவதற்கு ஆங்கிலேயரிடம் அனுமதி கோரியுமுள்ளனர். இதனால் எமது மக்களை எனது பக்கம் திருப்ப வேண்டும். அதன் பின்னர் பிரித்தானியருடன் நட்பாகவிருக்கும் முதலிமாரை வென்று எனது மக்களுடன் சென்று முல்லைத்தீவுக் கோட்டையைக் கைப்பற்றுவேன்". எனக் குறிப்பிட்டதாகவும் பின்னர் 1810 நவம்பர் மீண்டும் பிரித்தானியர் எதிர்பார்த்தது போல் கிழக்கு மூலை தெற்கில் பண்டாரவன்னியன் தாக்குதல் நடத்தினான் எனினும் அதனை வெற்றியாக கருதிக் கொள்ள முடியாது.

இறுதியாக பண்டாரவன்னியன் 1811 இல் வன்னியின் வடக்கெல்லையில் தன் தாக்குதலை ஆரம்பித்திருந்தான். இவ்விடம் உடையாவூர் எனலாம். இங்கு இடம்பெற்ற போரிலே பண்டாரவன்னியன் படுகாயமடைந்து சிகிச்சை பயனின்றி பனங்காமத்தில் உயிரிழந்தான் என வரலாற்றாசிரியர் முல்லைமணி குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அடங்காமண்ணின்வணங்கா முடிமன்னனாக விளங்கிய பண்டாரவன்னியன் தன் இறுதி மூச்சு உள்ளவரை அன்னிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக போரிட்டான். வாள் கொடியை கையிலேந்திய இவ் வீரனின் வரலாறு ஒல்லாந்தர், பிரித்தானியர் காலத்து அறிக்கைகளிலிருந்தும் பரம்பரை வழியாக பேணிப் போற்றிய பண்பாட்டு மரபுகளிலிருந்தும் இவன் வரலாறு மீட்கப்படுகிறது. ஆண்டுதோறும் இம்மன்னன் நினைவாக முல்லைத்தீவு கைப்பற்றப்பட்ட தினத்தை அதாவது ஒக்டோபர் 25 ஆம் திகதி பண்டாரவன்னியன் விழாவாக வன்னிப் பிரதேசங்களில் நினைவுகூரப்படுகின்றது. இவனது நினைவாக இப்பிரதேசத்தில் பண்டாரவன்னி கிராம சேவையாளர் பிரிவும், பண்டாரவன்னியன் விளையாட்டுக்கழகமும் காணப்படுவது வரலாற்றிற்கு பெருமை சேர்ப்பதாயுள்ளது. மேலும் வவுனியா மாவட்ட செயலகத்தில் இம்மன்னனின் சிலை நிறுவப்பட்டுள்ளது. அவ்வாறே தற்போது முல்லைத்தீவிலும்



பண்டாரவன்னியன் உருவச்சிலை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

த. சுபாஜினி (ஆசிரியை)
மு / ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

# பெருகிவரும் சிறுநீரகச் செயலிழப்பும் கட்டுப்பாடற்ற பரசிற்றமோல் குளிகையின் பாவனையும்

இலங்கையில் சிறுநீரக செயலிழப்பு நோய்கள் வடமத்திய மாகாணத்தில் முதலில் அவதானிக்கப்பட்டது. இது 1991 ஆம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கும் இரு மடங்காக அதிகரித்தது.

மேலும் அது பொலனறுவை, மொனராகலை, பதுளை போன்ற மாவட்டங்களுக்கும் பரவியது. தற்போது சிறுநீரகச் செயலிழப்பு வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் அதிகரித்து காணப்படுகின்றது. பொதுவாக வயது முதிர்ந்தவர்களில் ஏற்படக் கூடிய இந்த நோய் இன்று சிறு குழந்தைகளிலும், 20 வயதினரிலும், 30 வயதினரிலும், 40 வயதினரிலும் அதிகமாகக் காணப்படுகின்றது.

இந்த நோய்க்கு ஏதுவான அடிப்படைக் காரணங்களாக விவசாய இரசாயன நச்சுக்கள் உணவுச் சங்கிலி வழியேயும் நீரின் ஊடாகவும் உடலில் சென்று தாக்கம் செலுத்தி இருக்கலாம்.

இது ஒரு பொது வெளிப்படையாக அமைந்தாலும் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ள சகல மக்களும் இந்த நோயால் பாதிக்கப்படவில்லை. ஆனால் எல்லா வயதினரும் பாதிக்கப்பட்டு உள்ளனர். இந்த நிலையில் எல்லா வயதினரும் கட்டுப்பாடின்றி பயன்படுத்தும் மருந்து எது என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு கிடைக்கும் விடையாக எல்லாக் கடைகளிலும் விற்கப்படும் மருந்து, மருத்துவரின் ஆலோசனை இன்றி பயன்படுத்தப்படும் மருந்து, வைத்திய சாலைகளில் அதிகமாக வழங்கப்படும் மருந்து என்ற வகையில் பரசிற்றமோல் அல்லது பனடோலை நோக்க வேண்டி உள்ளது.

பரசிற்றமோல் சிறுநீரக நோயை ஏற்படுத்துமா என்ற கேள்விக்கு ஆம் என்ற பதில் பலருக்கும் அதிர்ச்சியாக அமையலாம். ஆனால் அது உண்மை.

சாதாரணமாக காய்ச்சலின் போது உடல் வெப்பநிலையை தணிக்க 10 - 20 MY / ml செறிவில் பரசிற்றமோல் பயன்படும். ஆனால் இந்தச் செறிவு 300 Mg / ml ஆகக் கூடின் 50 வீத சிறுநீரகக் கலங்கள் இறந்துவிடும்.

மேலும் பரசிற்றமோலின் அனுசேபத்துக்குத் தேவையான நொதியங்கள், விவசாய நச்சுப் பொருள் பாவனை உள்ள இடத்தில் செயலிழக்கும் சாத்தியம் அதிகம். இந்த நிலையில் பரசிற்றமோல், சிறுநீரகத்தை பாதிக்கும் தன்மை அதிகம். மேலும் பரசிற்றமோலின் இடைவிளைவாக உருவாகும் Phenacetin கடினமான சிறுநீரக நஞ்சுத்தன்மை உடையது. இதனைப் பல நாடுகள் தடை செய்து உள்ளன.

எனவே பரசிற்றமோல் பாவனையை நாம் மீள் பரிசீலனை செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது. குறிப்பாக சிறுநீரக செயலிழப்பு அதிகம் நிகழ்கின்ற இடங்களில் பரசிற்றமோல் பாவனையை கட்டுப்படுத்துதல் அவசியம். நாம் வைத்தியரின் ஆலோசனை இல்லாமல் பரசிற்றமோல் உபயோகித்தலைத் தவிர்த்தல் வேண்டும்.

**சி. யமுனாநந்தா**
மருத்துவர்

# ஆலய வழிபாடு : ஓர் உளவியல் நோக்கு

"என் அன்பு உருக்கி இறைவனை ஏந்துமின் முன் அன்பு உருக்கி முதல்வனை நாடுமின் பின் அன்பு உருக்கி பெருந்தகை நந்தியும் தன் அன்பு எனக்கே தலை நின்ற வாறே" "திருமந்திரம்"

மனிதன் மனிதனாக வாழ்வதற்காக அவனை நெறிப்படுத்துவதற்காக மனிதனால் அமைக்கப் பெற்ற ஒழுக்க சீலங்களே "மதங்களும் மத வழிபாட்டுத்தலங்களும்" இதை எந்த புத்திஜீவிகளும் மறுப்பதற்கில்லை. இப்படிப்பட்ட மதங்களிலே மிகவும் தொன்மை வாய்ந்ததாகவும் கீழைத்தேசத்தில் வாழ்கின்ற அநேகமான மக்களால் வழிபடப்பட்டு வருகின்றதுமாகிய இந்து மதத்தின் மதவழிபாட்டுத்தலங்களாக இருக்கின்ற ஆலயங்கள் எவ்வளவு தூரம் மக்களை ஆலய வழிபாட்டுக்காக இழுத்துக்கொள்கின்றது என்பதை உளவியல் ரீதியான கண்ணோட்டத்தில் இக்கட்டுரையை ஆராய்ந்து வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மனம் ஒரு குரங்கு எனும் அடைமொழி சுட்டுவது குரங்கு எவ்விதம் ஓர் இடத்தில் தரித்து இருக்காது இரு பொருளை மட்டும் விரும்பி உண்ணாது மரத்துக்கு மரம் இடத்திற்கு இடம் தாவித்திரியுமோ அதே போல் மனித மனங்களும் ஒரு நிலைப்பட்டு இருக்காமல் அது வாழ்க்கை என்ற வட்டத்தில் இன்ப துன்பங்களுக்கு வசப்பட்டு கோபம் விரக்தி சந்தோசம் எரிச்சல் பொறாமை அன்பு பாசம் கவலை போன்ற எல்லாவற்றையும் தனக்குள்ளே வைத்துக்கொண்டு குரங்கைப் போல தாவித்திரிகின்றன எனவே இவற்றை ஒரு நிலைப்படுத்தி மனதுக்கு அமைதியை கொடுப்பதில் இந்த ஆலய வழிபாடு ஒரு முக்கிய மன அமைதி பொருளாக இருக்கின்றது என்பதே உளவியலாளர்களின் கருத்து

சாம்பிராணிப் புகையில் ஒரு வகையான மாங்கல்ய குணம் உள்ளது அதாவது மனங்களை பரவசப்படுத்துகின்ற உணர்வு ஆலயங்களிலே கட்டப்பட்டிருக்கின்ற மங்கலான மின்குமிழ் வெளிச்சமும் இந்த சாம்பிராணிப்புகையும் மற்றும் தூப தீபங்களின் தன்மையும் எமது ஐம்புலன்களூடாக சென்று எமது ஐம்புலங்களுடடாக சென்று எமது மனதைப் பரவசப்படுத்தும் அல்லது இறைவன்பால் சிந்திக்க வைக்கும் இயல்புடையது

இந்த நேரத்தில் தான் எல்லோர் உள்ளங்களிலும் புரிந்துணர்வு ஏற்பட்டு இறைவனைப்பற்றி சிந்திக்கச் செய்கின்றது ஆண்டவன் அருளால் எமது மனதுக்குச் சந்தோசம் நிம்மதி கிடைத்து விட்டது என்று கூறுகின்றோம் இங்கு நீங்களே ஒன்றை உணர்வீர்கள் பூசை இல்லாத நேரங்களில் எமக்கு இவ்வாறான ஒரு மனநிலை ஏற்படுவது இல்லை குளிர்மை வெண்மை என்றாலே மக்களின் மனங்கள் நிறைந்து விடும். அத்தோடு மரக்கறிச்சாப்பாடு மனதுக்கு மகிழ்ச்சியைத்தரும். அதுவும் ஆலயங்களில் பூஜை முடிந்ததும் அங்கு பிரசாதங்களாக கொடுக்கப்படுகின்ற சந்தனம் குங்குமம் மஞ்சள் என்பவற்றை நாங்கள் நெற்றியிலே பூசுகின்றோம் இங்கு ஓர் உண்மை இருக்கின்றது என்னவெனில் மனிதனின் நரம்பு மண்டலங்கள் எல்லாம் நெற்றியிலே குவிவதனால் நெற்றியில் சந்தனத்தைப் பூசுகின்ற போது அவ்விடம் குளிர்வடைய ஏனைய உடம்பின் எல்லாப் பகுதிகளும் குளிர்வடைகின்றது. அப்போது எம் உள்ளத்தில் மனிதம் மறைக்கப்பட்டு தெய்வீகம் குடிகொள்கிறது.

ஆண்டவன்மீது கொண்டுள்ள அளவு கடந்த நம்பிக்கை பிறவிப்பேறான சரீரத்தின் மீது வைத்துள்ள அளவுகடந்த பற்று எம்மக்களை என்னவெல்லாம் செய்ய வைக்கின்றது தமது

எண்ணங்கள் நோக்கங்கள் வேண்டுதல்கள் குறிக்கோள்கள் போன்றவற்றை அடைவதற்காக இறைவனிடம் கோரிக்கைகளை வைத்து தமது உடலை வருத்தி நேர்த்திக்கடன் செய்கின்றார்கள் குறிப்பாக விரதம் இருந்தல் தீ மிதித்தல் கற்பூரச்சட்டி ஏந்துதல் அலகு குத்தி காவடியெடுத்தல் அங்கப்பிரதட்சணம் செய்தல் போன்ற நேர்த்திகளைச் செய்து உடலைவருத்தி ஆண்டவனிடம்மன்றாடினால் தமது வேதனைகளைக் கண்ணுற்றாவது இறைவன் நிச்சயம் அருள் புரிவான் நிச்சயம் அருள் கிடைக்கும் என்கின்ற மன எண்ணம் அடியவர்களின் நனவிலி மனங்களிலே படிந்திருக்கின்றது.

இறைவனின் உறைவிடமான ஆலயம் சென்று இறைவனின் திருவடிகளை தினமும் மனதார துதிப்பதன் ஊடாக எமக்கு தனு, கரண, புவன போகங்களும் வந்த சேரும் என்கின்றனர் சமயப்பெரியார்கள் இந்துக்களும் இதனையே நம்புகின்றனர். இதனையே ஔவைப்பாட்டியார் கூறும்போது ஓங்காரமூர்த்தியாகவும் பேரறிவே உருவாகவும் விளங்குகின்ற யானைமுகக் கடவுளாம் விநாயகப்பெருமானின் தாமரை போன்ற திருவடிகளை திரிகரணத்துடன் தினமும் வணங்கி துதிப்போர்க்கு "வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள் நோக்குண்டாம்" என்று உறுதி செய்கின்றார்.

நாம் தொடர்ந்து ஆலயம் செல்கின்ற போது ஆலயச்சூழல் ஆலய அமைப்பு விக்கிரங்களின் தோற்றம் ஆலயத்தில் இருந்து வரும் வாசனைப்பூக்கள் பூமாலைகள் திருநீறு சந்தனம்குங்குமம்சாம்பிராணி பன்னீர் போன்ற வற்றின் ஊடாகவும் ஆலயத்தில் தினமும் நடாத்தப்படும் ஆன்மீகச் செற்பொழிவும் பிரசங்கங்கள் ஊடாகவும் எமது மனம் தமக்கு ஓர் ஆன்மீகப்பலன் கிடைத்துவிட்டதாக உணர் கின்றது இவ்வாறான ஆன்ம பலத்திலிருந்து அபரீதமான சக்தி உருவாகின்றது என்கின்றனர் உளவியலாளர்கள்

மக்களாகிய எமக்கு ஏற்படுகின்ற உடலியற் காயங்களையும், உளவியல் காயங்களையும் இறைவனின் சந்நிதானம் சென்று இறைவனின் பாதங்களில் இறக்கி வைத்தால் தான் மனம் நின்மதி அடையும் ஏதோ ஒருவகையான திருப்தி கிடைக்கும் இறைவன் நிச்சயம் எமது மன்றாட்டங்களை தீர்த்து வைப் பான் என்கின்ற மன நிலையே எம்மை ஆலயத் திற்கு அழைத்துச் செல்கிறது என்றால் மிகையாகாது இந்தச்சந்தர்ப்பத்தில் தியானம் என்கின்ற யோகநெறி பற்றி நோக்குவது பொருத்தப்பாடுடையது தியானம் இருப்பதன் மூலம் மனஇறுக்கம் மனக்கஸ்டம் மனப்பாரம் மனச்சஞ்சலம் என்பன தூக்கி வீசப்பட்டு மக்கள் மனங்களின் அச்ச நிலையைப் போக்கி தன்னம்பிக்கையை வளர்ப்பதோடு நினைவாற்றலையும் வளர்த்துச் செல்கின்றது.

நம் வாழ்கையில் எதிலும் திருப்தி கொள்ளாது இருப்பவர்கள் ஆனால் தொடர் தியானத்தின் மூலம் புதுப்பொலிவும், புத்தூ க்கமும் ஏற்படுவதோடு ஆன்ம திருப்தியும் மனதளவிலாவது கிட்டும் என்பதை மனதில் நிலைநாட்டி வாழ்கின்ற மக்கள் தமது தியானத்திற்கு உகந்த அமைதியான இடமாக ஆலயங்களையே தேர்ந்தெடுக்கின்றனர். இவர்களில் சிலர் இறைவனின் அருளால் தான் தமக்கு மன நின்மதி நிகழ்கின்றது என்று எண்ணுகின்ற போதும் சிலர் அமைதியான சூழல் அதனால் தான் தாம் ஆலயம் நாடிவருகின்றோம் என்றும் கருதுகின்றனர். இங்கு ஒரு விடயத்தை நாம் நோக்க வேண்டும்

தியானம் செய்வதற்கு குழப்பங்கள் இல்லாத அமைதியான இடம் வேண்டும். அது வீடுகளில் கிடைக்காது வீட்டில் தியானம் இருக்கின்ற போது புறச்சூழல் இன்ப துன்பங்களின் தொல்லைகள் என்பன மனதை ஒருநிலைப்படுத்தி தியானம் இருப்பதற்கு சில வேளைகளில் இடம்தராது இந்தச்சூழ்நிலையில் மனம் அமைதியாகவும் நறுமணங்களின் வாசனையுடனும் தியானம் இருப்பதற்கு

ஆலயச்சூழல் மனதுக்கு நிறைவைத் தருகின்றது என்பது தான் வெளிப்படை உண்மையாக இருக்கின்றது

உருவச்சிலைகள் அமைத்து வழிபடுகின்ற தன்மை மனதை ஒருநிலைப்படுத்தவும் மக்கள் ஆலய வழிபாட்டில் விருப்புடன் ஈடுபடவும் பெரிதும் உதவின. இங்கு உருவச் சிலைகள் அமைக்காது மனக்கண் மூலம் வழிபடுகின்ற வழிபாட்டு முறை இருந்திருந்தால் யாருமே ஆலயம் செல்ல மாட்டார்கள் சிறந்த முறையில் மனதை ஒருநிலைப்படுத்தி இறைவனை வழிபடுவதற்கு விக்கிரக அமைப்பு முறை பெரிதும் உதவுகின்றன இதன் காரணமாவே தான் ஆலயங்கள் அமைத்து விக்கிரகங்களை பிரதிஸ்டை செய்தார்கள். இங்கு மிகப்பெரிய உளவியல் பின்புலம் காட்டப்பட்டிருப்பது யாவரும் அறிந்ததே.

மேலும் வறுமை போர் என்பன எம்மைத் துரத்தி வரும் போது நாம் இறைவனைத் தேடி ஓடுகிறோம். இறைவன் எங்களைப் பாதுகாக்கின்றான் என்று எங்கள் மனங்களை நாமே திருப்திபடுத்தி கொள்கின்றோம் "படைத்தவன் படி அளப்பான்" என்று கூறி இடையிடையே வியாக்கியானங்களையும் முன்வைக்கின்றோம். ஆக மொத்தத்தில் எங்களுடைய உள்ளங்களில் நம்பிக்கையே ஆலய வழிபாடுகளுக்கு முக்கிய காரணம் என்பதையும் மக்கள் ஆலயம் நோக்கி படையெடுக்க முக்கிய கருவி என்பதையும் யாருமே மறுப்பதற்கில்லை.

**எஸ். பி. சுபாகரன்**
மாவட்ட கருத்திட்ட முகாமையாளர்,
திவிநெகும திணைக்களம்,
மாவட்டச் செயலகம்,
முல்லைத்தீவு

# தற்காலத்தில் இந்துசமயமும் ஆலயங்களின் அறப்பணியும்

றப்பணி என்பது பற்றியும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். வேறு மதங்களை கொச்சைப்படுத்துவதோ அல்லது யாரையும் விமர்சிப்பதோ இக்கட்டுரையின் நோக்கம் அல்ல. நாளாந்த கடமைகளில் எதிர்கொள்ளும் சிக்கல்களை வெளிப்படுத்தி ஆத்மீக சிந்தனையினை மேம்படுத்துவதே நோக்கமாகும். இதற்காக இந்துமத நூல்களை உசாத்துணை காட்ட முற்படவுமில்லை எனது அனுபவத்தில் மனதில் தோன்றிய எண்ணங்களின் பகிர்வாகவே அமைகிறது.

**இந்துசமயத்தின் தோற்றமும் செயற் பாடுகளும்**

இந்துமதத்திற்கும் தமிழ்மொழிக்கும் தோற்றம் என்பது தொன்மையானதாகும். தனக்கென தொன்மையான தனித்துவத்தையும் அடையாளங்களையும் தொல்லியல் வரலாற்றினையும்கலை,கலாசாரவிழுமியங்கள் மற்றும் ஒழுக்கநெறிகளையும் கொண்ட மதமாக விளங்குகிறது என்பது வெளிப்படை உண்மையாகும். அன்பையும், அறத்தையும் ஆணிவேராகக் கொண்டு கிளைபரப்பி நிழல் தருகின்ற மதமே இந்துமதம். நிழலிலே இளைப்பாறி நன்மையடைந்தவர்கள் ஏராளம். முதுமைக்காலங்களில், நோய்வாய்ப்பட்ட நேரங்களில் வறுமையுற்ற போது ஆலயங்களே அரவணைத்துக் கொண்டு மனிததர்மத்தை வெளிப்படுத்திக் கொண்டன. அந்தவகையில் இந்துமதமாகவே இருந்து வந்தது என்பது வரலாற்று உண்மையாகும்.

**அன்பையும் அறத்தையும அடியொற்றி யவையே ஆலயங்கள்**

அன்பேசிவம் என்ற உண்மைத் தத்துவத்தை ஆலயங்களில் காணமுடிகிறதா என்பது சிந்திக்க தக்கதாகும். மனிதத்தில் மட்டுமன்றி உயிர்களிடத்திலும் இது பொருத்தமானதாகும். ஆனால் இன்றைய நிலையில் மனிதர்களிடையே அன்புடைமை அருகிச் செல்வதை அவதானிக்க முடிகிறது. ஆலய செயற்பாடுகளில் புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, மனிதாபிமானம், என்பன அரிதாகவே உள்ளன. கருத்து ஒற்றுமையின் மையால் நிர்வாகிகள், ஆச்சாரியர்கள், மற்றும் பக்தர்களிடையே கருத்து முரண்பாடுகள் அதிகரிப்பதும் இதனால் நீதிமன்றம் வரை இறைவனை அழைத்துச்செல்வது முறையாஎனஎண்ணத்தூண்டுவதாக உள்ளது.

**ஆலயங்களை யார் பரிபாலனை செய்வது**

இயற்கைத்தத்துவத்தில் பஞ்சபூதக் கலவையின் வெளிப்பாடாக அமையும் மாயையினால் வடிவமைக்கும் உடலைக் கொண்ட மனிதனினால் ஆலயங்கள் பரிபாலனம் செய்யப்படுகின்றன. மனிதன் உயரிய பிறவியாதலால் உண்மைத்தன்மை கொண்டு இறைவனை வழிபட்டு தன்னிடமுள்ள ஆணவம், கன்மம், மாயை போன்ற மலங்களை நீக்க ஆலயத்தை உருவாக்கி வழிபட்டு பரிபாலித்து வந்தான் என்பதே யாவரும் அறிந்த வரலாறு.

இன்றைய நிலையில் ஆத்மீக சிந்தனை கொண்ட உயரிய ஒழுக்க விழுமியங்களை பின்பற்றுகின்ற மனிதர்கள் ஆலய பரிபாலனத்தில் அருகியே காணப்படுகின்றனர். நற்பண்புகளோடு ஆலய பரிபாலனத்தில் பணி செய்கின்ற மனிதர்களை தேவையற்ற முறையில் அவதூறுகளை ஏற்படுத்தி ஆலய பரிபாலனத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற நிலையினை எம்மால் அவதானிக்க முடிகிறது. யாவருக்கும் யாவற்றுக்கும் முதல்வன் இறைவனே என்ற சிந்தனையும் இறைவன் சந்நிதியில் யாவரும் சமம் என்ற சிந்தனையும் கொண்டவர்களால் மட்டுமே உரிய முறையில் ஆலயத்தினை பரிபாலனம் செய்ய முடியும். மேலதிக விபரங்கள் தேவையாயின் ஆலய நிர்வாக வழிகாட்டி நூலைப் பார்க்க முடியும்.

**சமூக பெறுமானம் அல்லது மதிப்பினை ஆலயத்தொண்டு பெற்றுத்தரும்**

ஆலய சரியை கிரியை தொண்டுகள் சமூகப் பெறுமானத்திற்காகவோ அல்லது அந்தஸ்துக்காகவோ ஆற்றப்படுவதில்லை. எங்களிடம் ஆத்ம சிந்தனை மன ஒடுக்கம், இறைசிந்தனை என்பவற்றிற்காகவே ஆற்றப்படுகின்றன. ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் மற்றும் போர் சூழலில் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து மீண்டும் தங்கள் பூர்வீக இடங்களில் வசிப்பவர்கள் துன்ப துயரங்களில் மக்களின் ஆன்மீக சிந்தனைக்காக ஆலயங்களை கட்டிக்காத்து பூசை வழிபாடுகளை மேற்கொண்டவர்கள் மீது அவதூறுகளை ஏற்படுத்துவது தவறானது ஆகும். பணபலம் ஆத்மீகத்தைப் பெற்றுத்தருவதில்லை என்ற எண்ணம் உண்மையான சமூகப் பெறுமானம் ஆகும்.

**கிராமிய தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்**

எதுவித ஆகம விதியும் இன்றி மக்களால் உருவாக்கப்பட்டு பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்படும். அம்மன், ஐய்யனார், வைரவர், முனியப்பர், நாகதம்பிரான் மதுரைவீரன் போன்ற கிராமிய தெய்வங்கள் இலங்கையில் பல கிராமங்களிலும் காணப்படுகின்றன. இவை ஆகம முறையில் அமையாத பூசை வழிபாட்டு முறைகளை மேற்கொண்டு வருகின்றனர். பொங்கல், மடை, கட்டுச்சொல்லல் போன்ற வழிபாட்டு முறை தொழில் முறைக்கேற்ப உருவாக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கிராமிய வழிபாட்டை ஆகம முறைக்கு உட்படுத்துதல்**

நகராக்கம் அபிவிருத்தி போன்றவற்றால் கிராமங்கள் நகரங்கள் ஆக்கப்படும் போது கிராமிய தெய்வங்களை ஆகமமுறையுள்ள ஆலயங்களாக அமைத்து வழிபடுகின்றனர். இதனால் மரபு ரீதியான வழிபாட்டு முறைகள் மற்றும் பூசைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பூசாரி முதலான சாதாரண பொதுமக்களினால் பூஜை வழிபாடுகளை மேற்கொள்ள முடியாத நிலை உருவாகி வருவதை அவதானிக்க முடிகிறது.

எமது பிரதேசங்களை பொறுத்தவரை பிராமணர் சைவக் குருமார் பூசாரி பரம்பரையினர் என மூன்று தரப்பினரால் ஆலயப்பூசைகள் நிகழ்த்தப்படுகின்றன. ஆகம முறைப்படி ஆலயங்கள் அமையும்போது பிராமணர்கள் பூசை செய்யவேண்டிய நிலை உருவாகுவதால் பிராமணர்களை பூசைக்கு அமர்த்த முடியாத நிலை ஏற்படுவதால் உரிய முறையில் கிரியை வழிபாடுகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது. பிராமணர்கள் பிறப்பியல் அடிப்படையில் அமைவதால் அவர்களின் எண்ணிக்கை ஆலயங்களின் எண்ணிக்கையைவிட குறைவாக அமைவதாலும் அவர்கள் வருமானம் கூடிய ஆலயங்களில் பூசைக்காக அமர்த்தப்படுவதாலும் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட ஆலயங்களில் பூசைகளில் ஈடுபடுவதாலும் உரிய நேரத்தில் உரிய முறையில் பூசைகளை நிகழ்த்த முடியாத நிலை ஏற்படுகின்றது.

**ஆலயங்களில் உரிய முறையில் அறப்பணி இடம்பெறுகின்றதா**

அறம் வளர்க்கின்ற இடங்களாக ஆலயங்கள் இருந்து வருகின்றன. அன்னதானம் மற்றும் முதியோர், துறவிகள், தாய் தந்தை இழந்தோரை பராமரிக்கின்ற இடமாகும். மடங்கள் ஆதீனங்கள் அன்னதான சபைகள் அறங்காவற் சபைகள் இதனை உரிய முறையில் வழி நடாத்தி வருகின்றன. ஆனால் இன்றைய நிலையில் குறிப்பிட்ட சில ஆலயங்களை தவிர ஏனையவற்றில் இதனைக் காண்பது அரிதாகவே உள்ளது. "பன்றிக்குட்டிக்கு பால் கொடுத்து பரமசிவன் குட்டிகளுக்கு பசி போக்கினார்" அதே போல் அன்னதான சபைகள் உரிய முறையில் உரியவர்களை இனங்கண்டு சேவையாற்றினால் அது அர்ப்பணிப்பு மிக்கதாக அமையும். அதற்கு

மாறாக உறவினர்கள் அனைவரும் ஒன்றுகூடி உணவு சமைத்து அருந்திவிட்டு மீதியை தங்கள் வீடுகளுக்கு பிரித்தெடுத்துச் செல்வது தானமாக அமையாது. ஆலயங்களில் சமைத்து உண்டதாகவே கூறிக்கொள்ள முடியும். வாழை இலையில் நீர் தெளித்து அன்னமிட்டு உண்ணும் பாரம்பரியத்தினை இயன்றவரை கடைப்பிடிப்பது அன்னத்திற்கு மதிப்பளிப்பதாக அமையும். அத்தோடு ஏழைகளின் கல்வி பொருளாதார விருத்திக்காக எத்தனை ஆலயங்கள் பங்காற்றுகின்றன என்பதும் சிந்திக்கத்தக்கதாகும்.

**மதமாற்றம் என்பது உண்மையில் மனமாற்றமே**

இன்று பலராலும் பேசப்பட்டு வருகின்ற மதமாற்றம் பற்றியதாகும். இந்த விடயம் இன்று நேற்றல்ல பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இடம்பெற்று வரும் ஒன்றாகும். பல்லவர் காலத்தில் திருநாவுக்கரசர் சமண மதத்திற்கு மாற்றப்பட்டதும் பின்னர் தவறை உணர்ந்த அவர் தனது மதத்திற்கு மீண்டும் மாறியமையும் வரலாறு. இச்சந்தர்ப்பத்தில் கொடுமை பல செய்தன நானறியேன் எனப்பாடியதும் அறிவோம். சம்பந்தர் அதிதீவிர செயற்பாட்டினால் சமண மதத்திற்கு மாறிய பாண்டிய மன்னர் முதல் பலரை மீண்டும் சைவத்திற்கு மாற்றினார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பிரித்தானியர்களில் தீவிர மதமாற்றத்திற்கு எதிராக போரிட்டு வெற்றி கண்டு சைவத்தையும் தமிழையும் பாதுகாத்தார். இவற்றின் ஊடாக மதமாற்றம் என்ற விடயம் புதிததல்ல. என்பது எனது கருத்து.

மதமாற்றம் என்பது வெறுமனே மனமாற்றம் மட்டுமே. ஒருசில அற்ப சலுகைகளுக்காக மனமாறுவதாகவே அமைகின்றது. பிறப்பால் பூர்வீகத்தால் எந்த மதசிந்தனை உடையவனாக இருக்கின்றானோ அவனை மாற்றவே முடியாது. மதம் மாறுபவர் தாயையோ தலைப்பெயரையோ தன் பெயரையோ மாற்றுவது கிடையாது. வெறுமனே மனதால் மட்டுமே மாற்றப்படுகின்றான் என்பதே உண்மையாகும்.

**இந்து மதத்தின் இறுக்கமான கட்டுப்பாடுகள்**

இந்து மதத்தில் உள்ள இறுக்கமான கட்டுப்பாடுகள் எவரும் முழுமையாக அறிந்து கொள்வதில்லை. மத ஒழுக்க விழுமியங்களை பின்பற்றாதவர்கள் மதத்திற்கு வெளியே நின்றுகொண்டு கட்டுப்பாடற்றது எமது மதமென கூறுவது வேதனைக்குரியது. சமய தீட்சை பெறாத எவருமே சைவ சமயியாக கருதமுடியாது. தீட்சை பெற்ற ஒருவர் பின்பற்றும் ஒழுங்குகள் மிகக்கடினமானவை என்பதனாலேயே எவரும் தீட்சை பெற முன்வருவதில்லை. இதன்மூலம் இந்துமதம் மிகுந்த கட்டுப்பாடு உடையது என்பதை கூறமுடியும்.

**உரிய முறையின் விரத அனுஸ்டானங்கள் மேற்கொள்ளப்படுகின்றனவா?**

விரதம் எனபதற்கு திட்டவட்டமான விளக்கம் எதுவும் இருக்கவில்லை முதல் முதலாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஓர் வரையறையினை கொடுத்தார். மனம் பொறிவழி செல்லாது உணவை சுருக்கியேனும் அல்லது விடுத்தேனும் மனம், பொறி, மெய் ஆகியவற்றினால் மனதை ஒருநிலைப்படுத்தி இறைசிந்தனையோடு இருத்தல் என்பதே அவரின் விரதம் குறித்த கருத்தின் சாராம்சம்.

எமது மனம் பொறிச்சென்று தீயவற்றை பார்த்து, கேட்டு, உணர்ந்து, மணந்து தீவையில் செல்லக் கூடியது ஆகவே விரத காலங்களில் புலனடக்கம் அவசியமாகின்றது வீட்டில் ஒருவர் விரதம் அனுட்டித்தால் அனைவரும் ஆசாரமாக நடந்துகொள்வதே நல்லதாகும். மனைவி விரதம் அனுட்டிக்க கணவன் புலால் மாமிசத்தை விரும்பி உண்பவராக இருந்தால் மனைவியின் விரதம் பாதிப்படைகின்றது என்பது உண்மையாகும். கணவனின் பணியினை கண்ணென என்ணி பணிபுரியும் பெண்கள் விரத காலங்களில் மீனை வெட்டி சமைத்து விட்டு பின் தனது விரதத்திற்கான உணவினை சமைப்பதை நான் கண்டிருக்கிறேன்

மீனை வெட்டி கழுவிய கைக்கு சவர்க்காரம் இட்டு கழுவிய பின்னர் அந்தக்கையில் மணம் உண்டா என அப்பெண் மணந்து பார்க்கும் போதும் கூட்டப்பட்டு கொதிக்கும் குழம்பின் சுவை சரியா எனப்பார்க்கும் போதும் விரதத்தின் நோக்கம் கெட்டுவிடுகின்றது.

ஒவ்வெரு வரதங்களும் அனுட்டிக் கப்படவேண்டிய முறை அதனை எவ்வாறு கண்ணியமாக மேற்கொள்வது என்பதை அறிந்து கொண்டே அவ்விரதத்தினை அனுட்டிக்கவேண்டும் இதை விடுத்து விளையாட்டாக அல்லது மற்றவர் செய்கிறார் நான் செய்தால் என்ன என்ற சிந்தனையில் விரதம் அனுட்டிக்க முடியாது. வரத பண்டிதர் சிவராத்திரி, பிள்ளையார் கதை ஏகாதசி போன்ற விரதங்களை பற்றி தெளிவாக குறிப்பிட்டுள்ளார் அவற்றை கற்று தெளிந்து உரிய முறையில் விரதம் மேற்கொண்டால் அவற்றின் உரிய பயனை பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே இந்துக்களாகிய நாங்கள் எமது மதத்தில் தொன்மை, சிறப்பு, வளர்ச்சி, தத்துவம் என்பவற்றை உரிய முறையில் அறிந்து அதன்படி வாழ்ந்து இம்மண்ணில் நல்லவண்ணம் வாழ வேண்டும் என வேண்டுகின்றேன்.

**சி. மோகனராசா**
இந்து கலாசார உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான்

# சட்ட ஆவணங்களும் பெற்றுக் கொள்ளும் வழிகளும்

றப்பு, விவாகம், இறப்பு ஆகிய மூன்று நிகழ்வுகளும் பதிவு செய்யப்பட வேண்டியமை கட்டாயமான ஒன்றாகும். எம் வாழ்வியல் தேவைகளுடன் இப்பதிவுகளும் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன.

**பிறப்பு**

அந்த வகையில் ஒரு குழந்தை இவ்வுலகில் பிறந்திருப்பதை உத்தியோக பூர்வமாக அறிவிப்பதே பிறப்புப் பதிவாகும். பிறப்புப் பதிவின் மூலம் ஒரு குழந்தை பிறப்புச் சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக் கொள்வது சாத்தியமாகிறது. இதன் மூலம் அக் குழந்தைக்கு தனக்கென ஒரு பெயரைப் பெறும் உரிமை, ஒரு தேசிய இனத்தை வகிக்கும் உரிமை, தன்னால் இயன்ற வரை தன் பெற்றோரை அறிந்து அவர்களின் பராமரிப்பைப் பெறும் உரிமை என்பன கிடைக்கப் பெறுகின்றன.

பாடசாலையில் அனுமதி பெறுதல், தேசிய அடையாள அட்டை பெறுதல், பரீட்சை ஒன்றுக்குத் தோற்றுதல், வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளுதல், கடவுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளுதல், திருமணப் பதிவினைப் பெற்றுக் கொள்ளுதல், சாரதி அனுமதிப் பத்திரம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுதல், அரசாங்கத்திடமிருந்து சமூக நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுதல் (உம்:-ஓய்வூதியம்), வங்கிக் கணக்கு ஒன்றைத் திறத்தல்இ காப்புறுதி செய்தலும் காப்புறுதிக் கோரிக்கையைச் சமர்ப்பித்தலும், ஊழியர் சேமலாப ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிலிருந்து பணம் பெறுதல் ஆகிய வாழ்வின் முக்கிய தேவைகளுக்கு இப் பிறப்புச் சான்றிதழ் அவசியமாகின்றது.

குழந்தை ஒன்று பிறந்து மூன்று மாதங் களினுள் பிறப்புப் பதிவு செய்யப்பட வேண்டும். இது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் கடமையாகும். தவறும் பட்சத்தில் இது காலங்கடந்த பிறப்புப் பதிவாக பதிவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகிறது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் வைத்தியசாலை ஒன்றில் பிறப்பு நிகழும் பட்சத்தில் வைத்தியசாலை மருத்துவ உத்தியோகத்தர்கள் பிறப்பு பற்றி பிரதேச பிறப்பு இறப்பு பதிவாளருக்கு அறிக்கை அனுப்பி வைப்பார்கள். பெற்றோர் அல்லது பாதுகாவலர் பிறப்பு இறப்பு பதிவாளரைச் சந்தித்து தேவையான ஏனைய விபரங்களை ஊசு1 என்னும் படிவத்தில் நிரப்பி வழங்க வேண்டும். அதன் பின்னர் பிறப்பு இறப்பு பதிவாளர் பிறப்பை மூன்று பிரதிகளில் பதிவு செய்து அவற்றில் ஒன்றை இலவசமாக வழங்குவார்.

சில சந்தர்ப்பங்களில் வைத்தியசாலை மருத்துவ உத்தியோகத்தர்கள் பிறப்பு பற்றிய அறிக்கையை பெற்றோரிடமே கொடுத்து விடுவதும் உண்டு. அவ் அறிக்கையை உடனடியாக பிறப்பு இறப்பு பதிவாளரிடம் சமர்ப்பித்து(பிறப்பு நிகழ்ந்து மூன்று மாதங் களினுள்) அத்துடன் தேவையான ஏனைய விபரங்களை CR1 என்னும் படிவத்தில் நிரப்பி வழங்குவதன் மூலம் பிறப்பு பதிவு செய்யப்படுவதினை உறுதி செய்து கொள்ள வேண்டியது பெற்றோர்களின் தலையாய கடமையாகும்.

இதே போல் வீடு ஒன்றில் பிறப்பு நிகழ்ந்தால் பெற்றோர் பிறப்பு பற்றி கிராம சேவை உத்தியோகத்தருக்கு அறிவிக்க வேண்டும். அவர் அதனை பிரதேச பிறப்பு இறப்பு பதிவாளருக்கு அறிக்கை அனுப்பி வைப்பார். பெற்றோர் பிறப்பு இறப்பு பதிவாளரைச் சந்தித்து CR1 என்னும் படிவத்தை நிரப்பி வழங்க வேண்டும். பதிவாளர் பிறப்பை மூன்று பிரதிகளில் பதிவு செய்து அவற்றில் ஒன்றை இலவசமாக வழங்குவார்.

பிறப்பு மூன்று பிரதிகளில் பதிவு செய்யப்படுகிறது. மூலப் பிரதி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் அல்லது பிரதேச செயலகத்திலும் இணைப் பிரதி மத்திய பதிவேட்டறையிலும் பாதுகாக்கப்படுகிறது. இலவசப் பிரதி தகவல் கொடுத்தவருக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கடமையாற்றும் பிறப்பு, இறப்பு பதிவாளர்கள் விபரம் பின்வருமாறு

| இல | பதிவாளர் பெயர் | பதிவுப் பிரிவு | அலுவலகம் அமைந்துள்ள இடம் |
|---|---|---|---|
| 1. | க.உ.சோமசேகரம் | கருநாவற்பற்று தெற்கு | மாங்குளம் |
| 2. | க.உ.சோமசேகரம்(பதில்) | கற்சிலைமடு(பதில்) | ஒட்டுசுட்டான் |
| 3. | நா.செல்லையா | தண்டுவான் | தண்டுவான் |

**காலம் கடந்த பிறப்பு**

ஏதேனுமொரு காரணத்தால் பிறப்பு ஒன்று நிகழ்ந்து மூன்று மாதங்களினுள் பதிவு செய்யப்படாவிட்டால் அதனைக் காலம் கடந்தும் பதிவு செய்து கொள்ளமுடியும். பிரிவு 24 இன் கீழ் பிரதிக்கினைப் படிவம் பெற்றோர் அல்லது சட்ட முறையான பாதுகாவலரால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்படி பிரதிக்கினைப் படிவம் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். தந்தை இல்லாவிடின் தாய் ஒப்பமிடலாம். பெற்றோர் இருவரும் இறந்திருப்பின் சட்ட முறையானபாதுகாவலர்கையொப்பமிடலாம். பெற்றோர் இருவரும் முறைப்படி திருமணம் செய்யாது பிறந்த பிள்ளை விடயத்தில் பெற்றோர் இருவரும் ஒப்பமிட வேண்டும். கையொப்பம் சமாதான நீதிவானால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

பிரதிக்கினைப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்.

- இப்பதிவு குறித்த மாவட்டத்தில் குறித்த பிரிவில் பதியப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் தேடுதல் விளைவு
- பிள்ளையின் பிறந்த திகதியையும் இடத்தையும் உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
- வைத்தியசாலை அறிக்கை
- மருத்துவமாதின் அறிக்கை
- தடுப்பூசி அட்டை
- ஞானஸ்தான கடிதம்/சாதகம்
- பாடசாலை அதிபரின் அறிக்கை/ விடுகைப் பத்திரம்
- கிராம சேவையாளரின் அறிக்கை
- பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ்கள் (மூலப்பிரதி)
- பெற்றோரின் விவாகச் சான்றிதழ்கள் (மூலப்பிரதி)
- நேர்மூத்த நேர் இளைய பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்கள்
- சகல பிள்ளைகளினதும் பெயர், பிறந்த திகதி, பிறந்த இடம் என்பன குறிக்கப்பட்ட கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட பட்டியல்.
- குடும்ப அட்டை

மேற்கூறப்பட்ட ஆவணங்கள் அடங்கிய கோவை பிரதேச செயலகத்தில் கையளிக்கப்பட வேண்டும்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் பதிவுத் திருமணம் செய்யாத பெற்றோர் திருமணச் சான்றிதழ் இல்லை என்ற காரணத்துக்காக பிள்ளையின் பிறப்பைப் பதிவு செய்யத் தவறி விடுகின்றனர். ஆயினும் பெற்றோர் இருவரும் ஒப்பமிடுவதன் மூலம் பிள்ளையைப் பதிவு செய்து கொள்ள முடியும்.

### உத்தேச வயதுச் சான்றிதழ்

பிறப்புச் சான்றிதழ் உரிய காலத்தில் பதிவு செய்யப்படாததும்இ காலங்கடந்த பிறப்பின் கீழ் பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளமுடியாதவர்களின் பொருட்டும் அவர்களது விண்ணப்பத்தின் பேரில் பிறப்புச் சான்றிதழுக்குப் பதிலாக உத்தேச வயதுச் சான்றிதழ் /அனுமான வயதுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இதனைப் பெற்றுக்கொள்ள காலங்கடந்த பிறப்புப் பதிவு செய்வதற்கான பிரதிக்கினைப்படிவத்தைப் பூர்த்தி செய்து உத்தேச வயதுச் சான்றிதழ் பெறுவதற்கென வழங்கப்படும் சத்தியக்கூற்று மற்றும்

- இப்பதிவு குறித்த மாவட்டத்தில் குறித்த பிரிவில் பதியப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் தேடுதல் விளைவு
- பிறந்த திகதியையும் இடத்தையும் உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
- கிராம சேவையாளரின் அறிக்கை
- பாடசாலை விடுகைப் பத்திரம்
- பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்கள்
- திருமணச் சான்றிதழ்
- சகோதரர்களின் பிறப்புச் சான்றிதழ்கள்
- அடையாள அட்டை பிரதி
- குடும்ப அட்டை
-

என்பவற்றை மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் சமர்ப்பித்து உதவிப்பதிவாளர் நாயக அலுவலகங்களிலிருந்து உத்தேசவயதுச்சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். மேலதிகமாகத் தேவைப்படும் பிரதிகளை உதவிப்பதிவாளர் நாயக அலுவலகங் களிலிருந்து விண்ணப்பங் களைச்சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும்.

2016.03.10 அன்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் மிகவும் திட்டமிட்டு உதவிப்பதிவாளர் நாயகம் மற்றும் காணிப் பதிவாளரும் மேலதிக மாவட்டப் பதிவாளரும்இ முல்லைத்தீவு அவர்களினதும் ஒத்துழைப்புடனும் PAFRAL அமைப்பின் அனுசரணையுடனும் வெற்றிகரமாக நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் ஏறத்தாழ 100 உத்தேச வயதுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### இறப்பு

பிறப்பு பதிவு செய்யப்படுவது போன்று இறப்பும் மூன்று மாதங்களினுள் பதிவு செய்யப்பட வேண்டும். இறப்பு வைத்தியசாலையில் நிகழ்ந்திருப்பின் வைத்திய அதிகாரி வழங்கும் தகவல்இ வீட்டில் இறந்திருப்பின் அந்தப் கிராமத்திற்குப் பொறுப்பான கிராம சேவையாளரின் அறிக்கைஇ திடீர் மரணமெனின் திடீர் மரண விசாரணையாளரது அறிக்கை அல்லது மாவட்ட நீதிமன்ற தீர்ப்பின் பிரதி என்பவற்றை உரிய பதிவுப் பிரிவின் பதிவாளருக்குச் சமர்ப்பித்து அத்துடன் மேலதிக தகவல்களை CR2 என்னும் படிவத்தில் பூர்த்தி செய்து கொடுத்து பதிவு செய்து கொள்ள முடியும்.

### காலம் கடந்த இறப்பு

ஏதேனுமொரு காரணத்தால் இறப்பு ஒன்று நிகழ்ந்து மூன்று மாதங்களினுள் பதிவு செய்யப்படாவிட்டால் அதனைக் காலம் கடந்தும் பதிவு செய்து கொள்ளமுடியும். எனினும் இறந்த திகதியிலிருந்து 25 வருடங்கள் முடிவடைந்தால் இவ் இறப்பினைப் பின்னர் பதிவு செய்ய முடியாது.

காலங்கடந்த இறப்பைப் பதிவு செய்வதற்கான பிரிவு 36 இன் கீழ் பிரதிக்கினையைப் பூரணப்படுத்தி பிரதிக் கினையாளரால் ஒப்பமிடப்பட்டு சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

பிரதிக்கினைப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்.

- இறந்த திகதியையும் இடத்தையும் உறுதிப்படுத்தும் ஆவணங்கள்

- வைத்தியசாலைக் கடிதம்
- கண்ணீர் அஞ்சலி, மரண அறிவித்தல், கல்வெட்டு, அந்தியேட்டி அழைப்பிதழ் என்பனவற்றில் வழங்கக்கூடியவை
- மரண விசாரணை அதிகாரியின் சான்றிதழ்
- இறந்தவர் உயிருடன் இருந்த போது உபயோகப்படுத்தியதும் அவருடைய பெயர் மற்றும் விபரங்களை உறுதிப் படுத்துவதுமான ஆவணங்கள்
- இறந்தவரின் அடையாள அட்டை
- இறந்தவரின் பிறப்புச்சான்றிதழ், திருமணச் சான்றிதழ், குடும்ப அட்டை
- ஓய்வூதிய அட்டை, உத்தியோக அடையாள அட்டை என்பனவற்றில் பெறக்கூடியவை
- இறந்தவருக்கும் பிரதிக்கினையாளருக்குமுள்ள உறவை உறுதிப்படுத்தும் ஆவணம்.
- கிராம சேவையாளரின் அறிக்கை
- சம்பவத்தை விளக்கும் பிரதிக்கினை செய்பவரின் சத்தியக் கடதாசி
- மரணச்சடங்கில் கலந்து கொண்ட இருவரின் சத்தியக் கடதாசி
- யுத்த சூழ்நிலையில் ஏற்பட்ட மரணம் தொடர்பில் பொலிசில் அல்லது கிராம சேவையாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பின் அதன் பிரதி

இவற்றில் சமர்ப்பிக்கப்படக்கூடிய ஆவணங்கள் அடங்கிய கோவை பிரதேச செயலகத்தில் கையளிக்கப்பட வேண்டும். உதவிப் பதிவாளர் நாயகத்தின் அனுமதி பெறப்பட்டு உரிய பதிவாளர்களால் பதிவு செய்யப்பட்டு இலவசப் பிரதி பிரதிக்கினையாளருக்கு அனுப்பி வைக்கப் படும்.

**திருமணப் பதிவு**

திருமணப்பதிவு செய்தல் விடயத்தை நோக்குவோமானால் 18 வயதிற்கு மேற்பட்ட ஆணும் பெண்ணும் சட்டப்படி தமது திருமணத்தை விவாகப் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ள முடியும். திருமணத்தைப் பதிவு செய்து கொள்ள தீர்மானித்த நாளிலிருந்து 14 நாட்களுக்கு முன் விவாகப்பதிவாளர் ஒருவரிடம் விவாக அறிவித்தல் கொடுக்கப்படல் வேண்டும். மணமகனும் மணமகளும் ஒரே பிரதேசத்தில் வசிப்பவராயின் யாரேனும் ஒருவர் விவாக அறிவித்தல் கொடுத்தால் போதுமானது. வெவ்வேறு பிரதேசத்தில் வசிப்பவர்கள் ஆயின் இரு இடங்களிலும் விவாக அறிவித்தல் கொடுக்கப்படல் வேண்டும். 14 நாட்களுக்கு முன் திருமணத்தைப் பதிவு செய்ய வேண்டுமெனின் மாவட்ட பதிவாளரிடம் விசேட அனுமதி பெற்று பதிவு செய்து கொள்ளமுடியும்.

**மூலப் பிரதி பெற்றுக் கொள்ளல்**

விவாகஇ பிறப்பு, இறப்பு சான்றிதழ்களின் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் குறித்த நிகழ்வு இடம் பெற்ற மாவட்டத்தின் ஏதாவதொரு பிரதேச செயலகத்தில் விண்ணப்பத்தைக் கையளிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதியினைப் பெறுவதற்கு கட்டணம் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். ஆரம்ப காலங்களில் முத்திரை நடைமுறை இருந்தாலும் தற்போது கட்டணம் பணமாகத் தான் அறவிடப்படுகிறது. சான்றிதழின் பதிவிலக்கம் பதிவுத்திகதி தெரிந்திருப்பின் (A) ஒரு பிரதிக்கு 100/- ஆகவும் சான்றிதழின் பதிவிலக்கம் பதிவுத்திகதி தெரியாதிருப்பின் (B) ஒரு பிரதிக்கு 200/- (மேலதிகமாகத் தேவைப்படும் ஒவ்வொரு பிரதிக்கும் 100/- படி) ஆகவும் செலுத்தப்பட வேண்டும். ஒரு விண்ணப்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட எத்தனை பிரதிகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.

தபால் மூலம் விண்ணப்பம் அனுப்புவதாக இருந்தால் அருகிலுள்ள மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் உரிய பணத்தினைச் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது பதிவாளர் நாயகத்தின் 7041650 இலக்க வங்கிக் கணக்கில் (இலங்கை வங்கி புறக்கோட்டை கிளை ) வைப்பிலிட்டு பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி பணம் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை விண்ணப்பபடிவத்துடன் இணைத்து சுயவிலாசம் இட்டு 12/- முத்திரை ஒட்டிய தபால் உறையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**திருத்தம் செய்தல்**

பதியப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டிருப்பின் திருத்தம் செய்து கொள்ளமுடியும். 2ம் கூட்டில் உள்ள பிழை திருத்துவதற்கு 18 வயதிற்கு குறைந்தவர் எனின் தகப்பன் தாய் பொறுப்பானவரால் 18 வயதுக்கு மேற்பட்டவர் எனின் உரியவரால் செய்யப்படும் பிரதிக்கினை மூலமும் செய்யப்படும்.

சரியான பெயரை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்

- கிராம சேவையாளரின் அறிக்கை
- பாடசாலை அதிபரின் அறிக்கை/ விடுகைப் பத்திரம்
- தடுப்பூசி அட்டை
- ஞானஸ்தான கடிதம்/சாதகம்
- வங்கிப்புத்தகப்பிரதி

என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கையொப்பம் சமாதான நீதிவானால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

தற்போதுள்ள பெயரை பொருத்தமில்லை என்ற காரணத்துக்காக அல்லது மதம் மாறியதன் காரணமாக மாற்ற முற்படும் போது தேசிய தினசரியில் பிரசுரித்து ஒரு வருடத்தின் பின் எந்த ஆட்சேபனைகளும் யாராலும் தெரிவிக்கப்படவில்லை எனின் மாற்றம் செய்யலாம்.

பிறந்த திகதிஇ இடம் என்பன திருத்தம் செய்து கொள்ள

- கிராம சேவையாளரின் அறிக்கை
- பாடசாலை அதிபரின் அறிக்கைஃ விடுகைப் பத்திரம்
- தடுப்பூசி அட்டை
- ஞானஸ்தான கடிதம்/சாதகம்
- வைத்தியசாலை அறிக்கை
- தாயின் தந்தையின் விபரங்களில் திருத்தம் செய்து கொள்ள
- பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ்கள் (மூலப்பிரதி)
- பெற்றோரின் விவாகச் சான்றிதழ்கள் (மூலப்பிரதி)
- அடையாள அட்டையின் பிரதி
- ஏனைய பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்கள்

என்பன சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தம்மால் இயன்ற வரை சான்றிதழ்களை உடனுக்குடன் பரிசீலித்துக் கொள்வதன் மூலம் அவசரத் தேவைகளின் போது ஏற்படுகின்ற கால தாமதங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இறப்புச் சான்றிதழில் திருத்தம் செய்வதற்கு இறந்தவர்களின் உரித்தாளர்களரல் பிரதிக்கினை செய்யப்படலாம். திடீர் மரண விசாரணை அதிகாரியினால் வழங்கப்பட்ட அறிக்கையின் படி பதியப்பட்ட இறப்புச் சான்றிதழில் திருத்தம் செய்வதற்கு அறிக்கை வழங்கிய திடீர் மரண விசாரணை அதிகாரியினால் மட்டும் பிரதிக்கினை செய்யப்படலாம். திருத்தங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கையொப்பம் சமாதான நீதிவானால் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

திருமணச் சான்றிதழில் திருத்தங்கள் செய்ய வேண்டுமெனின் பொது விவாகம் தொடர்பில் மரவட்ட நீதிமன்றில் அனுமதி பெறப்படல் வேண்டும். இந்த விடயத்தில் சட்ட உதவி ஆணைக்குழு பொது மக்களுக்கு இலவசமாக சேவை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு வெளியில் நிகழ்ந்த இலங்கைப் பிரஜையொன்றின் பிறப்புக்கள்

இலங்கைக்கு வெளியில் நிகழ்ந்த இலங்கைப் பிரஜையொன்றின் பிறப்புக்களை சட்ட திட்டத்திற்கமைய மீளப் பதிவு செய்து கொள்ளலாம். அந்தந்த நாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலயங்களில் விண்ணப்பங்களை ஆங்கில மொழியில் நிரப்பி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இந்தியாவில் நிகழ்ந்த இலங்கைப் பிரஜையொன்றின் பிறப்பைப் பதிவு செய்வதாக இருந்தால் தந்தை அல்லது தாய் கையொப்பமிட்டு கையொப்பம் சமாதான நீதிவானால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பிறப்பு நிகழ்ந்து மூன்று மாதங்கள் கடந்த பின் விண்ணப்பிப்பதாயின் காலங்கடந்த பிறப்பு பதிவு செய்வதற்குரிய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

பிரதிக்கினைப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்.

- பிறப்பு இந்தியாவில் நிகழ்ந்து உரியவாறு இந்தியப் பதிவுச் சட்டத்திற்கமைய பதிவு செய்யப்பட்டிருப்பின் அச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி .
- இந்தியாவுக்கு அகதியாகச் சென்றிருப்பின் இலங்கை அகதிகளுக்கான அடையாள அட்டைப் பிரதி அல்லது கடவுச்சீட்டின் பிரதி.
- பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ்கள்
- பெற்றோரின் விவாகச் சான்றிதழ்கள்
- இந்தியாவிலிருந்து மீண்டும் வந்து குடியேறியமைக்கான பிரதேச செயலாளரினால்உறுதிப்படுத்தப்பட்ட கிராம சேவகரின் கடிதம்.
- இலங்கையில் வந்து இறங்கிய இடத்தில் பதிவுகள் ஏதும் செய்திருப்பின் அப்பதிவுகளின் பிரதிகள்.
- பெற்றோர் இலங்கைப் பிரஜைகள் என்பதை வெளிப்படுத்தும் வெளிப் படுத்துகை

பிரதிக்கினையும் ஆவணங்களும் மேலதிக மாவட்டப் பதிவாளரின் விதந்துரையுடன் பதிவாளர் நாயகத்துக்கு அனுப்பப்படும். அவரின் சிபாரிசுடன் இந்திய உயர் ஸ்தானிகராலயத்துக்கு அனுப்பப்படும். இந்திய உயர்ஸ்தானிகராலயத்தால் அனுமதிக்கப்பட்ட பின் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு இலவசப் பிரதி அனுப்பி வைக்கப்படும். பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு கொழும்பு மாளிகாவத்தையில் உள்ள மத்திய பதிவேட்டறைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

காணாமற் போன நபர்களது இறப்பினைப் பதிவு செய்தல்

காணாமற் போன நபர்களது இறப்பினைப் பதிவு செய்வதற்கு குறித்த நபர் இறந்துள்ளதாக உறுதியாக நம்பிக்கை கொண்டுள்ள அந்நபரின் நெருங்கிய உறவினரே (உ-ம்-கணவன் மனைவி பிள்ளைகள்) விண்ணப்பிக்க முடியும். இறந்த நபர் இறுதியாகக் குடியிருந்த பிரிவின் பிரதேச செயலகத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்படிவத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்கள்

- விண்ணப்பதாரியால் செய்யப்படும் சத்தியக்கூற்று
- கிராம அலுவலரின் அறிக்கை
- காணாமல் போனமை தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு செய்திருப்பின் பொலிஸ் அறிக்கை மனித உரிமை ஆணைக்குழு அல்லது வேறு ஏதேனும்

அமைப்புக்களுக்கு தெரியப்படுத்தி இருப்பின் அவர்களின் அறிக்கை

- காணாமற் போன நபர் உயிரோடு இருந்தவர் என்பதை உறுதிப்படுத்தும் ஏதேனும் ஆவணங்கள் ( பிறப்புச் சான்றிதழ்இ அடையாள அட்டைஇ விவாகச் சான்றிதழ்)
- விண்ணப்பதாரிக்கும் காணாமல் போனவருக்கும் இடையிலான உறவுமுறையை உறுதிப்படுத்தும் ஏதேனும் ஆவணங்கள்

**2015ஆம் ஆண்டின் ஓர் அலசல்**

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் 2015 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற தேடுதல் விண்ணப்பங்களில் A விண்ணப்பப்படிவம் (சான்றிதழின் பதிவிலக்கம் பதிவுத்திகதி தெரிந்திருப்பின்) 2188 ஆகவும் B விண்ணப்பப்படிவம் (சான்றிதழின் பதிவிலக்கம் பதிவுத்திகதி தெரியாதிருப்பின்) 409 ஆகவும் காணப்படுகிறது. அவற்றில் 2134 A விண்ணப்பப்படிவங்களும் 385 B விண்ணப்பப்படிவங்களும் அவ்வாண்டே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு விட்டன.

அதே போன்று 173 காலங்கடந்த பிறப்பு மற்றும்உத்தேசவயதுச்சான்றிதழும்153திருத்த விண்ணப்பப் படிவங்களும் 03 காலங்கடந்த இறப்பு விண்ணப்பப் படிவங்களும் கிடைக்கப் பெற்றிருந்தன. அவற்றில் 169 காலங்கடந்த பிறப்பு மற்றும் உத்தேச வயதுச் சான்றிதழும் 146 திருத்த விண்ணப்பப் படிவங்களும் 03 காலங்கடந்த இறப்பு விண்ணப்பப் படிவங்களும் அவ்வாண்டே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு விட்டன.

2015ம் ஆண்டளவில் தண்டுவான் பிரிவு பதிவாளரால் 01 இறப்புஇ 14 விவாகமும் கருநாவல்பற்று தெற்கு பிரிவு பதிவாளரால் 14 பிறப்புஇ 17 இறப்புஇ 106 விவாகமும் கற்சிலைமடு பிரிவு பதிவாளரால் 05 பிறப்புஇ 13 இறப்பும் பதியப்பட்டுள்ளன. மொத்தமாக ஒட்டுசுட்டான் பிரிவில் 19 பிறப்பும் 31 இறப்பும் 120 விவாகமும் பதியப்பட்டுள்ளன.

**ஆ. ரெளசி**
மேலதிக மாவட்டப்பதிவாளர்,
ஒட்டுசுட்டான்

# அதிகரித்து வரும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள்

"மாதர்தம்மைஇழிவு செய்யும்மடமையைக் கொளுத்துவோம்" எனப் பாரத தேசத்திலிருந்து முழங்கினான் புரட் சிக்கவி பாரதி. பாரதி பாடிச்சென்று பல ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் பெண்களை இழிவுபடுத்தும் நிலை இன்னமும் குறைந்த பாடில்லை. மாறாகப் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருகின்ற நிலையினையே நாம் காணக்கூடியதாகவுள்ளது. இலங்கையில் பெண்களுக்கு எதிரான வன்முறையால் உடலியல் ரீதியாகப் பாதிப்புற்ற பெண் களுக்குச் சிகிச்சையளிப்பதற்காக அரச வைத்தியசாலைகளில் பெருமளவு பணம் செலவளிக்கப்படுகின்றது என்பது கவலை தருகின்ற விடயமாகும். யுத்தகாலங்களிலும் சரி, யுத்தத்திற்குப் பின்னரும் சரி பெண்களே பலிக்கடா வாக்கப்படுகின்றனர். பெண்களுக் கெதிரான வன்முறைகள் நம் சமூகத்தில் எவ்வளவு தூரம் புரையோடிப் போயுள்ளன என்பதனை நோக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

யாழ். குடாநாட்டினைப் பொறுத் தவரையில், பெண்கள் பாலியல் வல்லு றவுக்கு உள்ளாக்கப்படல், சீதனம் கேட்டுத் துன்புறுத்தப்படல், நெருங்கிய உறவினர்களால் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு ஆளாதல், காதலிக்கப்பட்டுக் கைவிடப்படல், கொலை செய்யப்படல், பெண்கள் கல்வி நிறுவனங்களுக்கோ அல்லது தொழிலுக்கோ சென்று வருகையில் அவர்கள் மீது பாலியல்சார் நடவடிக்கைகள் பிரயோகிக்கப்படல் மற்றும் தூஷண வார்த்தைகளால் திட்டுதல் போன்ற இன்னோரன்ன வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதனைக் காணமுடிகின்றது.

இதன் விளைவாகவே பிரபல பாடசாலை ஆசிரியை காதலனால் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை, அமிலம் ஊற்றப்பட்டு பெண் படுகொலை, நடுவீதியில் பெண் கத்தியால் குத்தப்பட்டுக் கொலை, கணவனால் பெண் அடித்துக் கொலை, அதிகாரிகளால் பெண்கள் பாலியல் ரீதியாகத் துஸ்பிரயோகம் செய்யப்பட்டமை, பெண்களை இலக்குவைத்து தாக்கும் கிறீஸ் பூதங்கள் என மனதினை உருக்கும் பல செய்திகள் பத்திரிகைகளினை அலங்கரித்த வண்ணமுள்ளன.

#### பெண்களுக்கு எதிரான வன்முறை

பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழிப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் வியன்னா பிரகடனமானது, 1993 இல் பெண்களுக்கெதிரான வன்முறை பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "ஒரு பெண்ணினுடைய தனிப்பட்ட அல்லது பொதுவாழ்வில் உடல், உளவியல், பாலியல் ரீதியாகத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்துச் செயற்பாடுகளும் அல்லது அச்சுறுத்தல்களும் பெண்ணுக்கு எதிரான வன்முறைகளாகும்." இது பெண்ணின் பலத்துக்கு அப்பாற்பட்ட பலாத்காரத்தைப் பிரயோகிப்பதனூடாக மேற்கொள்ளப்படுகின்றது. அடிப் படையிலேயே இத்தகைய செயற்பாடுகள் அடிப்படை மனித உரிமை மீறல்களாகும்.

ஒரு பெண்ணினுடைய விருப்பங்கள், தேவைகள் என்பன இதயபூர்வமாக, முழுமை யாக நிறைவேற்றப்படாதபோதே அங்கு அவளுக்கெதிரானவன்முறைக்கான அடித்தளம் அமைக்கப்படுகின்றது. ஒரு பெண் பிறந்து வளர்ந்து கொண்டு வருகையில், அவளுக்கு விருப்பமில்லாததைச் செய்யவைப்பது மற்றும்

அவளுக்கு அடிப்படையாக ஆதாரமாக இருப்பதைப் பறிப்பது இவையெல்லாம் வன்முறைகளாகும். விருப்பமில்லாத ஒருவரைத் திருமணம் செய்து வைப்பது கல்வி கற்பதற்கான உரிமையை மறுத்தல், பலங்கொண்ட நபரொருவர் பெண்ணில் மீது தனது பலத்தினைச் சட்டத்திற்கு விரோதமாகப் பிரயோகித்தல், குறித்த பெண்ணில் மீது உடல்ரீதியாகவோ, அதிகார ரீதியாகவோ, அரசியல் ரீதியாகவோ அல்லது பொருளாதார ரீதியாகவோ பலமானது பிரயோகிக்கப்படலும் வன்முறையே. இவை அவர்களுக்கு உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் வலியை ஏற்படுத்துவனவாக அமைகின்றன.

மேலும், இத்தகைய வன்முறைகள் பெண்களின் சுயமதிப்பை (Self - esteem) முற்றாக அழிப்பதுடன் அவர்களது உயிருக்கும் அச்சுறுத்தலாய் அமைகின்றன.

**பெண்களுக்கெதிரான வன்முறையாளர்கள்**

- மது போதைப் பொருள் பாவனையில் ஈடுபடும் கணவன். தந்தை மற்றும் சகோதரன் போன்றோர்.
- பாலியல் ரீதியாகத் துஸ்பிரயோகத்திற்குள்ளாகும் பெண்களில் பெரும் பாலானோர் அவர்களுக்கு மிகவும் நெருங்கிய உறவினர்களாலேயே துஸ்பிரயோகம் செய்யப்படுகின்றனர்.
- கல்வியறிவு குறைந்த கணவன்மார்களாலும் பெண்கள் வன்முறைக்கு உள்ளாக்கப் படுகின்றனர்.
- பெண்களின் உயர்வினைப் பொறுத்துக் கொள்ள முடியாத, ஆணாதிக்கச் சிந்தனை உடையோர்.
- சில சந்தர்ப்பங்களில் தொழில் வழங்குநர்களும், மேலதிகாரிகளும்.
- யுத்த காலங்களிலும், அகதி முகாம்களிலும் ஆயுததாரிகளால் பெண்கள் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்
- தனியே பிரயாணம் செய்யும் போதும், பஸ் பிரயாணங்களின் போதும் தனிநபர் மற்றும் குழுவினர்.
- சில பாடசாலைகளிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் ஆசிரியர்கள் வன்முறையாளர்களாய் இருக்கின்றனர்.
- ஆண்துணை இல்லாது தனியே இருக்கும் பெண்கள் மீதான அந்நியநபர்களின் வன்முறை.
- சில சந்தர்ப்பங்களில் நெருங்கிய நண்பர்கள், காதலர் ஆகியோரும் கூட பெண்களுக் கெதிரான வன்முறைகளில் ஈடுபடுகின்றனர்.

**பெண்களுக்கெதிரான வன்முறைகளிடம் பெறும் இடங்கள்**

வீடு, வீதி, பாடசாலை, தனியார் கல்வி நிறுவனங்கள், வேலைத்தளங்கள், மத நிலையங்கள், பொது இடங்கள், அடைக்கலம் தேடும் இடங்கள், அரச அரச சார்பற்ற நிறுவனங்கள், நலன்புரி நிலையங்கள் மற்றும் சில மருத்துவமனைகள் என இன்னோரன்ன இடங்களில் பரந்துபட்டளவில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் இடம் பெறுகின்றன.

**பெண்களுக்கெதிரான வன்முறையின் வகைகள்**

**உடலியல் ரீதியான வன்முறைகள்**

- பெண்களை ஆயுதங்களாலும் ஆயுதங்களின்றியும் அடித்தலும், காயப்படுத்தலும்.
- சித்திரவதைக்கு உள்ளாக்குதல். இதன் போது கம்பு, போத்தல்கள், ஐஸ்கட்டிகள் என்பன பெண்ணுறுப்பினுள்ளும், மலவாசலினுள்ளும் நுழைக்கப்படுகின்றன.
- அமிலத்தை அவர்களின் முகம், உடல் என்பவற்றின் மீது விசுறுதல்.
- அங்கவீனப்படுத்துதல்.
  - உடலியல் ரீதியான வன்முறையின்

உச்சக்கட்ட விளைவாகச் சில பெண்கள் கொலையும் செய்யப்படுகின்றனர்.

**உளவியல் ரீதியான வன்முறைகள்**

- மனம் புண்படத்தக்க வகையில் பெண்களைத் திட்டுதல். இதன்போது பாலியல் சார்ந்த, பாலியல்சாராத வார்த்தைகள்பிரயோகிக்கப்படுகின்றன. சிலர் தூஷண வார்த்தைகளாலும் பெண்களைத் திட்டுகின்றனர்.
- பிறர்முன் அவமானப்படுத்துதல்.
- பெண்களின் நடமாடும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தல் அல்லது முற்றுமுழுதாக இல்லாமற் செய்தல்.
- பெண்களை அவர்களது குடும்பம், நண்பர்களிலிருந்து தனிமைப்படுத்தி வைத்திருத்தல்.
- அவர்களின் கருத்துக்களுக்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளிக்காமல் ஒதுக்கி வைத்தல்.
- பாலியல் ரீதியாக நடத்தை கெட்டவள் எனக் களங்கம் கற்பித்தல்.

**பாலியல் ரீதியான வன்முறைகள்**

- பெண்களைப் பாலியல் பலாத்காரம் அல்லது பதாலியல் துஸ்பிரயோகம் செய்தல்.
- பாலியல் வல்லுறவு, குழுப்புணர்ச்சி, என்பவற்றுக்குட்படுத்தல்.
- பெண்களின் மீதான பாலியல் சுரண்டல்கள், குறிப்பாக, அவர்களின் ஆடைகளைப் பலவந்தமாக அகற்றுதல், நிர்வாணப்படுத்தல், அவர்கள் அறியாத வண்ணம் அவர்களை நிர்வாண மயமாய்ப்படமெடுத்தல் போன்றவை பெண்கள் மீதான பாலியல் சுரண்டல்களாகும்.
- பாலியல் ரீதியில் துன்புறுத்தல்.
- பலவந்தப்படுத்தி விபச்சாரத்தில் ஈடுபடுத்தல்.
- பாலியற் படங்களுக்குப் பெண்ணைப் பயன்படுத்துதல்.
- பாலியல், தொந்தரவுகளாகப் பாலியல் சார் எண்ணங்களைத் தோற்றுவித்தல், பாலியற்சார்ந்த வார்த்தைகளைப் பேசுதல், பாலியல்சார் படங்களைக் காட்டுதல்.
- பாலுறுப்புக்களைச் சிதைத்தல்.
- நெருங்கிய உறவினர்களால் பாலுறுப்புகள், மார்பு என்பவற்றைத் தீண்டுதல், இடித்தல், உரசுதல், பாலுறுப்புக்களை வெளிப்படுத்திக் காட்டுதல் மற்றும் அவற்றால் தீண்டுதல்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் பெரும்பாலானவை பாலியல் ரீதியான வன்முறைகளாகவே இருக்கின்றன. பதவி உயர்வு மற்றும் வேலைவாய்ப்பு போன்றவற்றுக்காகப் பெண்களைப் பாலுறவுக்குக் கட்டாயப்படுத்துதல், அடிபணியவைத்தல் போன்றனவும் பாலியல்சார் வன்முறைகளாகும்.

அநேகமாக, பெண்களுக்கெதிரான வன்முறைகள் அவர்கள் வசிக்கும் வீடுகளிலேயே இடம்பெறுகின்றன. கணவனால், தந்தையால், சகோதரனால் இத்தகைய வீட்டு வன்முறைகள் (Domestic violence) இடம்பெறுகின்றன. கணவனால் மனைவி அடிக்கப்படுதல், சீதனம் கேட்டுத்துன்புறுத்தப்படல், இளவயதுத் திருமணத்திற்குக் கட்டாயப்படுத்தப்படல், விருப்பமில்லாத நபரொருவருடன் பலவந்தப்படுத்தித்திருமணம் செய்து வைத்தல், மனைவியைப் பலவந்தப்படுத்திப் பாலுறவு மேற்கொள்ளல், தகாத வார்த்தைகளால் பேசுதல் போன்றவை இதற்குச் சிறந்த உதாரணங்களாகும்.

**பெண்களுக்கெதிரான வன்முறைக்கான காரணங்கள்**

சமூகத்திலே ஆண், பெண்களுக்கிடையே

நிலவும் ஏற்றத்தாழ்வும், பாரபட்சமும் வன்முறைக்கு அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன. பெண்கள் எப்பொழுதும் ஆண்களுக்கு கீழானவர்கள் என்ற மனப் பாங்கு பாமரமக்கள் முதல் படித்தவர் வரை புரையோடியுள்ளமையால் இந்த அசமத்துவ நிலை ஏற்பட்டுள்ளது. இன்றும், பெண்கள் ஆண்களின் பாலியற் தேவைகளைப் பூர்த்தி செய்பவளாகவும், குழந்தைகளைப் பெற்றுக் கொடுக்கும் இயந்திரமாகவும், அவர்களுக்குப் பணிவிடை செய்யும் சேவகியாகவும் நோக்கப்படுவதனாலும், இத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாதபோது அவை வன்முறைக்கு அடிகோலுவதையும் நோக்க முடிகின்றது.

பெண்கள் ஆண்களில் தங்கிவாழ்தலும் ஒரு காரணமாய் அமைகின்றது. எல்லாத் தேவைகளுக்கும் ஆண்கள் மீது தங்கியிருத் தலும், எதிர்பார்த்திருத்தலும் பெண்களுக்கு எதிரான வன்முறையை மறைமுகமாகத் தூண்டுகின்றன. உதாரணமாக தமது பொருளாதார, பாதுகாப்பு தேவைகளை நிறைவு செய்துகொள்ளப் பெண்கள் ஆண்களையே நம்பியிருக்கின்றனர்.

மதுப்பாவனை எங்கு அதிகமாகக் காணப் படுகின்றதோ அங்கு பெண்களுக்கெதிரான வன்முறையும் ஏனைய பகுதிகளினை விட ஒப்பீட்டளவில் உயர்வானதாகக் காணப்படுகின்றன. ஆண்கள் குடித்து விட்டு வந்து பெண்களைத் துன்புறுத்தல் அண்மைக் காலமாக மிக சடுதியாக அதிகரித்து வருவதனையும் காணமுடிகின்றது.

தொன்று தொட்டு நிலவிவரும் சமூக, கலாசார, விழுமியங்கள் பெண் அடக்கு முறையையும், அவர்களுக்கெதிரான வன் முறையையும் தொடர்ந்தும் பேணி வருகின்றன. இவற்றின் காரணமாக வன்முறைகள் ஏற்படுகின்ற போதும் பெண்கள் அதனை வெளியே சொல்லத் தயங்குகின்றனர். இல்லையெனில் பொறுமையோடு சகித்துக் கொள்கின்றனர். இன்னும் ஒருபடி மேலே சென்று கணவனே கண்கண்ட தெய்வம் என மன்னித்தும் விடுகின்றனர். இதன் காரணமாக அவர்கள் தொடர்ந்தும் வன்முறைக்கு ஆளாகிக் கொண்டே இருக்கின்றமை தவிர்க்க முடியாததாகிவிடுகின்றது.

சட்டத்துறை மற்றும் நீதித்துறையில் காணப்படும் குறைபாடுகளும் பெண் களுக்கெதிரான வன்முறைகள், அதிகரிப் பதற்குக் காரணமாகின்றன. குடும்ப வன்முறைத் தடைச்சட்டம், என்பன பெண் களுக்கெதிரான வன்முறைத் தடைச்சட்டம் எழுத்துருவில் உள்ள போதும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. சட்ட நடவடிக்கைகள் எடுப்பதில் காணப்படும் தாமதம், பாரபட்சம் போன்றனவும் பெண்களுக்கு எதிரான வன்முறையைக் குறைப்பதில் பங்கெடுக்காமைக்கு முக்கிய காரணங்களாகும்.

பெண்களுக்கெதிரான வன்முறையைத் தூண்டுவதில் ஊடகங்களுக்கும் பெரும் பங்குண்டு. பெண்களைக் கவர்ச்சிப் பொருட்களாக. ஆண்களின்நுகர்ச்சிப்பொருட் களாகச் சித்திரிப்பதில் இன்றைய ஊடகங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. பெண்கள் அரைநிர்வாணமாகக் காட்டப்படுதலும், திரைப்படங்களிலும், சின்னத்திரை நாடகங்களிலும் ஆண்களின் அடிமைகளாக. அவர்களின் பாலியற் தேவைகளைப் பூர்த்தி செய்யும் இயந்திரங்களாகக் காட்டுவதலும் வன்முறையைத் தூண்டும் காரணங்களாகின்றன.

**பெண்களுக்கெதிரான வன்முறையால் ஏற்படும் பாதிப்புக்கள்.**

பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் உடல், உள, சமூக ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன், அவர்களின் வாழ்வையே சூனியமாக் கிவிடுகின்றன. உடலியற் பாதிப்புக்கள் என்று நாம் குறிப்பிடும் போது, உடற்காயங்கள், தாங்கமுடியாத உடல்வலி, உணவு உண்பதில் ஒழுங்கீனங்கள், நித்திரைக் குறைபாடு, மாதவிடாய் ஒழுங்கீனங்கள், பாலியல் மூலம் பரவும் நோய்கள் ஏற்படல், பாலுறவில் நாட்டமின்மை, கருக்கலைப்பு, கருச்சிதைவு

மற்றும் விரும்பத்தகாத கர்ப்பம் என இன்னோரன்ன பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இத்தகையஉடற்பாதிப்புக்கள் சில சந்தர்ப்பங்களில் தீவிரமானதாகக் காணப்படும்போது உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன.

மனச்சோர்வு, பதகளிப்பு, பதட்டம், கோபம், அவமானம், தற்கொலை முயற்சி, சுயவெறுப்பு, விரக்தி, தாழ்வு மனப்பான்மை மற்றும் அதிர்ச்சிக்குப் பின்னரான மனவடு நோய் என்பன உளப்பாதிப்புக்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன. உளப் பாதிப்புக்களின் தாக்கம் அதிகரிக்கும் போது சிலர் தற்கொலையினை நாடுகின்றனர். இவற்றினை விடச் சமூகத்தினால் களங்கம் கற்பிக்கப்படல், சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்படல் போன்ற சமூக ரீதியான பாதிப்புக்களும் ஏற்படுகின்றன.

**பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுக்கும் வழிமுறைகள்**

பெண்களுக்கெதிரான வன்முறைகளை எதிர்காலத்தில்குறைப்பதற்கும், வன்முறையால் பாதிப்புக்கள் ஏற்படுகின்ற போது அவற்றைத் தவிர்ப்பதற்கும் பின்வரும் அணுகுமுறைகளை முன்வைக்கப்படுகின்றன.

- ஆண்களும் பெண்களும் சம வாய்ப்புக்களை அனுபவிக்க உரித்துடையவர்களென்ற மனப்பாங்கு சமூகத்தில் தோற்றுவிக்கப்படல் வேண்டும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் உடலமைப்பில் மட்டுமே வேறுபாடுண்டு. ஏனைய விடயங்களில் ஆணும்பெண்ணும் சமமாகச் செயற்பட வல்லவர்கள் என்ற மனப்பான்மையை ஏற்படுத்த வேண்டும். இதனைச் சிறுவயது முதலே உணர்ந்து கொள்ளும் விதமாகக் குழந்தைகள் வளர்க்கப்பட வேண்டும். இதன் மூலம் பாரபட்சம், ஏற்றத்தாழ்வில்லாத நிலை சமுதாயத்தில் உருவாக வழியேற்படும்.
- பெண்களைச் சமூக பொருளாதார ரீதியில் பலமானவர்களாக மாற்ற முற்படுவதும் அவர்களுக்கெதிரான வன்முறைபகளை ஓரளவுக்குக் குறைப்பதற்கு வழி கோலும். பெண்கள் தமது சொந்தக் காலில் நிற்பதற்கு வழிசமைத்துக் கொடுப்பதனூடாக அவர்களைப் பொருளாதாரபலம் மிக்கவர்களாக மாற்ற முடிகின்றது. இதனால் அவர்களது அந்தஸ்து சமூகத்தில் உயர்வடைகின்றது. அவர்கது மனபலம் அதிகரிக்க, தம்மைப் பற்றிய சுயகணிப்பீடு அவர்களுக்கு வல்லமையை அளிக்கின்றது. இது அவர்கள் வன்முறையால் பாதிப்படையாமல் இருக்க வழி காட்டுகின்றது.
- பெண்களுக்கு அதிகாரமளிக்கும் விடயங்களில் கவனம் செலுத்துவதனூடாக அவர்களின் சுதந்திரத்தைப் பேணுவதற்கும், அவர்களின் தலைமைத்துவ ஆற்றல், தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றை மேம்படுத்துவதற்கும் பயிற்சியளித்தல் என்ற வழி முறையினூடாக அவர்களை அதிகார முள்ளவர்களாக மாற்றலாம்.
- வன்முறைகளேற்படும்போது என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், அதனைக்கையாள எந்தெந்த நிறுவனங்களை அணுக வேண்டும். எவ்வாறு, எத்தகைய சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பன தொடர்பாகக் கல்விகற்ற பெண்களும் ஆண்களும் ஏனைய பெண்களுக்கு வழி காட்டுதல்களையும் ஆலோசனைகளையும் வழங்குதல் வேண்டும். பெண்கள் தொடர்பான சட்டவாக்கங்கள் பற்றிய புரிதலை அவர்களிடையே ஏற்படுத்த வேண்டும்.
- பெண்கள் தங்களுக்கு வன்முறைகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில், அவற்றை மூடி மறைக்காமல் அவற்றை வெளிப்படுத்தி, வெளியே சொல்லி அவற்றிலிருந்து விடுபடுவதற்கு வழிதேட வேண்டும்.
- பால், பால்நிலை வேறுபாடு, பால்நிலை சமத்துவம், பெண்களுக்கெதிரான வன்முறைகள் போன்றவை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல். இவ்விழிப்புணர்வுக் கருத்துக்களை பெண்களுக்கு மட்டுமல்லாது ஆண்களுக்கும் வழங்குதல்

அவசியமானதாகும். இவையும் ஓரளவுக்கு வன்முறையைக் குறைப்பனவாக அமையும்.

- பெண்கள் வன்முறையால் உடலியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தால் உடனடியாக மருத்துவ உதவியை நாடுவதற்கு வழிசமைக்க வேண்டும். ஏனெனில் வன்முறையால் உடற்காயங்கள், நோய்கள், விரும்பத்தகாத கர்ப்பம், பாலியல் மூலம் பரவும் தொற்றுநோய்கள் என்பன ஏற்பட்டிருக்கலாம். எனவே உடனடி மருத்துவ சேவையைப் பெற்றுக்கொள்ளல் கட்டாயமானதாகும். கடுமையான உளப்பாதிப்புகள்ஏற்பட்டால்உளமருத்துவ சேவைகளையும், உளவளத்துணையையும் நாடுதல் வேண்டும்.
- பாதிப்பேற்பட்ட பெண்களுக்கான நிவாரணம் உடனடியாக வழங்கப்பட வேண்டும். சட்டத்துறை, நீதித்துறை, காவல்துறை மற்றும் இதர நிறுவனங்கள் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- ஊடகங்கள் பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்யவேண்டும். உண்மையில் சமூகத்தை வழிநடத்தக் கூடிய தன்மை ஊடகங்களுக்குப் பெரியளவில் உண்டு. அந்தவகையில் பெண்களுக்கெதிரான வன்முறையைக் குறைப்பதற் கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். வன்முறைகளுக்கெதிராக குரல் கொடுப்பதுடன், பெண்மையை இழிவுபடுத்தும் செய்திகளை, நிகழ்ச்சிகளை பிரசுரிப்பதை, காட்சிப்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.
- எல்லாவற்றுக்கும் மேலாகப் பெண்ணொருவர் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டால் அவளைச் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தாமல், அவளுக்கு மீள் நம்பிக்கையூட்டுவதன் மூலம் குடும்பத்திற்கும், சமூகத்திற்கும், அவள் பெறுமதி மிக்கவள் என்பதனை உணரவைக்க வேண்டும். அவள் குடும்பத்தாராலும், சமூகத்தாலும் ஆதரவாக அன்பாக நடத்தப்பட வேண்டும். சமூக ஆதரவினை இன்று பல்வேறுபட்ட நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. பிரதேசமட்ட ரீதியில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பல தற்போது இப்பணியை முன்னெடுத்து வருகின்றன.

"மங்கையராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டும்" என்பதை ஒவ்வொருவரும் உணர்தல் கட்டாயமானதாகும். உண்மையில் ஒரு நாடு அபிவிருத்தியடைய வேண்டுமெனில் அந்நாட்டிலுள்ள பெண்களின் நிலையானது உயர்வடைதல் வேண்டும். பெண்கள் நாட்டின் கவண்கள் என்பதை அனைவரும் உணர்ந்து பெண்மையைப் போற்றி மதித்து வாழும் நிலை ஏற்படும் போது, அங்கு பெண்களுக்கெதிரான வன்முறைகள் இடம் பெற வாய்ப்புக் களில்லை.

**கு. கௌதமன்**

**உசாத்துணை நூல்கள்**


- பால்நிலை அடிப்படையிலான வன்முறையைக் கையாள்வதற்கான நிகழ்ச்சித்திட்ட வரைபு (2009), WDP Colombo.
- பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிராகச் செயற்படுவதற்கான ஆவணங்கள் பெண்கள் ஆராய்ச்சி நிலையம், Homagam.
- தயா சோமசுந்தரம், சிவயோகன். சா (2010) "தமிழ் சமுதாயத்தில் உளநலம்," சாந்திகம், யாழ்ப்பாணம்.
- Rboda. K. U, (2001) "Psychology of Women and Gender", John wiley & sonsines, Canada.
- WWW. genderaction.org

# இஸ்லாமும் அறிவியலும்

அறிவியலுக்கும் மதத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. அறிவியலின் முதற்பிறப்பிடமே திருமறை குர்ஆனாகும் என்பதில் ஐயமில்லை. இஸ்லாமும் அறிவியலும் என்றுமே பின்னிப்பிணைந்து நிற்பவையாகும். இஸ்லாம் என்பது ஏகத்துவத்தை பறைசாற்றும் ஒரு மார்க்கமாகும். இந்த மார்க்கத்தில் மிகவும் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு துறைசம்பந்தப்பட்ட அறிவியல் உண்மைகளை 14ஆம் நூற்றாண்டிற்கு முன்பு அருளப்பட்ட திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது என்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும். இதற்கான உதாரணங்களாக,

இறைவன் தன்திருமறையில் ஆழ்கடலும் அதன் உள்அலைகளும் பற்றிக் கூறுகின்றான் அல்லது (இவர்களுடைய செயல்களுக்கு உதாரணம்) ஆழ்கடலிலுள்ள இருள்களைப் போன்றாகும். அதனை ஒரு அலை மூடிக்கொள்கிறது. அதற்கு மேல் மற்றோர் அலை அதற்கு மேல் மேகம் (இவ்வாறு) பல இருள்கள் அதில் சில சிலவற்றுக்கு மேல் இருக்கின்றன. (இருள்களால் சூழப்பட்ட நிலையில் பார்ப்பவன்) தன் கையை வெளியாக்கி (நீட்டி)னால் அதனை அவனால் பார்க்க முடியாது என்றும் இன்னும் எவருக்கு அல்லாவின் ஒளியை ஆக்கவில்லையோ அவருக்கு (எங்கும்) ஒளி இல்லை. (அல்குர்ஆன் 24:40)

மேற்கூறப்பட்ட இந்த வசனத்தில் இறைவன், கடல்களிலும், பெருங்கடல்களிலும் அதன் ஆழத்தில் இருள்கள் சூழ்ந்து இருப்பதாகவும், அந்த ஆழத்தில் ஒருவன் தன் கைகளை நீட்டிப் பார்க்க முனைந்தால், அவனது கையை அவனே பார்க்க இயலாது என்கின்றான்.

கடல்களிலும், பெருங்கடல்களிலும் அதன் 200மீற்றர் மற்றும் அதற்கு மேற்பட்ட 1000 மீற்றர் ஆழத்தில் வெளிச்சம் என்பதை அறவே காண இயலாது. நீர்மூழ்கிக் கப்பல்கள் அல்லது நவீன சாதனங்களின் துணை இல்லாமல் 40மீற்றருக்கும் கீழே மனிதனால் எந்தவித கருவிகளின் துணையுமின்றி நீருள் 200மீற்றர் ஆழத்தில் உயிர்வாழவே இயலாது என்று நவீன அறிவியல் கூறுகிறது.

மேலும் ஆழ்கடலில் உள்ள ஆழமான இடங்களில் மேற்கூறப்பட்ட நவீன சாதனங்களை நீர்மூழ்கிக்கப்பல்கள்மற்றுமுள்ள கருவிகளின் துணையுடன் கூட ஒருவர் நீந்த இயலாது. என்பதை கடலாராட்சியாளர்கள் தற்போது கண்டறிந்துள்ளனர்.

இறைவனின் திருமறைக்குர்ஆனின் கூறப்பட்டிருக்கும் "....ஆழ்கடலிலுள்ள .......அதனை ஒரு அலை மூடிக்கொள்கிறது. அதற்கு மேல் மேகம்....." என்ற மேற்கூறப்பட்ட வசனத்தில் ஆழ்கடலிலுள்ள கடல்நீரை ஒரு அலை மூடிக்கொள்கிறது. இந்த அலையை இன்னொரு அலை மூடிக்கொள்கிறது. இந்த இரண்டாவது கட்ட அலையின் மேற்பரப்பை மேகம் மூடிக்கொள்கிறது. மேலும் இந்த இரண்டாவது கட்ட அலையின் மேற்பரப்பில் தான் நாம் காணும் மேகம் இருக்கிறது எனும் போது, குர்ஆன் கூறும் முதற்கட்ட அலை என்னவாக இருக்கும்? என்ற கேள்வி எழுகின்றது.

அதாவது கடலின் ஆழத்தில் உள்அலைகள் இருக்கின்றன என்றும், கடல்நீரின் ஆழத்தில் இருக்கக்கூடிய பல்வேறு நிலைகளிலுள்ள அடர்த்தி விகிதங்களின் வேறுபாடுகளும் கடலின் ஆழத்தை பல்வேறு அடுக்குகளாகப் பிரிக்கின்றது என்றும், அந்த அடர்த்தியின் மாறுபாடுகள் சந்திக்கின்ற இரு வேறுபட்ட அடர்த்தியின் இடைப்பட்ட நிலைகளில் தான் உள் அலைகள் காணப்படுகின்றன. என்ற உண்மை சமீபத்தில் தான் விஞ்ஞானிகள்

கண்டுபிடித்தனர். கடலின் மேற்பரப்பிலுள்ள நீரின் அடர்த்தியை விட கடலின் ஆழத்தில் உள்ள நீரின் அடர்த்தியின் விகிதம் அதிகம் காணப்படுவதால் கடலின் ஆழத்தில் ஏற்படும் உள் அலைகளை ஆழ்கடல் நீரானது மூடிக்கொள்கிறது. (Oceanography, Gross p .205)

கடலின் மேற்பரப்பில் காணப்படும் அலைகள் போலவே கடலின் ஆழத்தில் ஏற்படும் உள் அலைகளும் தகடுகளையும் முகடுகளையும் கொண்டதாகவும், மேலெழும்பிதாழ்வாகி அலை அலையாக செல்லக்கூடிய தன்மைகளைக் கொண்டதாகவும் உள்ளன. ஆனால் கடலின் மேற்பரப்பில் நாம் காணும் அலைகளைப் போல கடலின் அடியில் ஏற்படும் உள் அலைகளை மனித கண்களால் காணமுடியாது. குறிப்பிட்ட இடத்தில் காணப்படும் வெப்பம் அல்லது உப்புத்தன்மையின் மாறுபாடுகளைக் கொண்டே நாம் கடலின் ஆழத்தில் காணப்படும் பல்வேறு அருக்குகளையும் கண்டறியமுடியும் என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளார். (Oceanography, Gross p .205)

அடுத்து திருமறை பேரண்டத்தின் தோற்றம் பற்றியும் குறிப்பிடுகிறது. கோள்களைப் பற்றிய இன்றைய நவீன அறிவியலும் மற்றும் அதன் ஆய்வுகளும், கண்டுபிடிப்புகளும், கோட்பாடுகளும் இந்த வான் மண்டலங்கள் தோன்றுவதற்கு முன் இருந்த ஒரு நேரத்தில் இவையாவும் ஒரே தொகுதியாக மேகம் போன்ற புகைமண்டலம் அதிக அடர்த்தியான சூடான வாயுக்களைக் கொண்டவையாக இருந்து கொண்டிருக்கிறது. (The First There Minutes; Modern View of the Originate the Universe, Weiberg,-94-205) மேற்கூறப்பட்ட இந்தக் கோட்பாடு இன்றைய வானியல் மாற்றமுடியாத ஒரு கோட்பாடாக இருந்து வருகிறது. முன்பு எஞ்சியுள்ள புகைமண்டலங்களிலுருந்து இன்று நட்சத்திரங்கள் உருவாகி வருவதாக கண்டுபிடித்துள்ளனர். இன்று நாம் இரவில் வானத்தில் காணும் நட்சத்திரக்கூட்டம் யாவும் ஒரு காலத்தில் புகைமண்டலமாக இருந்தவைகள் தான்.

இதைப்பற்றி இறைவன் தன் திருமறையில் கூறும் போது பின்னர் வானத்தை அது புகையாக இருக்கும் போது நாடினோம் *(அல்குர்ஆன் 41:11)*

ஏனென்றால் பூமிக்கு மேலே நாம் பார்க்கக்கூடிய சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கோள்கள், சூரியகுடும்பங்கள் ஆகியவற்றை நோக்கும் பொழுது அவை அனைத்தும் ஒரே புகைமண்டலத்தில் இருந்து பிரிந்தவை தான் என்ற முடிவுக்கும், இவையாவும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவைகள் என்ற முடிவுக்கும் தான் எம்மால் வர இயலும். மேலும் இவையாவும் புகைமண்டலங்களிலுருந்து ஒன்றுடன் ஒன்று தனித்து பிரிந்து தனிதனி கோள்களாக பரிணமித்தமை என்பதை இன்றைய அறிவியல் ஆய்வுகளும் ஒப்புக்கொண்டுள்ளன. *இதையே திருமறைகுர்ஆனில் இறைவன் (ஆரம்பத்தில்) நிச்சயமாக வானமும், பூமியும் (இடைவெளியின்றி) இணைந்திருந்தன. பின்னர் அவ்விரண்டையும் நாமே பிரித்தோம் என்பதையும் இந்நிராகரிப்போர் பார்க்கவில்லையா? (அல்குர் ஆன் 21:30)*

டாக்டர் அல்பிரட்க்ரோனர்(Dr. Alfred Kroner) என்பவர் உலகப் புகழ் பெற்ற மண்ணியல் ஆய்வாளர். இவர் ஜேர்மனியிலுள்ள மெயின்ஸ் நகரில் ஜொகஹன்னஸ்கீயூடென்பர்க் (Johannes Gutenberg University) பல்கலைக்கழகத்தில் மண்ணியல் துறைச் சேர்மனாகவும் (Sherman) பணியாற்றி வருகின்றார். இவர் திருமறைகளில் கூறப்பட்டிருக்கும் வானியல் சம்பந்தமான வசனங்களை ஆய்வு செய்த பின் வானியல் பற்றி குர்ஆன் உண்மைகள் முஹம்மது நபி(ஸல்) அவர்களுக்கு எங்கிருந்து கிடைத்தது. மிகவும் சிக்கலான மிகவும் நுட்பமான தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டு சமீபத்திய ஆண்டுகளில் தான் கண்டுபிடிக்கப்பட்ட பேரண்டத்தின் தோற்றம் பற்றிய உண்மைகளைப் பற்றி அவர் வாழ்ந்த காலத்தில் அறிந்திருக்க முடியும் என்பது இயலாத காரியம் என நினைக்கின்றேன் என கூறினார். (The reference for third saying is This is the truth (Video tape) For a copy of the Organizations

listed on the last page) அணு இயற்பியல் (Nuclear. Physics) பற்றி மிகச்சிலர் கூட அறிந்திருக்க இயலாத காலத்தில் வாழ்ந்த முஹம்மது நபி(ஸல்) அவர்கள் வானியல் பற்றி தெரிந்திருப்பார் எனக் கூறமுடியாது. ஒரு உதாரணத்திற்கு அவருடைய நிலையிலிருந்து அவர் கூறியதை ஆராய முற்படுவோமானால், அவர் கூறியது போல வான் மண்டலங்களும் பூமியும் ஒரே பொருளிலிருந்து தோன்றியவையே "this is the truth"

மண்ணியல், வானியல், உயிரியல், வளி மண்டலவியல் அனைத்து அறிவியலைப் பற்றியும் இஸ்லாம் கூறிவிட தவறவில்லை.

"நிச்சயமாக (இவ் வேதம்) உண்மையானதுதான் என்று அவர்களுக்கு தெளிவாகும் பொருட்டு நம்முடைய அத்தாட் சிகளை (உலகத்தின்) பல கோணங்களிலும், அவர்களுக்குள்ளேயும் சீக்கிரமே நாம் அவர்களுக்கு காண்பிப்போம் (நபியே! உம் இறைவன் நிச்சயமாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பது உமக்கும் போதுமானதாக இல்லையா?) (திருக்குர் ஆன் 41:53)

திருக்குர்ஆனில் காணும் அறிவியல் அற்புதங்கள் பற்றிய உதாரணங்களும் நன்கு உணர்ந்த அறிவியலாளர்களின் வணக்கங்களும் நன்கறிந்த பிறகு நம்மை நாமே கேட்டுக்கொள்வதாவது.

மிகவும் சம்பத்திய காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு துறை சம்பந்தப்பட்ட இந்த அறிவியல் உண்மைகள் 14ஆம் நூற்றாண்டிற்கு முன்பு அருளப்பட்ட திருக்குர்ஆனில் தற்செயலாக இடம்பெற்றிருக்க முடியும்?

இந்தக் குர்ஆன் முஹம்மது நபி(ஸல்) அவர்களாலோ அல்லது வேறு எந்த மானிடராலோ இயற்றப்பட்டிருக்க முடியுமா?

திருக்குர்ஆன் இறைவனால் அருளப்பட்ட அவனுடைய நேரடி வாக்காக இருக்க வேண்டும் என்ற ஒன்றுதான் அதற்கான பதிலாக இருக்க முடியும். திருக்குர் ஆன் அல்லாவின் நேரடி வாக்காகும் அதை அவன் வானவர் ஜிபிரீல்(அலை) முஹம்மது நபி(ஸல்) அவர்களுக்கு இறங்கியருளினான்.

14ஆம் நூற்றாண்டுக்கு முன்பு அருள் செய்யப்பட்ட திருக்குர் ஆன் சமீப காலத்தில் நிரூபிக்கப்பட்ட உண்மைகளை கூறியது. திருக்குர்ஆன் இறைவனின் நேரடி வார்த்தை என்பதையும் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் இறைவனின் உண்மையான தூதரும் தீர்க்கதரிசியும் ஆவார் என்பதையும் இது நிரூபிக்கின்றது. மிகவும் முன்னேறிய கருவிகள் மற்றும் நவீன தொழிநுட்ப முறைகளைக்கொண்டும் சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அல்லது நிரூபிக்கப்பட்ட உண்மைகளை யாராவது ஒருவர் 14ஆம் நூற்றாண்டுக்கு முன்பு அறிந்திருப்பார் என்று எண்ணுவது அறிவிற்கு அருளப்பட்டதாகும்.

**யூ. எல். பாத்திமா றிஸ்வானா**
**பிரதேச செயலகம்**
**ஓட்டுசுட்டான்.**

# தமிழர் நோக்கில் பண்பாடு

திராவிடர் வழி வந்த பழம்பெரும் குடிகள் தமிழர். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த குடிகள் என சிறப்பிக்கப்படும் தமிழர்கள் வரலாற்றிலே தமக்கென தனியான ஒரு இடத்தைப் பிடித்து அன்றுதொட்டு இன்றுவரைசீரும்சிறப்புடனும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமக்கெனத் தனியான சமூகக் கட்டமைப்பையும் கலாசார பண்பாட்டு அம்சங்களையும் கொண்டுள்ளனர்.

தமிழ்ப் பண்பாடு மிகவும் உயரியது. தமிழினத்துக்குரிய பண்பாடானது தமிழ் சமூகம் அனைத்திலும் இருப்பதாகவும் ஏனைய சமூகத்தினரிடம் இல்லாதவையாகவும் காணப்படுகின்றன. இவை ஏனைய சமூகத்தினரிடம் இருந்து தமிழர்களைத் தனிமைப்படுத்திக் காட்டுவனவாகவும் சிறப்புப்படுத்திக்காட்டுவனவாகவும் அமைகின்றன.

பண்பாடு என்பது மொழியின் கூறு. தமிழர்களைத் தனிமைப்படுத்திக் காட்டுவது மொழி. இது பண்பாட்டின் அடிப்படை அம்சம். பண்பாட்டை வெளிப்படுத்தும் சாதனம். மொழியும் பண்பாடும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. ஒரு மொழியைப் பேசும் இனம் அதைச்சார்ந்த பண்பாட்டின்படி செயற்படும். பண்பாடு சிதைந்தால் மொழியும் சிதையும். மொழி சிதைந்தால் இனம் அழியும்.

தமிழ் என்ற ஒரு சொல்லிலேயே மொழியையும் இனத்தையும் குறித்து நிற்கும் எமது சமுதாயம் தனக்குரிய பண்பாட்டையும் தமிழர் பண்பாடு என்றே குறிப்பிடுகின்றது. மாற்றங்களை உள்வாங்காத எந்த ஒரு சமுதாயமும் வளர்ச்சியடையாத சமுதாயமாகவே காணப்படும். காலத்தின் மாற்றத்திற்கேற்ப தமிழர் பண்பாடும் மாற்றங்களை உள்வாங்கப் பின் நிற்கவில்லை. அந்தவகையில் தமிழர் சமுதாயமும் மாற்றங்களை உள்வாங்கி நன்கு வளர்ச்சியடைந்த சமுதாயமாகவே காணப்படுகின்றது.

கல்வி, கலை, கலாசாரம், நடை, உடை, பாவனை என அனைத்திலுமே தமக்கென தனியான ஒரு இடத்தைக் கொண்டவர்கள் தமிழர்கள்.

திண்ணைக் கல்வியில் தொடங்கிய தமிழர் கல்வி இன்று விண்வெளி வரை சென்றிருந்தாலும் தனக்குரிய பண்பிலிருந்து மாறவில்லை. தமக்குரிய தனியான இடத்தையும் தக்கவைத்துக்கொண்டு காலத்திற்கேற்ப மாற்றத்தையும் உள்வாங்கி பார்போற்றுமளவிற்கு வளர்ந்துள்ளது தமிழ் மொழியும் தமிழர் தம் பண்பாடும். ஔவையார்,திருவள்ளுவர் கூறிய தமிழர் பண்பாட்டின் வழிநின்று மாறாது ஒழுகி இன்றும் கல்வியில் சிறந்து விளங்குகின்றனர்.

கலை என பார்க்கும் போது இயல் இசை நாடகத்துடன் கட்டட, சிற்ப, ஓவியக்கலைகளும் தமிழர் பண்பாட்டை தனிமைப்படுத்தி சிறப்பித்துக் காட்டுவனவாக அன்று தொட்டு இன்றுவரை அமைந்துள்ளன. மேற்குறிப்பிட்ட அனைத்து கலை அம்சங்களையும் நாம் ஒரே இடத்தில் இன்றும் காணலாம். அவைதான் எம் பிரதேசங்களுக்கு என்றுமே ஒளி கொடுக்கும் கோவில்கள்.

கலாசாரம் எனும்போது சமயச் சடங்குகள் ஏனைய விழாக்கள் போன்றவை நடைபெறும் விதத்தைப் பார்த்தால் அவை ஏனைய சமூகத்தினரிடம் இருந்து வேறுபட்டவையாக அமைந்திருப்பதைக் காணலாம். இங்கு இவர்களின் உணவுப் பழக்கவழக்கம், உடை அணியும் முறைகள் அனைத்திலுமே தனியான ஒரு வித்தியாசத்தை உணரலாம்.

தமிழர் வாழ்வியலில் என்றுமே ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவையாக காணப்படும் இயற்பெயர்கள், இறைவன், இறைவி, ஆறுகள், மலைகள், ஊர்களின் பெயர்கள் அனைத்துமே பண்பாட்டுடன் இணைந்தவையாகவே அமைகின்றன.

அன்று தொடக்கம் இன்று வரை அனைவராலும் தமிழர் பண்பாட்டில் முக்கியமாகப் பேசப்படும் ஒரு விடயம் கற்பு. தமிழில் கற்பு என்பது உயர்ந்த பண்பாகப் போற்றப்படும் ஒன்று. பொது நிலையில் கற்பு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் பால் ஒழுக்க உறவை வரையறுக்கும் ஒரு பண்பு. எந்தச் சமூகத்திலும் அதன் கட்டுக்கோப்பைக் காக்கவும் அதன் சுய வளர்ச்சியை உறுதி செய்யவும் அவசியமாக இருக்கும் பண்பு. இந்த பண்பு ஒவ்வொரு சமூகத்திலும் அதன் தேவைக்கு ஏற்றபடி ஒவ்வொரு விதமாக இருக்கலாம். ஒருவனுக்கு ஒருத்தி ஒருத்திக்குப் பலர் போன்ற பலவும் வெவ்வேறு சமூகங்களில் வகுக்கின்ற அந்தந்தச் சமூகங்களுக்குத் தேவையான கற்பு நெறிகள். ஒருத்திக்கு ஒருவன் என்ற கற்பு நிலையே தமிழ்ப் பண்பாடாகப் பேசப்படுகின்றது. ஏகபத்தினி விரதன் பிறன்மனை நோக்காப் பேராண்மை என்று ஆண் நிலையில் கற்பு பேசப்பட்டாலும் கற்பு பெண்ணின் ஒழுக்க நெறியாகவே நடைமுறையில் எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

இப்படி நடக்கவேண்டும் என்ற நடத்தை விதிகளும் இது இப்படி இருக்கவேண்டும் என்ற விதிமுறைகளும் பண்பாட்டின் கூறுகளே. இங்கு அடிப்படையான கூறாகக் காணப்படுவது வாழ்க்கையை அர்த்தப்படுத்திக் கொள்வது. உண்பது உறங்குவது உடலுறவு கொள்வது மட்டுமே மனித வாழ்க்கை அல்ல என்று விலங்குகளிடமிருந்து வேறுபடுத்தி தன்னைச் சுற்றியுள்ள மனிதர்களையும் பிற உயிர்களையும் இயற்கைப் பொருட்களையும் தன் வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி அவற்றுக்குத் தன்வாழ்க்கையில்இடம்தந்துதன் இருப்பைப் புரிந்து கொள்வதே வாழ்க்கையை அர்த்தப்படுத்திக் கொள்வதாகும். ஒவ்வொரு சமூகமும் தன்னைக் காத்துக் கொள்ளும் வகையில் தன் சமகால வாழ்க்கையை அர்த்தப்படுத்திக் கொள்கிறது. இது பரிணாம நியதி. இதனாலேயே பண்பாட்டு மாற்றம் இருக்கிறதே தவிர பண்பாட்டு அழிவு இல்லை என்கிறோம். ஒரு சமூகத்தினர் முற்றிலுமாக அழியும் போது அல்லது ஒரு சமூகத்தினர் தங்கள்பண்பாட்டை விட்டு விட்டு இன்னொரு சமூகத்தினரின் பண்பாட்டை முற்றிலுமாக ஏற்றுக்கொள்ளும் போது பண்பாட்டு அழிவு நேரலாம். ஆனால் இது அபூர்வம்.

வாழ்க்கையின் அர்த்தம் பண்பாடு நிலையானது அல்ல. அது காலம் தோறும் மாறும். மாற்றம் தவிர்க்க முடியாதது. ஏனென்றால் மனிதனைச் சுற்றியிருப்பவை மாறுகின்றன. அந்த மாறுதல்களோடு இணைந்து வாழ்வைப் புரிந்து கொள்வதும் மாறுகின்றது. தமிழ்ப் பண்பாடு மாறவில்லை என்பது உண்மைக்குப் புறம்பானது நடக்க முடியாதது. அதே நேரம் வெளி வடிவம் மாறினாலும் அடிப்படைத் தன்மை மாறாமல் இருக்கலாம். இன்றைய எமது பண்பாடும் இத்தகைய தன்மை கொண்டதாகவே காணப்படுகின்றது.

**செல்வி அ. நளாயினி**
பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான்.

# காதினுள் பாயும் நஞ்சு

"பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த தாது உண்பறவை பேதுறல் அஞ்சி மணிநா ஆர்த்தாண் வினைத்தேரன்"

-அகநானூறு (4:10-12)

நாம் இரைச்சல் மிகுந்த ஒரு சமூகம். நமது தெருக்களெங்கும் ஒன்றையொன்று முந்தித்தள்ளியவாறு விரைந்து கொண்டிருக்கும் வாகனங்களின் உறுமல்கள், அவற்றின் ஒலியெழுப்பிகளின் பிளிறல்கள், வரிசைகட்டி நிற்கும் ஒலிபெருக்கிகளின் கதறல்கள் என்றும் சத்தவெள்ளம் கரைபுரண்டோடுகிறது. தொழிற்சாலைகளில் இடைவிடாது இயங்கிக்கொண்டிருக்கும் இயந்திரங்களின் கர்ணகடூர ஒலி கவிந்து கனக்கிறது. சமூக அரங்குகளை திலையிசைப் பாடல்களும் துள்ளல் இசைக்கருவிகளும் அதிரவைத்துக் கொண்டிருக்கின்றன. வீடுகள் தோறும் உச்ச ஸ்தாயியில் அலறித் தீக்கும் வானொலி - தொலைக்காட்சி அலை வரிசைகள், அரவை-சலவை இயந்திரங்களின் மூலம் ஒலி லைமுடுக்குகளிலெல்லாம் பிரவாகித்தவாறு உள்ளது. அமைதிதவழ வேண்டிய ஆலயங்களும் தப்பிப்பதாக இல்லை. மந்திர உச்சாடனம், பிரித் ஓதுதல், ஜும்மா தொழுகை, தேவ ஆசீவாதம் என்று வேறுபாடு இல்லாமல் எல்லா மதச்சடங்குகளுமே ஒலிபெருக்கிகளில் தான் ரத்துக்கொண்டிருக்கின்றன. மொத்தத்தில், சத்தத்தின் அடை மழையில் இருந்து ஒருவர் ஒதுங்குவதற்கு பெரும்பாலும் இடமே இல்லை என்ற நிலைதான்.

எம்மை அறியாமலேயே ஒலி வெள்ளத்தில் மூழ்கிக் கொண்டிருக்கும் நாம் இந்த இரைச்சல்கள் குறித்து அதிகம் பொருட்படுத்துவதில்லை. இவற்றை உறக்கத்துக்கும் உரையாடல்களுக்கும் நேரும் தொந்தரவுகள் என்று மட்டும்தான் ணிக்கொண்டிருக்கிறோம். ஆனால் சத்தங்களின் சூழல் சீர்கேடுகள் தொடர்பான அண்மைக்கால ஆய்வின் முடிவுகளோ செவிப்பறையில் ஓங்கி அறைகின்றன. இந்த ஆய்வுகளெல்லாம் தண்ணீரில் கலக்கும் கழிவுகளைப்போல, காற்றில் குவியும் புகை வேதிகளைப்போல காற்று வந்து காதினுள்ளே வீசிவிட்டுப் போகும் இரைச்சல்களும் உளநலத்துக்கும் உடல் நலத்துக்கும் பேரூறு செய்யும் மாசுகள் தான் என்பதை நிரூபணம் செய்துள்ளன.

லக்சம்பர்க்கில் டாக்டர் ஜோன்சன் என்பவர் தொழிலாளர்களைப் பல்வேறு ஒலிச்சூழலில் பணிபுரிய வைத்து ஆராய்ந்து பார்த்துள்ளார். முடிவுகள் அவரைத் திடுக்கிட வைத்தன. ஒலி அதிகமான சூழலில் பணிபுரிந்தவர்கள் மைநிறைந்தவர்களாகவும், ஆதிக்க மனப்பான்மை கொண்டவர்களாகவும், பீதிஉணர்வு மிக்கவர்களாகவும் மாறியிருந்தனர். இத்தாலியில் டாக்டர் மாகெரி பல்கலைக்கழக மாணவர்களை வைத்து ஒரு சோதனை நடத்தினர். பல்கலைக்கழகத்தின் மிகச் சிறந்த மாணவர்கள் எண்பது பேரை தேர்வு செய்து தொழிற்சாலையொன்றின் சந்தடிமிக்க சூழலில் வினாக்களுக்கு விடையளிக்க வைத்தனர். எண்பது பேரும் படிப்பில் சூரர்கள். அவ்வாறு இருந்தும் இரைச்சலின் அளவு அதிகரிக்க அவர்கள் தவறு செய்வதும் அதிகமாகிக் கொண்டே சென்றுள்ளது.

அதிக ஒலிகளுக்கு இடையில் மனிதர் கள் வாழ நேரிடும் போத அவர்கள் நிறக் குருடர்கள் ஆகிவிடுகிறார்கள் என்பதைப் பிரான்ஸில் நிகழ்த்தப்பட்ட ஒரு சோதனை வெளிப்படுத்தியுள்ளது. பதினைந்து நிமிடங்களுக்கு உரத்த ஒலி உள்ள சூழலில் நிற்கும் ஒருவர் ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக நிறக்குருடால் அவதிப்பட நேரிடுமாம். நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் அதிக ஒலியளவால்

பாதிக்கப்படும் போது அவர்களுக்கு இரத்தக்குழாய்களில் கொழுப்புக் படிவு ஏற்படவும், இரத்தக்குழாய்கள் சுருங்கி இரத்த ஓட்டம் தடைப்படவும், மாரடைப்பு ஏற்படவும் வாய்ப்புகள் அதிகம் உண்டு எனவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் கொழுப்புச் சேர்ந்த முன்னணி இதய நோய் நிபுணர் டி.பீ. அத்துக்கோறள. இவர், தனது நெருங்கிய நண்பர்களில் ஒருவர் பல நாட்களாகத் தினமும் அதிகாலை 5 மணிக்கு மார்புவலிக்கு ஆட்பட்டதாகவும் இதற்குக் காரணம் அந்த நேரத்தில் பௌத்த விகாரைகள் ஒலிபெருக்கும் 'பிரித்' சத்தம்தான் எனவும் கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார். மேலும், தனது இதய நோயாளிகளில் மேற்குறிப்பிட்ட நண்பர் உட்பட இன்னும் பலர் ஒலிபெருக்கிகளின் 'பிரத்' சத்தம் காரணமாகவே அதிகாலைவேளைகளில் மரணமடைய நேர்ந்ததாகவும் பதிவு செய்துள்ளார்.

சமீபத்தில் இந்திய மருத்துவக் கழகமும் தன் பங்குக்கு ஆய்வுகளை மேற்கொண்டு முடிவுகளை வெளியிட்டுள்ளது. தினமும் உரத்த ஓசைகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு மன அழுத்தம், எதற்கெடுத்தாலும் படபடப்பு, எதிலுமே மனதை ஒருமுகப்படுத்த முடியாமை, களைப்பு, உணவுக்குழாயில் அழற்சி ( அல்சர்) எனப் பலவும் வரும் எனப் பயமுறுத்தியுள்ளது. கூடவே, இன்னொரு குண்டையும் தூக்கிப் போட்டிருக்கிறது. வெகு விரைவில் இந்திய மாநகரங்களில் உள்ளவர்களில் மிகப் பெரும்பாலானவர்கள் ஏதோ ஒரு வகையில் செவிப்புலன் பாதிப்புக்கு ஆளாகியிருப்பர் என்பதுதான் அது. இந்திய மருத்துவக்கழகத்தின் இந்த அறிவிப்பை அலட்சியப்படுத்துவதற்கு இல்லை. சென்னை கிறிஸ்தவக் கல்லூரியின் சமூகப் பணித்துறை சென்னை மாநகரின் வணிகக் கேந்திரமையங்கள், தொழிற் பேட்டைகள், குடியிருப்புப் பகுதிகள், அமைதி வலயங்கள் என்று வெவ்வேறு பகுதிகளிலுமே அனுமதிக்கப்பட்ட எல்லையையும் தாண்டி ஒலியின் அளவு ஏகத்துக்கும் எகிறியிருப்பது தெரியவந்துள்ளது. அனுமதிக்கப்பட்ட அளவிலும் பார்க்கச் சென்னை நகரின் ஒலி அளவு 50 விழுக்காடால் அதிகரித்திருப்பதால் விரைவிலேயே சென்னை நகரவாசிகள் அரைச்செவிடர்களாகும் ஆபத்து இருப்பதாக இன்னுமொரு ஆய்வறிக்கை எச்சரித்திருக்கின்றது.

இவற்றுக்கெல்லாம் மேலாக அதிகப் போக்குவரத்து இரைச்சல், சனந்தடி காரணமாக 'ரினைற்றல்' (Tinnitus) எனப்படும் வேறொரு வினோத நோயும் உலா வருகிறது. உட்காதின் நத்தைச்சுருள் கால்வாயில் சீப்பு ஒன்றில் பற்கள் அமைந்திருப்பது போல ஆயிரக்கணக்கான மயிர்க்கலங்கள் வரிசைப்படுத்தப்பட்டிருக்கும். ஒலியை வாங்கி மின் துடிப்புகளாக மூளைக்கு அனுப்பி வைப்பவை இவைதாம். சிலந்திவலை இழையொன்றின் தடிப்பளவேயான இம்மயிர்க்கலங்கள் அளவுக்குமீறிய சத்தங்களை வாங்க நேரிடும்போது தாங்கமுடியாமல் ஒடிந்து போகின்றன. இப்படி, மயிர்க்கலங்கள் உடைந்து போனவர்களில் சத்தமே இல்லாத அமைதியான நேரத்தில் கூட காதுகளில் சில்வண்டின் இரைச்சல் போல நாள் பூராவும் சத்தம் கேட்டுக்கொண்டேயிருக்கும். இந்தப் பாதிப்பைத்தான் ரினைற்றல் என்கிறார்கள். ரினைற்றலால் பாதிக்கப்படுபவர்கள் கடைசியில் செவிட்டுத் தன்மைக்கு ஆளாகவும் நேரிடலாம். தொழில் வளர்ச்சியடைந்த இயந்திரடய நாடுகளில் இந்தக் கணக்கானோர் இதனால் தங்களது அன்றாட வாழ்க்கையை வாழமுடியாமல் அவதிப்படுகிறார்கள். போர்க் களங்களில் பங்கேற்ற இராணுவத்தினர்களிலும் ரினைற்றஸின் தாக்கம் பரவலாக உணரப் பட்டுள்ளது.

இரண்டாம் உலகப்போரின் போது ஜேர்மனியின் மியூனிச் நகரம் கடுமையான விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களுக்கு

இலக்கானது. அப்போது அங்கிருந்த விலங்குக் காட்சிகத்தில் வசித்த 'போனபோ' குரங்குகள் எல்லாம் இறந்து போயின. அவற்றின் உடலில் காயங்கள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. குண்டு வெடிப்பு அதிர்வுகளினால் இதயம் பாதிக்கப்பட்டே இறந்தனவாம். போனபோ (Bonobo) மனிதக் குரங்குகளில் மனிதர்களுக்கு மிகவும் நெருக்கமான இனம். பெண் ஆதிக்கச் சமூகமான இவை, சிம்பன்சிகளைப் போல அல்லாது மிகவும் சாத்வீகமாகவே வாழ விரும்புபவை. அமைதி விரும்பிகளான இவற்றின் மெல்லிதயங்களால் குண்டுச் சத்தங்களைத் தாங்க இயலவில்லை. வன்னிப் பெருநிலப்பரப்பில் ஸ்ரீலங்கா போர் விமானங்கள் குண்டு வீச்சுக்களை நிகழ்த்திய போது இளவயதினர் பலர் மயங்கிச் சரிந்தது இங்கு நினைவில் கொள்ளத்தக்கது. குண்டு வெடிப்புச்சத்தங்கள் மாத்திரமல்ல; குண்டு வீச்சு விமானங்களின் பறத்தலுமே ஆபத்தானதுதான். போர் விமானங்கள் 'சுப்பர்சோனிக்' (Super sonic) எனப்படும் மிகையொலி விமானங்கள் ஆகும். அதாவது ஒலியின் வேகமான மணிக்கு 1230 கிலோமீற்றர்கள் என்பதையும் தாண்டி மிகையான வேகத்தில் பறப்பவை. இவை ஒலியின் வேகத்தையும் கடந்து மிகையொலி வேகத்தில் பறக்கும் போது வளிமண்டலத்தில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி இடியென முழங்குகின்றன. இந்த விமானங்களின் முழக்கங்களும் குண்டு வெடிப்புச் சம்பவங்களும் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்ட ஈழத்தமிழர்களிடையே முறையான ஆய்வுகளை மேற்கொண்டால் ஒலிமாசின் புதிய பயங்கர முகங்கள் மேலும் தெரிய வரலாம்.

ஒலியின் முக்கிய இயல்புகளில் ஒன்றான ஒலியின் உரப்பு (Loud-ness) அல்லது ஒலித்தீவிரம் 'டெசிபெல்' (Decibel) என்கிற அளவு முறையாலேயே அளவிடப்படுகிறது. ஒரு 'பெல்' என்பது 10 டெசிபெல்கள். ஆனால், இரண்டு பெல் என்பது 20 டெசிபெல்கள் அல்ல; 100 டெசிபெல்கள். இங்கு டெசிபெல் என்பது பத்தின் மடங்குகளாகும் (தொலைபேசியைக் கண்டுபிடித்த கிரஹாம் பெல் அவர்களது நினைவாகவே ஒலியளவுக்கு இந்தப் பெயர்). நமது மூச்சுக்காற்று 10 டெசிபெல்கள் என்பதில் இருந்து மரங்களின் சல சலப்பு 20 டெசிபெல்கள், சாந்தமான உரையாடல் 30 டெசிபெல்கள், வானொலி இசை 50 டெசிபெல்கள், உரத்த பேச்சு 60 டெசிபெல்கள் என்று அத்தனை ஒலிகளையும் அளவெடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த அளவீடுகளை அறிந்து கொள்வதற்கென கருவிகள் (Sound Level Meters) உள்ளன.

கேட்டலைப் பாதிக்கக்கூடிய எந்த ஒரு ஒலியையுமே சத்தம் என்று வரையறை செய்திருக்கிறார்கள். பொதுவாக 50 டெசிபெல்களுக்கும் அதிகமான ஓசை நிரம்பிய அறையில் அமைதியான உரையாடலைத் தெளிவாகக் கேட்க முடியாது. அதுவும், 70 டெசிபெல்களை எட்டிவிட்டால் எதுவுமே கேட்காது. இதன் அளவு 120 டெசிபெல்களுக்கு (ஒலி பெருக்கிகளின் ஒலி அளவு) போய்விட்டால் காதுகளுக்குத் துன்பம்தான். 130 டெசி பெல்களுக்கும் மேல் போவது அதிகம் ஆபத்தானது. இயந்திரக் கோளாறுகளுடைய மோட்டார் சைக்கிள் எழுப்பும் ஒலி 105 டெலிபெல்கள். இது, சிலரது செவிப்புலனை ஒரு மணி நேரத்தில் பாதித்து விடும். பேருந்துகளிலும் சரக்குந்துகளிலும் நீதிமன்ற தடையுத்தரவையும் மீறிப் பயன்படுத்தப்படும் காற்றொலியெழுப்பகள் (Air Horn) கதறும் சத்தத்தின் அளவு 135 டெசிபெல்கள். இரண்டே நிமிடங்களில் மயிர்க்கலங்களில் சிலவற்றைச் சிதைக்க இது போதும். ராக் இசை, ஸ்டீரியோ கருவிகள் சிலவற்றின் ஒலி அளவுகளும் 135 டெசிபெல்கள் தான். இயந்திர ஓசைகளும் வாகனங்களின் இரைச்சல்களும் மட்டுமே காதுகளைக் கெடுக்கக் கூடியவை என்பதல்ல. இசையுமே அது சங்கீதமாக இருந்தால்கூட பெரும் ஓசையாகும் போது நாசத்தையே பரிசாகத் தருகிறது.

இத்தனை நஞ்சுகளையும் சுமந்து கொண்டுவரும் சத்தங்களின் மத்தியிலேயே பகலில் மட்டுமல்ல; இரவிலும் பொழுதைக் கழிக்க வேண்டியதாய் உள்ளது. உலக சுகாதார நிறுவனம் அமைதியான ஆழ்ந்த தூக்கத்துக்கு 35 டெசிபெல்கள் அளவுடைய ஒலிச் சூழலைப் பரிந்துரை செய்திருக்கிறது. இதன்படி கடிகாரம் ஒன்றின் டிக்.. டிக் ஓசையே தூக்கத்தைக் கெடுக்காத தாலாட்டாக இருக்க முடியும். ஆனால், உலகில் எத்தனை பேருக்கு இப்படி ஒரு நிசப்தமான படுக்கையறை வாய்ந்திருக்கிறது? மிகப் பெரும்பாலானோர் 50 டெசிபெல்கள் சூழலிலேயே நித்திரை என்ற பெயரில் புரண்டு கொண்டிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சத்தத்தை உறிஞ்சும் இயற்கை வடிகட்டிகளான மரங்களை கட்டிடக் காடுகளின் நடுவே தொலைக்கத் தொடங்கிய பிறகு சத்தம் ஒரு பெரும் அரவமாகப் படுக்கை அறைகள் வரையிலும் நுழைந்து பயமுறுத்திக் கொண்டிருக்கிறது.

உரத்த ஒலி காதினுள் பாயும் நஞ்சுகள்தான் என்பது வெளிச்சத்துக்கு வந்ததுமே மேற்கு நாடுகள் விழித்துக் கொண்டன. கைத்தொழில் அபிவிருத்தி காரணமாக முதலில் ஒலிமயமான இந்நாடுகள் அவற்றைக் களைவதிலும் முந்திக்கொண்டு சிரத்தையெடுத்து வருகின்றன. ஐரோப்பிய நாடுகள் பலவும் தமது பிரதான நகரங்களில் நிலவிவரும் ஒலி அளவுகளைக் குறித்துக்காட்டும் சத்த வரைபடங்களை (Noise maps) தயாரித்து அவற்றைப் பொது மக்களின் பார்வைக்குக் கொண்டு சென்றுள்ளன. நெதர்லாந்து சத்தத்தினால் ஏற்படக்கூடிய சீர்கேடுகளிலிருந்து குடிகளைக் தற்காத்துக் கொள்ள வேண்டி 50டெசிபெல்களுக்கு மேல் ஒலிமிகுந்த பிரதேசங்களில் குடியிருப்புகளை நிறுவுவதற்குத் தடை விதித்திருக்கிறது. பிரித்தானியாவில் அளவை மீறி ஒலியெழுப்புவர்களிடமிருந்து தண்டப்பணம் அறவிடும் வகையில் உள்ளூராட்சி நிர்வாக அலகுகளுக்கேகூட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 2007 டிசம்பரில் நிகழ்ந்த சம்பவம் இது. இத்தாலியின் மலைக் கிராமம் ஒன்றில் விவசாயி ஒருவர் வளர்த்து வந்த சேவல் அதிகாலையில் சற்று உரத்துக் கூவும் வழக்கமுடையது. அயலவர்கள், சேவல் எழுப்புகின்ற சத்தத்தினால் தமது தூக்கம் கெடுவதாக வழக்கு தொடுத்ததில் நீதிமன்றம் தண்டமாக விவசாயியிடம் 200 யூறோ அறவிட்டுள்ளது. மேலும், சேவலை அப்புறப்படுத்துமாறும் உத்தரவிட்டிருக்கிறது. இப்படி ஒலி மாசுபாடுகள் தொடர்பான விளிப்புணர்வும் ஒலிமாசுபாடுகளை கட்டுப் படுத்துவதற்கான கடுமையான சட்ட விதிகளும் கைகோத்துச் செயற்படுவதை வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றை பொது இடங்களில் செல்லிடபேசிகளில் சிணுங்கல்களைக்கூட கேட்க முடிவ தில்லை.

மணிகள் கட்டப்பட்ட தேரிலே வருகின்ற தலைவன் அத் தேரின் மணி ஒளி வண்டுகளின் அமைதியைப் பாதிக்கும் எனக் கருதி அம்மணி நாவைக் கட்டி தேரை ஓட்டி வந்ததாக அகநாநூறு பகிர்கிறது. ஆனால் சங்கப் பழந்தமிழில் புழகாகிதம் கொள்ளும் என்றே தமிழ்ச் சமூகம் மதச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பவற்றின் பேரில் அடுத்தவர் காதுகளுக்குள்ளேயே நின்று சப்பதித்து கொண்டிருக்கிறது. நாம் இரைச்சல் மிகுந்த ஒரு சமூகம் மாத்திரமல்ல விரும்பியோ, விரும்பாமலோ சத்தங்களை மோகிக்கும் ஒரு சமூகமாகவும் மாறிவிட்டிருக்கிறோம்.

**பொ. ஐங்கரநேசன்**

# இன்றைய நிலையில் நாட்டுப்புற நிகழ்த்து கலைகள்

நாட்டுப்புற நிகழ்த்துக்கலைகளின் இன்றைய நிலை குறித்து நமக்கு பல்வேறு ஐயங்கள் தோன்றுகின்றன. இக்கலைகளில் பிற்படுத்தப்பட்டுள்ள, தாழ்த்தப்பட்ட மற்றும் நாடோடி மக்களுள் பொருளாதாரத்திலும் கல்வியிலும் தாழ்வுற்ற நிலையில் உள்ளவர்களே ஈடுபட்டு வருகின்றனர். இவற்றுக்கான பார்வையாளர்களும் இத்தகைய சமூகப் பொருளாதார நிலையில் உள்ளவர்களே இவர்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் மேம்பாடு அடையும்போது இக்கலைகள் தொடர்ந்து உயிர்புடன் இருக்குமா?

தொலைத்தொடர்பு சாதனங்களின் அசுர வளர்ச்சி காரணமாக மூலை முடுக்குகளில் நடைபெறும் உலகத்தின் கலைநிகழ்ச்சிகள் எல்லாம் வீட்டுக்கதவைத்தட்டும் இக்கால கட்டத்தில் நாட்டுபுற நிகழ்த்துகலைகள் இவற்றோடு போட்டி போட்டு வெற்றி காண இயலுமா?

திரைப்படங்களால் நாடகவளர்ச்சி தடைப் படுகின்றது என்றும் தொலைக்காட்சிகளால் திரைப்படத்துறை நலிவுறுகிறது என்றும் ஒருபுறம் கூறிவந்தாலும் மற்றொரு புறத்தில் இத்துறைகளுக்கிடையே ஏற்படும் போட்டி காரணமாக சிறந்த படைப்பு க்கள் உருவாக வாய்ப்புக்கள் ஏற்படுவது போல நாட்டுப்புற நிகழ்த்து கலைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு மேம்பாடு அடைய வாய்ப்புகள் உண்டா? தற்காலத்தில் பரவலாக நாட்டுப்புற கலைகள் நலிந்து வருகின்றன என்ற கருத்து ஓங்கி ஒலிக்கின்ற நிலையைக் காணமுடிகிறது இக்கூற்றில் உண்மை இருக்கிறதா? உண்மையாயின் அந்த நலிவிலிருந்து நாட்டுப் புறக் கலைகளை காப்பாற்ற இயலுமா? இயலுமாயின் எவ்வாறு? இதற்காக அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் ஏதேனும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனவா?

“ஆம்” எனில் என்னென்ன முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன? அம்முயற்சிகள் வெற்றியடைகின்றனவா? அதன் பலன்கள் கலைஞர்களைச் சென்றடைகின்றனவா? கலைஞர்கள் இக்கலைகளின் மேம்பாட்டுக்கும் தங்களின் மேம்பாட்டுக்கும் ஏதேனும் முயற்சி மேற்கொண்டு வருகின்றார்களா? “ஆம்” எனில் எத்தகைய முயற்சிகள்? அவை வெற்றிபெறுகின்றனவா? என்பன போன்ற ஏராளமான வினாக்களுக்கு விடைகாண வேண்டியது அவசியமாகும்.

பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மற்றும் நாடேடி மக்களின் வாழ்க்கை மேம்பாட் டிற்காக அரசால் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக இச்சமூக மக்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் ஓரளவு மேம்பட்டு வருகின்றனர். இதனால் இம்மக்களிடையே தோன்றியுள்ள எழுச்சி காரணமாகப் பல்வேறு சாதி மற்றும் அரசியல் இயக்கங்கள் உருவாகி வருகின்றன. தாங்கள் நீண்டகாலம் ஏமாற்றப்பட்டு வந்ததாக இவர்கள் உணரத் தெடங்கி உள்ளனர். தங்களின் பண்பாட்டு அடையாளங்களைத் தேடவும் அதனை மீட்டெடுக்கவும் தங்களுக்கு தாழ்வினைத் தரும் அடையாளங்களைப் புறங்கணிக்கவும் இவர்கள் முயல்கின்றனர். இதன் விளைவாக நாட்டுப்புறக் கலைகள் பலவற்றைத் தங்களின் பண்பாட்டு அடை யாளங்களாகவே இவர்கள் கருதுகின்றனர். பறையறிவித்தல் தொழிலோடு ஒட்டிக்கொண்டிருக்கும் சாதி இழிவு காரணமாக பறையடிக்க மறுக்கும் பறையர் இன மக்கள் அதனையே ஒரு கலை என்ற நிலையில் ஏற்கின்றனர். அம்மக்களோடு தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களும் அக்கலையில்

ஈடுபாடு காட்டுவதைக் கணமுடிகின்றது இத்தகைய சமூகப்போக்குகள் காரணமாக நாட்டுபுற நிகழ்த்து கலைகள் உயிர்ப்புடன் வளரச்சி பெறுவதை, போற்றப்படுவதை காண முடிகிறது. இதன் விளைவாகப் படித்தவர்களும் இவை நம்முடையவை என்ற உணர்வோடு அக்கலைகளைப் பயில்கின்றனர். தலித் கலைவிழாக்கள் உள்ளிட்ட பல்வேறு இயக்கங்களில் நாட்டுப்புற நிகழ்த்து கலைகள் முன்னிறுத்தப்படுகின்றன:, நிகழ்த்தப்படுகின்றன, விவாதிக்கப்படுகின்றன.

நிகழ்த்து கலைகளின் நிகழ்த்துனர்களும் பார்வையாளர்களும் கல்வியறிவு மற்றும் சமூக பொருளாதாரம் மேம்பாடு அடைவதால் நாட்டுப்புறக் கலைகள் அழிந்துவிடும் என்று ஐயுறத் தேவையில்லை. அதே நேரத்தில் நாட்டுப்புற நிகழ்த்து கலைகள் நிகழ்த்தப்படும் சூழல்கள், நிகழ்த்தப்படும் முறைகள் ஒப்பனைகள் பொருண்மை முதலியவை அப்படியே பாதுகாக்கப்படும் என்று கூற இயலாது.

தொலைத்தெடர்பு சாதனங்களின் அசுர வளர்ச்சி காரணமாக எளிதில் வீட்டிலேயே உலகத்தின் சகல விதமான பொழுதுபோக்கு அம்சங்களும் வந்து விடுவதும் சமீப காலத்தில் நடந்துவரும் மிகப்பெரிய மாற்றமாகும். இதனால் மக்களின் நடமாட்டமே முடக்கப்பட்டு வருகின்றது என்று கூறினால் மிகையாகாது. படிக்கும் பழக்கம் மற்றும் திறன் பாதிக்கப்பட்டு உடல்நலமும் மனநலமும் பாதிக்கப்படுகின்றன. திரைப்படத்துறையும் நாடகத்துறையும் உள்ளிட்ட பல்வேறு பொழுது போக்குத்துறைகள் இதனால் பாதிக்கப்படுகின்றன. அதே நேரத்தில் அத்துறைகளில் ஆரோக்கியமான போட்டி ஏற்படுவதற்கும் இந்நிலையே காரணமாக இருக்கிறது. அத்தகைய போட்டி நாட்டுப்புறக் கலைத்துறையில் ஏற்படுமா? அத்தகைய போட்டியில் ஈடுபடும் அளவுக்கு நாட்டுப்புறக்கலைஞர்கள் சக்தி பெற்றவர்களா? என்பதெல்லாம் வினாக்குறியாகவே உள்ளன. இத்தகைய தொலைத்தொடர்பு சாதனங்கள் நாட்டுப்புற நிகழ்த்து கலைகள் பலவற்றை ஒளி, ஒலி பரப்புவதன் காரணமாக மக்களிடையே அவற்றைப் பற்றிய ஆர்வத்தைத் தூண்டியுள்ள நிலையையும் காணமுடிகின்றது. குறிப்பிட்ட வட்டாரத்திற்கு மட்டுமே உரிய குறிப்பிட்ட சூழலில் குறிப்பிட்ட பார்வையாளர்கள் மட்டுமே பார்க்கக்கூடிய கலைகளெல்லாம் திரைப்படம் வாயிலாகவோ தொலைக்காட்சி வாயிலாகவோ அனைத்துத் தரப்பு மக்களிடம் அறிமுகமாகும் போக்கினைத் தகவல் தொடர்புச்சாதனங்களே உருவாக்கி வருகின்றன. போட்டி காரணமாகப் பார்வையாளர்களைக் கவருவதற்காகப் பல்வேறு புதுப்புது அம்சங்களைக்கலைஞர்கள் அறிமுகப்படுத்தும் போக்கினையும் காணமுடிகின்றது. நாட்டுப்புற நிகழ்த்து கலைகளின் வாழ்க்கைப் போராட்டமாகவே இதனைக் கருதமுடிகின்றது. வெற்றி தோல்வி குறித்து காலம் பதில் சொல்லும்.

ஆ. சத்தியகலா
யாழ் பல்கலைக்கழக தற்காலிக
விரிவுரையாளர்
BFA கலாவித்தகர்

# நாட்டார் வழக்காற்று மரபுகளைப் பேணிப் பாதுகாப்பதில் கல்வி தீர்க்கமான பங்கினை வகிக்கிறதா? விவாதத்திற்கான ஒரு முன்னுரை

இச்சிறிய கட்டுரையானது, இன்று நடைமுறையில் இருக்கின்ற கல்விமுறையானது, எமது இனத்தின் தேசிய மற்றும் பண்பாட்டு தனித்துவத்தின் வேர்மூலங்களாக இருக்கும் நாட்டார் கலை இலக்கிய மற்றும் பண்பாட்டு மரபுகளை, அவற்றின் உயிரியல் சாத்தியங்களோடு வளர்க்கவும், பேணவும், பொதுமக்கள் மத்தியில் அவை பற்றிய பிரக்ஞையை - விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உதவுகின்றதா? இல்லையாயின் அதற்கான காரணங்கள் எவை? உண்மையில் ஒரு சமூகத்தின் புரட்சிகரமாற்றத்துக்கான சூழலில் கல்வி எத்தகைய வகிபாகத்தினைக் கொண்டிருக்க வேண்டும் என்ற விவாதத்திற்கான முன்னுரையாக அமைகின்றது.

வன்னிப்பிரதேசநாட்டுப்புறமக்களிடையே ஓர் அழகான, அசலான கசடு சாராத பண்பாடு உள்ளது. ஆண்கடவுளர்கள் , பெண் கடவுளர்கள், நடனம், கதைகள், பாடல்கள், புராணங்கள்,நம்பிக்கைகள், உலகப் பார்வை, பழக்க வழக்கங்கள் எல்லாமே அவர்களுக்கே உரித்தான தனிப்பட்ட விதத்தில் உள்ளன. ஒரு தனிப்பட்ட அமைப்பாக அழகாகவுள்ளது, ஆனால் இப் பண்பாட்டினைப் பற்றி அவர்கள் அவ்வளவாக அக்கறை கொள்ளவில்லை.

அக்கறை அற்ற இப் போக்கு அதாவது, இது நமது கலை, இது நமது பண்பாடு, இது நமது இலக்கியம் என்ற பற்று மற்றும் ஈடுபாட்டிமையானது ஆழமான அர்த்தத்தில் எமது இனம் , எமது மொழி, எமது தேசம், எமது சுயம் என்ற தேசியப் பிரக்ஞையையே இல்லாமல்செய்துவிடும்ஆபத்திற்குரியது. இது தனது பெருவிரலை தானே கடித்துக்கொண்டு உயிரைவிடுவதற்கு ஒப்பானது. இந்த மயக்க அல்லது அறியாமையிலிருந்து மக்களை விடுவித்து அவர்களுக்கு நாட்டுப்புறக்கலை, பண்பாடு குறித்தவிழிப்புணர்ச்சியைஏற்படுத்த வேண்டும். பொதுசன தொடர்புசாதனங்கள், அரசியல் கட்சிகள், கல்வி மற்றும் சமூக நிறுவனங்கள் இதில் பிரக்ஞைபூர்வமான பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் அவற்றின் இருப்பையும் தனித்துவத்தையும் நீடித்து நிலைக்கச் செய்யமுடியும்.

இதில் கல்வி தீர்க்கமான பங்கினை வகிக்க வேண்டும் ஆனால் துரதிஸ்ரவசமாக இன்று நம்மிடையே நிலவிவருகின்ற கல்வி முறையானது, பொதுமதிப்பீடுகளை உருவாக்கி தேசியத்தனித்துவம் மற்றும், பிரதேச பண்பாட்டுத் தனித்துவம் பற்றிய பிரக்ஞையையே இல்லாது செய்து விடுகிறது. இதனால் அசலான கலை, இலக்கியப்பண்பாட்டு வளர்ச்சி ஏற்படவோ அவற்றை அறிதல் மற்றும் பேணிக் கையளிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி உணரப்படவோ வழியின்றிப் போய்விடுகிறது.

இன்று இலங்கையில் நடைமுறையிலுள்ள கல்விக் கொள்கை மற்றும் கல்வித்திட்டம் என்பன பெரும்பாலும் அரசாங்கத்தின் அரசியல் நலன்களையும் மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் பொருளாதார நலன்களையும், இலக்குகளையும் உருவாக்குவதையும் கட்டமைப்பதையுமே இறுதி நோக்கமாகக் கொண்டுள்ளன. இதனை, "கல்வியறிவு, திறன்கள் என்பன நாட்டுமக்களில் யாருக்கு, எவ்வாறு, எங்கே, ஏன் வழங்கப்பட வேண்டும் என்பதைக் கல்வித்திட்டமிடல் தீர்மானிக்கின்ற போது உண்மையில் அது நாடுகளின் அரசாங்கங்களின் அரசியல் முடிவாகவே அமைந்துவிடுகிறது.

அத்தோடு சர்வதேசரீதியிலான கல்விக்கான உதவிகள், சர்வதேச ரீதியிலான அல்லது பிராந்திய ரீதியிலான அரசியல் அபிலாசைகளின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டு அல்லது அதிகரிக்கப்பட்டு வருகின்றன"

என்ற எடுத்துக்காட்டு தெளிவாக்குகிறது. அத்தோடு இத்தகைய கல்வித்திட்டங்களினூடாக வழங்கப்படும் நவீன கல்வி முறையானது, முதலாளித்துவத்தின் பொருளாதாரத் தேவைக்குச் செவிசாய்க்கும் வண்ணமாய், இந்த மூலதனங்களுக்கு தேவையான தொழிலக மற்றும் சமூகத் திறமைகளை மழுங்கடிக்கச் செய்கிறது. இக்கல்வி முறை அதிகாரத்துக்குப்பணிவது, ஒழுக்கம்வாயந்த கூலிப்படைகளை உருவாக்குவது என்பதைத் தான் வலியுறுத்துகிறது.

இப்போதிருக்கின்ற கல்வி நிறுவனங்களில் தரப்படுகின்ற கல்வியானது மறைமுகமாக மேல்தட்டுக் கலாசார உன்னதங்களை உணர்த்துவதாகவும் அவைபற்றிய கனவுகளை ஊட்டுவதாகவும் இருக்கின்றனவே தவிர அசலான மக்கள் கலாசார கல்வி கிடைக்கச் சாத்தியமில்லை. மேல் சாதிக்கலாசாரத்தில் மூழ்கும் ஒருவன் சுலபமாகவே தனது சொந்த அடையாளங்களை இழந்து விடுகிறான். படித்து வேலைக்குச் செல்லும் பல சகல மக்களும் படிப்படியாகத் தமது அடையாளங்களை இழந்து தனித்துச் செல்வதைஅவதானிக்கலாம்.

இத்தகைய ஒரு கல்விக் கலாசாரத்தில் வன்னி மாணவன் ஒருவன் அல்லது ஒருத்தி சுலபமாகவே தனது சொந்த, சுய அடையாளங்களைஇழந்து விடுவர். இந்த நிலையில் அவன் அல்லது அவள் தனது பாரம்பரிய நாட்டுப்புறக் கலை, பண்பாட்டு மூலங்களை, வேர்வடிவங்களை, காப்பது, பேணிக்கையளிப்பது என்பது எவ்வளவுக்குசாத்தியமானது?

சூழலுக்கும், வாழ்க்கைக்கும், வாழ்க்கை அனுபவத்திற்கும் தொடர்பில்லாத வகையில் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் பொருளாதார நலன்களை உள்நோக்கமாகக் கொண்டு முன்வைக் கப்படும் கல்வித்திட்டங்கள் ஒரு மாணவனின் சுயபண்பாட்டுக்கௌரவத்தைப் பிரக்ஞை பூர்வமாக வளர்த்தெடுக்க உதவுவதில்லை. இதனால் தனது பண்பாடு பற்றிய சுயசிந்தனையற்ற மனிதனாகவே அவன் கட்டமைக்கப்படுகிறான்.

கல்லூரிகள், சர்வகலாசாலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிலும் இத்தகைய கல்வி முறைக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. புலமையாளர்க்ள், மற்றும் புத்திஜீவிகளிடையே கூட இத்தகைய கல்வி முறையின் சமூக பிரதிபலிப்புப்பற்றிய விமர்சன ரீதியான புரிந்துகொள்ளளோ, சுயபண்பாட்டுக் கௌரவத்தை மேம்படுத்துவதற்கான கல்வியைத்திட்டமிடுதலின் அவசியம் பற்றிய தரிசனமோ கிடையாது. இன்றைய பெரும்பாலான கல்விசார் புலமைத்தொழிற்பாடுகள் இதனையே எமக்கு உணர்த்துகின்றன.

உண்மையில் "கல்வி என்பது சார்பற்ற ஒன்றாக இருக்க வேண்டும். பூமியிலிருக்கின்ற ஒவ்வொன்றைப் பற்றிய அறிவைச் சார்பற்ற முறையில் பெறுவதற்கும், வளர்த்துக் கொள்வதற்குமான ஒரு வழியாகக்கல்வி அமைதல் வேண்டும்" இதற்கும் அப்பால் ஒவ்வொருவரினதும் சுயபண்பாட்டினையும், இனத் தனித்துவத்தையும் வளர்த்தெடுப்பதற்கான சாத்தியங்களை உருவாக்கக் கூடியதாகவும், சுய கௌரவத்தையும் தன்தேசம். பண்பாடு பற்றிய தரிசனத்தையும், சிந்தனையையும் தூண்டக்கூடியதாகவும் கல்வி அமைதல் வேண்டும். அப்போதுதான் ஒரு இனம் தனது தேசத்தை உருவாக்குவதற்கான புரட்சிகரப் போராட்ட வரலாற்றில் கல்வி தீர்க்கமான தனதுபங்கை ஆற்ற முடியும்.

**க. அருந்தாகரன்**

# சைவசமயமும் அருகிவரும் ஆலய வழிபாடும்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", "ஆலயம் தொழுவது சாலவும் நன்று", கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" எனும் வாக்கியங்கள் மூலமாக ஆலய வழிபாட்டின் முக்கியத்துவத்தை சமயப் பெரியார்கள் எடுத்துரைத்துள்ளனர்.

சமயம் என்பது ஒவ்வொரு தனிமனிதனையும் நெறிப்படுத்தி பூமியில் சிறந்த ஒருமனிதனாக வாழவைக்கின்றது. நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது வாழ்க்கையில் தன்னம்பிக்கையையும் தளராத முயற்சியையும் தருகின்றது வாழ்க்கையில் குடும்பத்தில் இருந்து கொண்டே கடவுள் நினைப்பும் உலகியலில் பூரணத்துவமும் பெறுவதற்கு சமயம் நெறிப்படுத்துகின்றது மனித நேயத்தை வளர்க்கின்றது. அனைத்திற்கும் ஆதாரமாயுள்ள இறைவனிடத்தில் நம்பிக்கை கொள்ளச் செய்கின்றது இந்நம்பிக்கை தான் சமுதாய மேம்பாட்டுக்கு மூலகாரணமாக அமைகின்றது.

சைவசமயம் ஆடம்பரத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல. எளிமையானது. உண்மையானது. பழமையானது. சிந்து வெளிப் பண்பாட்டிலே சிவ வழிபாடு இருந்ததற்கான சான்றுகள் இருந்ததனை அனைவரும் அறிவர்.

சைவசமயத்தின் முழுமுதற்கடவுள் சிவன், விநாயகர், சுப்பிரமணியர், பைரவர்,வீரபத்திரர் முதலானோர் சிவமூர்த்தங்களே. சிவனுடைய இந்த மூர்த்தங்களும் வழிபாட்டிற் குரியவையே. அனைத்தும் நாம் வழிபடும் தெய்வங்களே. பிறப்பும் இறப்புமற்ற சிவன் ஒருவரே முழுமுதற்கடவுள் என்பதனை நாம் அனைவரும் மறந்து விடலாகாது.

எமது முன்னோர்கள் சமயநெறியைக் கடைப்பிடித்து நல்வழி வாழ்ந்திருக்கிறார்கள். ஆலய வழிபாட்டை சிறப்பாக மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இன்று எம்மத்தியில் பாரப்படுத்தி விட்டுச்சென்ற ஆலயங்களும் தீர்த்தக்கேணிகளும் சான்று பகர்கின்றன. சைவசமயம் பெருந்தொகை நூல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. "நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" ஆகவே இளைய தலைமுறையினர் இவற்றை ஆழக்கற்று எமது மதத்தின் பேருண்மைகளை அறிந்துணரவேண்டும்.

சைவசமயத்திற்கு நெருக்கடி ஏற்படும் போதெல்லாம் ஞானிகளும் சான்றோர்களும் இறைவன் திருவருளினால் தோன்றியுள்ளனர். பல போராட்டங்களை நடாத்தி வென்று வாகை சூடுவதும் சைவசமய வரலாற்றிலே உண்டு.

சைவசமயத்தினைப் புறச்சமயத்தினின்று காக்கவும் தமிழர் நம்பிக்கையையும் பண்பாட்டினையும் பேணவும் திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நால்வரும் தோன்றினர்.

"நாமார்க்கும் குடியல்லோம்" என்பது திருநாவுக்கரசரின் வீரவாக்கு "அவனருளாலே அவன் தாழ் வணங்கி" என்பதும் எமக்கு இடித்துரைக்கும் வாக்கியமே. பண்சுமந்த பாடல்கள் மூலம் பதிகங்களைப் பாடி மக்களைத் தடம் புரளாமல் காத்து சைவ சமயத்தை தழைத்தோங்கச் செய்தனர். இப்பாடல்கள் வீரியம் மிக்கது. செழுமை வாய்ந்தது. அருள் மயமானது. இறைவன் கேட்பது பண்ணையே. அருள் புரிவதும் திருமுறைத் தமிழுக்கே. இத்தகைய எல்லோருக்கும் எளிதான திருமுறைகளை மனனம் பண்ணி மூலை முடுக்கெல்லாம் ஓதி வழிபட வழி காட்டினார்கள்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற நம்பிக்கையுடன் தேவாரத்திலே திருஞானசம்பந்தர் அருளிச் செய்துள்ளார்.

ஒழுக்கமுடமை, அடியவர்களுக்குரிய பண்புகளைத் தாங்கி நிற்றல், அடியவர்க்கு ஏற்ற உருவ வடிவினராக இறைவன் காட்சிப்படல், தலயாத்திரை தீர்த்த யாத்திரை முதலான பக்தியுடன் இணைந்த செயற்பாடுகள், இறைவன் செயற்பாடுகளைக் கேட்டல், உருகிப் பாடுதல், வணங்குதல் முதலியவை பக்தி நெறிக்கு மேலும் வலுவூட்டுகின்றன. வீடுபேறு அடைவதற்கு பக்தி வழிகாட்டுகின்றது.

சைவனுக்கு என்று ஒரு வாழ்வியலுண்டு. சைவனுக்கென்று ஒரு பண்பாடுண்டு. சைவர்கள் விசால மனமுடையவர்கள். எவரையும் பொல்லாங்கு சொல்லமாட்டார்கள். "ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம், மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம், வஞ்சனைகள் செய்வா ரோடிணங்க வேண்டாம்" என்பது ஔவையார் வாக்கு. சைவநெறி தழைத்தோங்க இந்த அறிவுரையை கடைப்பிடித்து நல்வழிச் சென்று சிறியவர்களை வளர்க்க வேண்டும்.

சொந்தத்தாயிடத்தில் அன்பு பாராட்டுபவர், பிறரிடத்தும் கடவுளிடத்தும் அன்பு பாராட்டுபவர். சிவசின்னங்களை அணிதல் தனியழகு. திருநீறு தரித்தல், உள்ளத்தில் கடவுளை இருத்துதல் இரண்டுமே போதுமானது. அகத்தூய்மையே ஆலய வழிபாட்டின் ஆணிவேர்.

இன்றைய நவீன விஞ்ஞான தொழில்நுட்ப அறிவியல் உலகில் பல்வேறு வேலைப்பழுக்கள் இருந்த போதிலும் ஆலய வழிபாட்டுக்கும் ஒரு நேரம் ஒதுக்கவேண்டும். யாரொருவர் சமய பண்பாட்டு விழுமியங்களை சரிவரப் பின்பற்றுகின்றாரோ அவர் சமூகத்தில் சிறந்த மனிதராக மிளிர்வார் என்பது மறுக்க முடியாத உண்மை.

இன்றைய இளைய சமுதாயத்தில் இப்பண்புகள் வளர்வதற்கு முதலில் பெற்றோர்கள் சிறிய வயதில் இருந்தே வழிப்படுத்தவேண்டும். அனைத்து சமய நிகழ்வுகளையுமே (வீட்டில் செய்ய வேண்டியவற்றையே) தவறாது செய்து முன்மாதிரியாக நடக்க வேண்டும். சமய வழிபாட்டின் முக்கியத்துவத்தை சிறுவரின் ஆழ்மனதில் விதைக்கவேண்டும். வீட்டுக்கு அருகில் உள்ள கோவில் என்றாலும் சமய பண்பாட்டுடன் செல்ல வேண்டும். ஆலயங்களில் சமயசொற்பொழிவுகள் தவறாது இடம்பெறச்செய்ய வேண்டும்.

பாடசாலையிலும் ஆரம்பம் முதல் இறுதி வகுப்பு வரை சமய விழாக்கள், சமய ஆராதனைகள், பண்பாட்டு விழுமியம் அனைவற்றுக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும். கல்வியுடன் சமயப் பண்பாட்டு விழுமியங்களையும் மாணவர்களிடம் விதைத்து சமுதாயத்திற்கு நல்ல பிரஜைகளாக அனுப்ப வேண்டும்.

எம் இனிய சமுதாயமே! சைவ சமயத் தவனின் வாழ்வியலுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களும் சைவசமய வாழ்வுடன் தொடர்புபட்டவைதான். இவற்றை ஒழுங்காக கடைப்பிடிக்க வேண்டும். "உன்னையே நீ அறிவாய்" என விபுலானந்தர் கூறுகின்றார். ஒவ்வொருவரிலும் உங்களைப் பற்றிய சுயமதிப்பீடு என்பது ஒவ்வொருநாளும் இடம்பெறவேண்டும். இதன்மூலம் உங்கள் ஆற்றல்கள், ஆளுமைகள், தவறுகள் என்பவற்றை அறிந்து உங்களைச் சீர்செய்து சமயப்பண்பாட்டை வளர்த்தெடுத்து பின்பற்றி பேணிப்பாதுகாத்து வரவேண்டும். அத்துடன் எதிர்கால சந்ததியினர்க்கு உங்கள் செயற்பாடு முன்மாதிரியாக அமைய வேண்டும். இறைவன் அருளுடன் சமயப்பெரியவர், பெற்றோர், சான்றோர் ஆசியுடன் இம்மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வாங்கு வாழ வேண்டும்.

ர.கோபிகா
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம் ஒட்டுசுட்டான்

# வந்ததே முதுமை

இளமையின் நனவுகளோ கனவாகத் தோன்றும் இந்த நாள்
எண்ணிலாத் தொல்லை கண்டு இளைத்தது மனமும் இந்நாள்
எண்ணமும் கசந்து ஏங்கி இல்லமும் வெளியே தள்ள
எஞ்சிய நாட்கள் தன்னை எப்படி வாழ்வதாமோ?

அப்பு என்பார் ஆச்சி என்பார் நைன்டி என்பார்
செப்புதல் எதுவும்கேளார் தேசத்தில் சுமையே என்பார்
ஒப்பிலார் தம்மை நம்பி உயிர் வாழ்வும் சுமையே போலும்
எப்பவும் முதுமை தன்னில் இழிநிலை மாலுமோ சொல்

வீரனாய் வேதியாய் வேலேந்தி நின்றவனும்
கூனனாய்க் கோலூன்றி கொண்ட துணை தானிழந்து
கோமாளி ஆகிவிட்ட கோலமிது பாரில்
வாராது இளமையின்றி வந்தடையும் மரணமது
நீறாகும் உடலற்று நியதியென்னே!

கொடிது கொடிது முதுமை கொடிது
முதுமையிலும் தனிமை கொடிது - மூப்பிருத்தல்
நல்குரவு தான் அடைந்து நாதியற்று
கல்லனய நெஞ்சத்தார் உடனிருத்தல் கொடிதே

மூத்தவர் சொல் வார்த்தையமுதமென்று முன்னவனும் சென்றுவிட்டான்
சேர்த்த பொருளும் சென்றவழி தெரியாமற் போனதுவோ
வார்த்தையலங்காரங்கள் வம்பென மறுத்துரைப்பார்
கோத்திரமும் வேண்டார் கூனல் தான் வந்த பின்னே

முந்தநாள் இளமை முடிந்ததன்றோ முதுமை
இந்நாளில வந்து இடறுதன்றோ -பொன்னான
வாழ்நாள் பொலிவு மனத்தே ஆனாலும்
எண்ணமே என்றும் இனிதாகட்டும்

# இசையின் சிறப்பு

மனிதனுடைய உயர்ந்த பண்புகளும், சிந்தனைகளும் கலைமூலமாக உலகிற்கு அறிமுகப்படுத்தப்படுகின்றது. மனிதன் தன் உயர்ந்த எண்ணங்களுக்கு எல்லாம் கலைவடிவம் தந்து தன்னைத்தானே வெளிப்படுத்துகின்றான். ஒரு நாட்டின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் நாட்டு மக்களின் கவின் கலைகளைக் கொண்டு கணித்தறியலாம். கவின் கலைகள் மக்களின் மனதில் உள்ள அழகுணர்ச்சிக்கு வடிவம் தந்து அவர்களினுடைய அறிவையும் திறனையும் உலகிற்கு எடுத்துக்காட்டுகின்றன. இக்கவின் கலைகளுள் மனித உள்ளத்தை கொள்ளை கொள்ளச் செய்வது இசைக்கலையே. இசைவிப்பது அல்லது வசைப்படுத்துவது இசையாகும். மரம் செடி கொடி முதலான ஓரறிவு கொண்டவை முதல் ஆறறிவு கொண்ட மனிதன் முதல் எல்லா உயிர்களையும் இசை தன்வசப்படுத்துகிறது. மற்றவர்களால் பயமுறுத்தப்படும் போது ஒரு இடத்தைக் கடந்து செல்லும் போது ஒரு பாடலைச் சத்தமாகப் பாடும்போது இக்கீதம் காதின் வழியாக மூச்சோடு கலந்து உட்சென்று பயத்தினால் உண்டாகும் இரத்த சாயத்தின் துடிப்பை நீக்குகின்றது. தாவரங்கள் இசையை கேட்பதன் மூலம் விரைவாக வளர்ச்சியடைகின்றன என்று முனைவர் தாகூர் சந்திர நாராயணகிங் தெரிவித்துள்ளார்.

பழந்தமிழ் இலக்கிய நூல்களுள் இசை பற்றிய செய்திகளை சிறப்பித்துக்கூறுவனவாக புறநானூறு, காஞ்சித்திணை, அகநானூறு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். தற்கால சமூகத்தில் இசை பல்வேறு வகையில் சிறப்புப் பெறுகின்றது. நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் வேதனையால் அல்லல்படும் போது வேதனையை மறக்கச்செய்ய இசை பயன்படுகின்றது. மனவியாதி உள்ளவர்கள் உணர்வு ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு இசை மனஅமைதியைத் தருகிறது. படிப்படியாக இத்தகைய நோய்களை இசை குணமாக்கிறது. குற்றவாளிகளைத் திருத்தவும் தீய வழியில் செல்வோரை நல்வழிப்படுத்தவும். இசை பயன்படுகிறது.

நல்ல தூக்கம் இல்லாமல் தவிப்பவர்கள் நீலாம்பரி இராகத்தை சிறிது நேரம் கேட்டால் தூக்கம் தானாகவே வரும். அவர்கள் உள்ளம் இசையோடு ஒன்றிவிடும் படியாக முதலில் தம்புரா சுருதியை கேட்கச் செய்துவிட்டுப் பின்னர் இராகத்தை கேட்கச் செய்தால் நல்ல பலன்கிடைக்கும்எனபேராசிரியர்சாம்பமூர்த்தி தெரிவித்திருக்கின்றார். மன அமைதி இழந்தவர்கள் சாமா இராகத்தினையும் முடக்கு வாதத்தினால் அல்லல்படுவோர் துஜவாந்தி இராகத்தையும் கேட்பதன் மூலம் நல்ல பயன் அடைவார்கள். பூபால இராகத்தினையும் மலைய மாருத ராகத்தினையும் மக்களை தூக்கத்தில் இருந்து விழித்தெழச்செய்யப் பயன்படுத்துவர். உற்சாகமற்ற நிலையில் உள்ளவர்கள் தலகரி போன்ற இராகத்தினைக் கேட்பதன் மூலம் புதிய உற்சாகமும் நம்பிக்கையும் பெறுகின்றனர். இதய நோய் உள்ளவர்களும் இனிய இசையைக் கேட்பதன் மூலம் படிப்படியாக குணம் அடைகின்றனர்.

அமெரிக்க நாட்டின் நோயாளிகளுக்கு அறுவைச்சிகிச்சை நடைபெறும் போது அவர்கள் வேதனையையும் பயத்தையும் மறந்திருப்பதற்கு இசையைக் கேட்கும் படியான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

இன்றைய இயந்திர வாழ்க்கையில் மக்கள் பல்வேறு மனஅழுத்தங்களுக்கு உட்படுகின்றனர். இது அவர்களுக்கு மிகப்பெரிய ஆபத்தை விளைவிப்பதாக இருக்கின்றதால் அவர்கள் தங்கள் மனதை அமைதிப்படுத்தவும் இன்பத்தை நுகரவும்

ஏதாவது ஒரு பொழுதுபோக்கு அம்சங்களில் இசையும் இசையோடு இணைந்த பிறவும் அதாவது சினிமா, நாடகம், ஆடல் பாடல் போன்ற இசைக்கச்சேரி போன்ற இசையுடன் இணைந்த பல துறைகளில் மக்கள் கவனம் செலுத்துகின்றனர். அதன் மூலம் அவர்களுக்கு பொழுதும் கழிகிறது மன அழுத்தமும் குறைகின்றது.

உணர்வுகள் அற்றவன் உயிரற்ற ஜடத்துக்கு ஒப்பானவன். உணர்வுகளாலே ஒவ்வொரு மனிதனும் வாழ்ந்து வருகின்றான். இவ் உணர்வினைக் கொண்டு ஒவ்வொரு மனிதனும் தனது விருப்பங்களையும் அழகினையும் வெளிப்படுத்துகின்றான். அகத்தின் அழகு முகத்தில் தெரியும்; என்ற கருத்தின் அடிப்படையில் ஒரு மனிதன் எந்த உணர்வில் லயித்துள்ளான் என்பதை உணரமுடியும். அதுபோல் ஒருவன் பல்வேறு இசைகளைக் கேட்கும்போது அவனுடைய முகபாவம் மாற்றமடைகிறது. சில இசைகள் புத்துணர்வினையும், சில இசைகள் சோகத்தையும், சில இசைகள் வேகத்தையும், சில இசைகள் ஆக்ரோசத்தையும், சில இசைகள் அமைதியையும் சில இசைகள் மகிழ்ச்சியையும் தரக்கூடியன. எந்தவொரு இசையும் ஏதாவது ஒரு உணர்வினை தூண்டும் சிறப்பியல்பைக் கொண்டிருக்கிறது. இத்தகைய சிறப்பியல்புகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு மனிதனும் அமைதியையும் புத்துணர்ச்சியையும் பெற்று வருகின்றான். மனிதர்கள் சமூகத்தில் பல்வேறு குழுக்களாக வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு குழுவில் உள்ளவர்களும் தங்கள் பாரம்பரியம் பண்பாட்டின் பல சடங்குகளைச் செய்கின்றனர். ஏனெனில் பிறப்பு முதல் இறப்பு வரையான சடங்குகளின் போது இசையும் இசைக்கருவிகளையும் பயன்படுத்தி வருகின்றான். திருமணச்சடங்கின் போது கெட்டிமேளம் இசைக்கப்படுகிறது. மரண ஊர்வலங்களின் போது தப்பு, பறை, தவில் ஜால்ரா ரம்செட், அஞ்சனப்பெட்டி போன்றவற்றைப் பயன்படுத்தி இசையெழுப்பி தனது சடங்குகளை மேற்கொள்கின்றான். இவ்வாறு இசையானது தனிமனித சடங்குகளிலும் முக்கிய பங்கு பெறுகின்றது. ஆலயங்களிலும் ஏனைய கலை நிகழ்வுகளிலும் இசைக்கென தனியோர் இடமுண்டு. இசை வாத்தியங்கள், இசைக்கச்சேரிகள் என்பன சடங்குகளில் முக்கிய பங்கினை வகிக்கின்றது.

இசைகள் இன்பத்தைத் தருகின்றன. உணர்வினைத் தூண்டி அதன் மூலம் மனிதனுக்கு மகிழ்ச்சி தருவன. ஒவ்வொரு மனிதனையும் உணர்வு ரீதியாகவும் இயங்க வைக்கும் இசை நுண்கலைகளுள் நுட்பமானது, உயிரோட்டமானது. ஆகவே இத்தகைய இசையினையும் இசைக்கருவிகளையும் மரபு நெறியும் இசை இலக்கணமும் பிறளாமல் பயன்படுத்தவேண்டும். உணர்வு பூர்வமான ஒரு வெளிப்பாட்டை தரும் இசைக்கலையை பேணிப்பாதுகாப்பது எமது கடமை.

**கஜித்தா**
சமனங்குளம்
ஒட்டுசுட்டான்

# முதுமையின் சவால்களை எதிர்கொள்ளல்

பிறந்தவர் அனைவரும் இறப்பது என்பது இன்றைய உலகின் நிச்சயமான நிகழ்வு. ஆனால் பிறந்து இறப்பதற்குரிய கால அளவு ஒரு சிலருக்கு பிறந்து ஒரு சில நிமிடங்களும், சிலருக்கு சில வருடங்களும், பலருக்கு பல வருடங்களும், சிலருக்கு நீண்ட ஒரு நூற்றாண்டாகவும் இருக்கின்றது. இன்றைய மருத்துவ விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தின் காரணமாக பிறந்தவர் விரைவில் இறப்பது குறைந்து நீண்ட நெடுநாட்கள் வாழ்வது சாதாரண நிகழ்வாகிவிட்டது. எனினும், பிறந்து எவ்வித கவலையும் பொறுப்பும் இன்றி, ஓடி விளையாடித் திரிந்த சிறு பராயம்; துடிப்புடன் செயற்பட்டு, இனிமையான கனவுகளுடன், இன்பமான அனுபவங்களுடன் நோய் நொடியின்றி கழிந்த இளமைப்பருவம்; பொறுப்புகளும், வேதனைகளும், சோதனைகளும், வெற்றி தோல்விகளையும் சந்தித்த அனுபவங்கள் நிறைந்த 40, 50 வயதான பேரிளம்பராயம் முதலிய இவற்றையெல்லாம்கடந்து வந்த முதுமைப்பராயம் நோய் நொடிகள் நிறைந்ததாக, துன்பமும் துயரும் உடைய தாகப் பலருக்குச் சம்பவித்து விடுகின்றது. முந்தைய அனுபவங்களின் நிகழ்காலமே முதுமைப்பருவம்.

வேலை வேலையென்று, ஓடி ஆடி, முடிந்த அளவு பணம் தேடி, வசதிகள் பெற்று, அதை மனவி மக்களுடன் சேர்ந்து அனுபவித்து, சமூகத்தில் முக்கியஸ்தர் என்ற ஒரு பதவியை வகிக்கவேண்டும் என்ற ஆர்வத்துடன் வாழ்க்கையை ஓட்டுகின்றவர்கள் எம்மில் பலர். முக்கியத்துவம் கிடைக்க வில்லையென்றவுடன் கலியாணவீடு, செத்தவீடு, திருவிழா நானாவித விழாக்கள் என்ற பல சந்தர்ப்பங்களில் பிரச்சினைகளை உருவாக்குபவர்கள் நாங்கள், ஆனால் முதுமை வந்தடையும் வேளை, வேலையில் வகித்த பதவி - அதனுடன் சேர்ந்த சம்பளம் போகும். வீட்டில் பிள்ளைகள் வளர்ந்து, சம்பாதிக்க, முன்பு வந்த வருவாயும் குறைய, குடும்பத்திலும் தலைவர் பதவி கேள்விக்குறியாகி விடுகின்றது. இவை சமூகத்திலும் வகித்த முக்கியஸ்தர் பதவியை இழக்க வழிவகுத்து விடுகின்றது.

ஒருபுறம் முக்கியத்துவம் குறைய. மறுபுறம் 'வேண்டப்படாதவர்' என்ற ஒரு நிலையும் உருவாகின்றது. குடும்பத்தில் முக்கியத்துவம் குறைந்துவிட அதை நிலைநாட்டவேண்டி, கேள்விகள் கேட்பதுவும், தேவைப்படாத அபிப்பிராயங்களைக் கேட்கப்படாத வேளையில் வெளியிடுவதும். தன்னுடைய காலத்து விழுமியங்களை நிலைநாட்ட விளைவதுவும், இந்நிலையை மேலும் சிக்கலாக்கி விடுகின்றது. இது தான் "வீடு போ போ என, காடு வா வா" என்ற நிலை. அந்த நிலையிலும் பலரில் மரண பயம் - மனம் குலைந்து, உடல் ஒடுங்கி ஒவ்வொரு நாளும் செத்துக்கொண்டிருக்கும் நிலை நீடிக்கும்.

முதுமை என்றதும், தலை நரைத்து, தோல் சுருங்கி கூன்விழுந்து, அனைத்து உறுப்புகளும் வலுவிழந்து செயல் குன்றி அவற்றுடன் பல்வேறு விதமான நோய்களின் தாக்கத்திற்கு ஒருவர் ஆளாகும் நிலை நினைவுக்கு வரலாம். இது முதுமையடைகின்ற ஒருவருக்கு மட்டும் ஏற்படுகின்ற ஒரு சவால் என்று கொள்ளமுடியாது. அவர் மூலமாக முழுக் குடும்பத்திற்குமே அது ஒரு சவால் இன்றைய உலகில் சமாளிக்கப்படவேண்டிய, முழுச் சமுதாயமே எதிர்நோக்குகின்ற ஒரு பெரும் சவால்.

கடந்து முடிந்து போன நூற்றாண்டு ஒரு பெரும் சனத்தொகைப் பெருக்கத்தைச்

சமாளிக்க வேண்டிய ஒரு சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டது. உணவு உற்பத்தி மிக மெதுவாகப் பெருகிவரும் கால கட்டத்தில் சனத்தொகை மிக விரைவாகப் பெருகியது. இந்நிலையில் உலகில் இரண்டே இரண்டு நாடுகள்தான் (கனடா, ஐக்கிய அமெரிக்க நாடு) தன் முழுச் சனத்தொகையின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் பெருவாரியாகத் தானியங்களை வைத்திருந்தன. எனவே, பட்டினிச் சாவை நிறுத்த, மற்ற வளங்களைப் பாதுகாக்க, உலகம் முழுவதும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிநடத்தலில் குடும்பக் கட்டுப்பாட்டு முறையை கைக்கொண்டது.

ஆனால் குடும்பக்கட்டுப்பாடும் அதனுடன் இணைந்த மருத்துவ விஞ்ஞான வளர்ச்சியும், அரசுகள் சுகாதார சேவையை விஸ்தரித்தமை, கல்வி வளர்ச்சி முதலியனவற்றுடன் இணைந்து, மக்கள் நீண்ட காலம் வாழ வழிவகுத்தன. இதனால் இப்பொழுது பிரச்சினை வேறுவிதமாக உருவெடுத்தது. வயது கூடியவர்களது தொகை திடீரென்று அதிகரிக்கத் தொடங்கியது.

அகில உலக ரீதியாக 1900 ஆம் ஆண்டு பிறந்த ஒருவர் 50 ஆண்டுகளே வசிக்க முடியும் என்ற நிலை மாறி, 70 களில் ஆண்கள் 68 வயது வரையும், பெண்கள் 73 வயது வரையும் என்று இருந்து, மிகவும் முன்னேற்றம் அடைந்த அமெரிக்கா, ஜேர்மனி, ஐப்பான் பேன்ற நாடுகளில் 80 களில், ஆண்கள் 72 வயது வரை, பெண்கள் 81 வயது வரை என்றும் வந்துவிட்டது. இன்னும் 150 வருடங்களில் (2150) பெண்கள் 92.5 வயது வரையும் ஆண்கள் 87.5 வயது வரையும் வாழுவது சாதாரணமாகிவிடும். பிரச்சினை என்னவெனில், முதியோர் நீண்ட காலம் வாழ, இளைஞர், யுவதிகள் தொகை குறைய சமுதாயம் இவ்வளவு பேரையும் எவ்வாறு பராமரிக்கும் என்பதே. ஐப்பான், ஜேர்மனி, இத்தாலி போன்ற நாடுகளில், 65 வயதுக்கும் அதிகமானவர்கள் 2050 ஆம் ஆண்டளவில், சனத்தொகையில் 40% மானவர்களாக இருப்பர்.

மூன்றாம் உலக நாடுகளைச் சார்ந்த இலங்கையிலும் கடந்த 50 ஆண்டு காலப்பகுதிக்குள் அடைந்த மாபெரும் சுகாதார முன்னேற்றம் காரணமாக மக்கள் முன்பு வாழ்ந்ததைவிட ஏறத்தாழ இரண்டு மடங்கு காலம் வாழக்கூடிய நிலை தோன்றிவிட்டது. உலகளாவிய ரீதியிலும் மனிதர்களின் ஆயுட்காலம் நூறு ஆண்டுகள் என்று குறிப்பிடப்படும் காலம் வெகுவிரைவில் வந்துவிடும்.

ஆனால், அந்த வாழ்க்கை எப்படி இருக்கப் போகின்றது? நீண்ட காலம் வாழ்பவரின் வாழ்க்கை நிலை எவ்வாறு இருக்கும்? அது சவாலாக இருக்குமா? அல்லது முதுமையுடன் தொடர்புடைய பிரச்சினைகள் வராமலே தடுக்க முடியுமா? என்று நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

ஈகுவாடா நாட்டு ஆன்டிஸ் மலைப் பகுதியில் வாழும் வில்கம்பா இன மக்கள், ரூசிய யூரல் மலைப்பகுதியில் வாழும் அப்காசிய மக்கள், இந்திய காஸ்மீரப் பகுதியில் வாழும் ஹன்சா இன மக்கள் சாதாரணமாகவே நூறு ஆண்டுகள் சுகதேகிகளாக வாழுவது அறியப்பட்டுள்ளது. அவர்களது வாழ்க்கை முறையை ஆராய்ந்த விஞ்ஞானிகள் முதலாவதாக வெளிப்படுத்திய உண்மை, இவர்கள் மலைப்பகுதிகளில் உயரத்தில் வாழ்ந்து வருவதால் அவர்கள் சுத்தமான காற்றை சுவாசிக்கிறார்கள். இயற்கையாக கிடைக்கும் உணவு வகைகளை நல்ல முறையில் உண்ணுகின்றார்கள். உணவில் மாச்சத்து குறைவாகவே உள்ளது. முதியவர்களை குடும்பத்தவர் சாதாரணமாகப் பராமரிப்பது மட்டுமல்ல, அவர்களை மிகவும் மரியாதையுடனும், அவர்களது அனுபவ அறிவுரைகளுக்குப் பெருமதிப்புக் கொடுத்தும்

வாழுகின்றார்கள். அது அவர்களது கலாசாரம். எனவே முதியோரும் நீண்ட காலம் சுகமான பயன்தரும் வாழ்க்கை வாழுகின்றார்கள். அவர்களது மனங்களில் குழப்பங்கள் இல்லை. பாரம்பரியங்கள் பேணப்படுகின்றன என்பதாகும்.

இந்த மலை வாழ்மக்களை விடுத்து நாம் என்மவரிடையே இறங்கி வந்தால், நல்ல முறையில் இயங்கி வந்த, ஆல்போல் விரிந்து வளர்ந்த ஒரு கூட்டுக் குடும்ப அமைப்பு சிதைவுறுவதைக்காணமுடியும். சனத்தொகைப் பெருக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியாத வீட்டில், வசதி குறைந்த பிள்ளைகள் வேலை தேடி வெளியிடம், வெளிநாடு செல்லுதல், கூட்டு உறவு பேணுவதில் இருந்து விலகித் தனிக்குடும்பம் நடத்த விழைந்தமை ஆகிய பல காரணிகள் கூட்டுக்குடும்ப முறை சிதைவுற்று தனிக்குடும்பமுறை பெருகுவதற்கு முக்கிய காரணிகளாகிவிட்டன. கூட்டுக் குடும்ப முறை இல்லாது போனதால் அனைவரும் சில பாதிப்புக்குள்ளானாலும், பெரும் தாக்கத்திற்கு ஆளானவர்கள் சிறுபிள்ளைகளும், முதியோருமே. சிறுபிள்ளைகளைப் பொறுத்தவரை அவர்களைப் பராமரிக்க, உதவிகள் வழங்க, பெற்றோர், பெரியோர், அரச, சுகாதார திணைக்களங்கள், Unicef, SCF, REDBARNA போன்ற அரசசார்பற்ற சர்வதேச நிறுவனங்கள் இருக்கின்றன. ஆனால் முதியோரைப் பொறுத்தவரை நிலைமை கவலைக்கிடமாகவே உள்ளது.

எமது சமுதாயத்தின் நாகரிகம் உச்சநிலையில் (?) இருந்த காலத்தில் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வாக கூட்டுக்குடும்ப முறை விளங்கியது. பெரியவர்கள், முதியவர்கள் முதலியோருக்கு முக்கியத்துவம் கொடுத்து. அவர்களைப் பராமரிக்க, உதவ, அவர்களது தேவைகளைக் கவனித்து அனுசரித்து நடக்க இது உதவியது. தமக்கிடையே சொந்த பந்தங் களை அதிக அளவில் ஏற்படுத்தி, மண வாழ்வுக்குப் பொருத்தங்களை உருவாக்கி, கடமைகளையும் விழுமியங்களையும் ஒழுக்கக் கோட்பாடுகளுக்குள் கட்டுப்படுத்தி, ஒழுக்கத்தை சமூகத்தில் முதன்மைப்படுத்தி வைத்ததனால் முதியோர் பிரச்சினைகள் பெரும் சவால்களாக இருக்கவில்லை. மாறாக, அவர்கள் சமுதாயத்தின் ஒரு வளமாகத் திகழ்ந்தனர்.

இன்று சமூகத்தில் அதிகமானோர் தமது வருமானத்தில் பெரும் பகுதியை உணவுக்காகச் செலவிடுகின்றனர். உற்பத்தித்திறன் குறைந்த இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் இது பெரும் பிரச்சினை. இந்நிலையில் முதியோர் அதுவும் தனிப்பட்ட வருமானம் இல்லாதவர்கள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர். அரச சேவையில் இருந்து இளைப்பாறியோர் என்றோ ஒரு காலத்தில் தீர்மானிக்கப்பட்ட பென்சனுடனும், பெரும்பாலான நாள் சம்பளத்துக்கு கூலி வேலை செய்தவர்கள், மீன்பிடித்தொழில், கட்டுமான வேலை களில் ஈடுபட்டவர்கள் இப்பொழுது வயதானதால் வருமானம் இல்லாதும் பெரும் பாதிப்படைகின்றார்கள். இந்நிலையில் சாதாரணமான உணவே பெறமுடியாது இருக்கும்பொழுது, முதியயோருக்காக விசேடமாக வழங்க வேண்டிய உணவுக்கு என்ன செய்வது? பல் சிதைவடைந்து, விழுந்து, சமிபாடு குறைவடைந்து, மலம் போவது சிக்கலாகி இருக்கும் வேளை, இதற்கேற்ற விசேட உணவுக்கு என்ன செய்வது எமது கலாச்சாரத்தில் இவ்வாறான வேளைகளில் சிறுவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வயதானவர்கள் தம்மை ஒறுத்துக் கொள்வதை மேலோட்டமாகச் சரியென்று சிலர் ஏற்றுக்கொள்வது தவறு என்றே கூறவேண்டும். இதே பிள்ளைகளுக்காக தமது வாழ்நாள் முழுவதையும் செலவிட்டவர்களுக்கு தகுந்த உணவு வழங்கப்படவேண்டும். விசேட கவனிப்பும் வேண்டும்.

வீடுகளும் முதியோர் வசிப்பதானால் சிறிது மாற்றங்களுடன் இருக்கவேண்டும் தசைகள், எலும்புகள், வலு குறைந்த நிலையில், விழுவது தடுமாறுவது சாதாரணம். ஆனால் விழுந்தால் எலும்பு முறிவதும், இது மரணத்தைக் கொண்டுவருவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலை. ஆகவே வழுக்கி விழாமல் இருக்க, நிலம் வழுவழுப்பாக இருக்கக்கூடாது. முக்கியமாக குளியல் அறை, மலசலகூடம் என்பவற்றில் நீர்தேங்கி நிற்காதவாறு நிலம் சாய்வாக அமைக்கப்பட வேண்டும். நீர், தேங்கி நிற்கக்கூடிய கிணற்றடி, தாங்கிகளுக்கு அருகாமை முதலிய இடங்களில் சிப்பிகள், சிறுகற்கள் துலியவற்றைப் பாவித்து நிலத்தை சொரசொரலப்பாகக் கட்டலாம் . முதியோர் சாதாரணமாகப் பாவிக்கும் வழிகளில் அவர்களைத் தடுக்கி விழச் செய்யக்கூடிய ஸ்டூல், பலகைக் கட்டைகள் முதலியவற்றை அகற்றிவிட வேண்டும். வசதி இருந்தால் பிடித்துக்கொண்டு போகக்கூடிய விதத்தில் சுவரில் மரச்சட்டங்கள், குழாய்கள் பதிக்கலாம். மலகூடத்தில் குந்தியிருந்து எழும்புவது வயதானவர்களுக்குக் கஷ்டமாக இருக்கும் எனவே குந்துசட்டி (Squatting pan) மலசலகூடமாக இருந்தால் பிடித்துக் கொண்டு எழும்புவதற்கு சுவரில் கைப்பிடி பொருத்தலாம் அல்லது முன்னால் கயிற்றை மேலிருந்து கட்டித்தொங்க விடலாம். இவற்றைவிட சிறப்பு கொமோட் (Commode) பாவிப்பது. நீர் அடித்துவிட, கழுவிவிட உதவி தேவைப்படலாம். படுக்கை அறை, குளியல் அறை, மலசலகூடம், அருகருகே இருப்பது இலகுவாக இருந்தாலும் எல்லா இடத்திலும் வசதி செய்வது கடினமாக இருக்கும். முதியவர்களுக்கு அடிக்கடி சலம் கழிக்க வேண்டி வரும். அதற்கேற்ற பாத்திரம் எட்டக்கூடிய இடத்தில் இருக்க வேண்டும் இரவு வெளிச்சம் வேண்டும். நடப்பதற்கு பொல்லுப் பாவிப்பவர்கள். வழுக்குவதைக் குறைப்பதற்கு பொல்லின் அடிப்பகுதிக்கு இறப்பர் முனை பொருத்த வேண்டும். இப்பொழுது வோக்கர் (Walker) எனப்படும் சாதனம் இலகுவாகச் சென்று வருவதற்குப் பல இடங்களில் பாவனையில் உள்ளது.

வாசிப்பது ஒரு சிறந்த பழக்கம். வீட்டில் இருக்கும் பொழுது வாசிப்பது, முதியவருக்கு மட்டுமல்ல, வீட்டில் இருக்கும் பேரன், பேர்த்திக்கும் பெரும் பிரயோசனமான முறையில் கதை சொல்லுவதாக, விழுமியங்களை புகட்டுவதாக, நேரத்தை மகிழ்ச்சியுடனும், மனநிறைவுடனும் போக்குவதாக இருக்கும். இதற்கேற்ற வகையில் முதியோர் வாசிக்கக்கூடிய முறையில் கதைகள், பெரிய எழுத்துப் புத்தகங்கள் அச்சிடப்பட வேண்டும். இதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வந்து உதவவேண்டும். கண்பார்வை குறைந்தவர்களுக்குக் கண்ணாடி வழங்குவது, சத்திரசிகிச்சை செய்வது போன்றவற்றை இப்பொழுது றோட்டரி, லயன்ஸ் போன்ற அரசசார்பற்ற கழகங்கள் செய்துவருகின்றன. லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் நிறைந்த வசதிகளுடன் கட்டப்படப்போகும் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை கண்சிகிச்சைப் பிரிவு, இம்முறையில் அரசசார்பற்ற ஸ்தாபனங்கள் அளிக்கக்கூடிய பங்கினை எதுத்துக்காட்டுகின்றது. கண் பார்வையைப் போன்றே செவிப்புலன் குறைவடைந்தவர்களுக்கு உதவக்கூடிய வகையில் செவிப்புலன் மேம்படுத்தும் சாதனம் கொடுப்பது வேறோர் அரசசார்பற்ற நிறுவனத்தின் பொறுப்பில் இருக்கலாம்.

இதுபோன்றே உடல்வலுக் குறைந் தவர்களுக்கு, அல்லது மருத்துவ காரணங் களுக்காகத் தேவைப்படுபவர்களுக்கு, தசைவலுவூட்டல் முதலியவற்றுக்கு இயன் மருத்துவச் சிகிச்சையை (Physiotherapy) அதிகமான நேரங்களில் விசேடமான கருவிகளின் தேவை இல்லாமல் வீடுகளிலேயே

செய்யலாம். இந்தச் சேவையில் தகுதி பெற்றோர் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் அரச சேவையில் ஒருவரும் இல்லை. தனியான முறையில் சேவையாற்றக் கூடியவர்களும் ஒருவரும் இல்லை. இந்நிலையில் இவ்வாறான குறைந்த காலப்பயிற்சியை அரசசார்பற்ற நிறுவனங்கள் உடனடியாக ஆரம்பிப்பது அவசியமாகின்றது. காரணம், இப்பொழுது வயதான, அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற இயன் மருத்துவ சிகிச்சை அளிப்பவர்கள் உடல் நலிவுறு முன்னர், அவர்களைக் கொண்டு இப்பயிற்சி நெறியை நடத்தி, அவர்களைக் கொண்டே புதிதாக வெளியேறுபவர்களை மேற்பார்வை செய்ய வேண்டும். அதன்பின் பயிற்றுவிக்கப்பட்ட இச்சிகிச்சையாளர் தனிப்பட்ட முறையில், தேவையானவர்களுக்குச் சிகிச்சை அளிக்க முடியும். வசதிகளும் தேவைகளும் ஏற்பட்டால் உள்ளூராட்சி மன்றங்களே இவர்களது வேவையை, இன்று சித்த வைத்தியர்களை வேலைக்கமர்த்தி இருப்பதுபோல், இவர்களையும் கிராம மட்டத்தில் வேலைக்கமர்த்தி வழங்கலாம். ஆனால் இவர்களுக்குக் காலம் தாழ்த்தாமல் பயிற்சி அளிக்க வேண்டியது முக்கியத்துவம் பெறுகின்றது. இதை உடனடியாகச் செய்ய அரசசார்பற்ற ஒரு நிறுவனத்தினாலேயே முடியும். பதினைந்து வருடங்களுக்கு மேலாக இப்பயிற்சிக்கு, யாழ். பகுதிகளில் இருந்து பயிற்றுநர்களைத் தெரிவு செய்யாமல் அரச சுகாதார திணைக்களம் இச்சமூகத்திற்கு தவறிழைத்துவிட்டது.

முதியோர் என்றதும் சாதாரண வழக்கில் 'கிழம்', 'ஒன்றும் செய்ய முடியாதவர்' என்று எண்ணும் ஒரு மனோபாவம் எம்மிடையே வளர்க்கப்பட்டுவிட்டது. இந்நிலை ஒருவேளை 50 வருடங்களுக்கு முன்பு உண்மையாக இருந்திருக்கலாம். இன்று 65 வயதுடைய ஒருவர் அன்றைய 50 வயதுடைய ஒருவரைப்போல் நடந்து கொள்ளுகின்றார் என்பது சமூகவியலாளர்களின் துணிபு. இது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கின்றது. இன்றைய அறுபத்தைந்து வயதினர் நன்றாக, ஒரு சுகதேகியாகவே பெரும்பாலும் இருக்கின்றார். சாதாரணமாக போக்குவரத்துச் செய்கின்றார். முன்பு செய்த வேலையைச் செய்யும் ஆற்றலையும் தகுதியையும் இழந்திருக்கமாட்டார். ஆகவே ஐம்பத்து ஐந்து வயதில் சேவையில் இருந்து ஓய்வு பெறவேண்டும் ன்ற சட்டம் மாற்றப்பட்டு, 65 வயதுவரை வேலை செய்யலாம் (தகுதியானவர்கள்); அதற்கு மேலும் வேலை செய்யலாம் என்ற நிலைவர வேண்டும். சனத் தொகை குறைந்து வரும் சுவீடன், நோர்வே போன்ற நாடுகளில் ஒருவர் 75 வயதுவரை, தான் செய்த வேலையில் முழுமையாகவோ, அல்லது பகுதிநேர ஊழியராகவோ வேலை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்கள். சீனா போன்ற நாடுகளில் வயதானவர்களின் அநுபவம் குறித்து, எல்லாவிதமான நிர்வாக சபைகளிலும் கட்டாயமாக மூன்றில் ஒரு பகுதியினர் 60 வயதுக்கும் அதிகமானவர்களாக இருக்கவேண்டும் என்ற நியதி இருக்கின்றது. காரணம் இவர்களது பட்டறிவு அநுபவத்தின் மூலம் விளைந்தது எவ்வளவோ பிரச்சினைகளைத் தீர்க்க வல்லது என்று அந்த அ ரசுகள் ே நாக்குகின்றன. ஏன் எம்மிடையே மருத்துவ மாணவர்களுக்கான புத்தகங்கள் எழுதியவர்களை விரல்விட்டு எண்ணலாம். இந்த ஆண்டுதான் தனது 72 ஆவது வயதில் பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி), பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களது பாவனைக்கு ஒரு நூலை எழுதி வெளியிட்டுள்ளார். எம்மிடையே காணப்படுகின்ற பலதுறைகளில், அது கல்வியாக இருக்கலாம், கலைத்துறையாக இருக்கலாம், வயதில் மூத்தவர்கள்தான் மற்றவர்கள் பின்பற்றுவதற்கான வழியை அமைக்கின்றார்கள்.

சாதாரணமாக ஒரு வேலையை எண்ணிப் பார்த்தால் முதியவர்களால் செய்ய முடியாதது எதுவும் இல்லை எனலாம். ஆனால் உடல் தளர்வு, மறதி தசைகள் ஒருங்கிணைந்து செயற்படும் திறன் குறைவு முதலிய குறைபாடுகளினால், திடீரெனத் தீர்மானம் எடுத்து உடனடியாகச் செயற்படுதல், பிரயாணம் செய்தல் முதலிய பல செயல்களுக்கு, இளையோரே திறமையாகச் செயலாற்ற முடியும். எனினும் முதியோர், வயதுக்கேற்ற, சுகநிலைக்கேற்ற பல வேலைகளைச் செய்யலாம். இது வீட்டில் தனக்குத் தேவையான தன்னுடைய வேலைகளைச் செய்வதில் இருந்து, வீட்டில் மற்றவர்களுக்கு உதவியாக சமையல் வேலையில் வெங்காயம் உரிப்பதில் இருந்து, பல விதத்தில் தனது அறிவையும், அனுபவத்தையும் பிரயோசனப்படுத்தும் முறையில், தொண்டராக, ஆசிரியராக, கணக்காளராக, எழுதுநராக வைத்திய நிலையங்கள், பள்ளிக்கூடங்கள், கோவில்கள், சமூக நிறுவனங்கள் முதலியவற்றில் முற்போக்கான பங்கு வகித்து நாட்டு மக்கள் முன்னேற்றத்திற்கு உதவுவது வரை அமையலாம்.

இவ்வாறான ஒரு நிலையையே உலக சுகாதார ஸ்தாபனம் கருத்திற்கொண்டு செயலாற்றலுடன் முதுமையடைதல் (Active ageing) என்று உலக நாடுகளுக்கு அறிவுரை வழங்கி இருக்கின்றது. தவிர்க்க முடியாத முதுமையடைதலைச் சிந்தனையிலும், செயலிலும் தளர்வடையாது செயலாற்றிக் கொண்டிருப்பதன் மூலம் - அது வீடு கூட்டுவதாய் இருக்கலாம், அல்லது பெரும் விஞ்ஞானப் படைப்பாக இருக்கலாம் - வாழ்க்கைப் பாதையின் இன்னும் ஒரு உயிர்ப்புள்ள நிலையாக, நாம் இன்னும் குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் வேண்டப்படுகின்றவர்களாக நிலைநிறுத்திக் கொள்ளலாம். இது அவர்களுடைய உள்ளத்திற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். அந்நிய காலத்தில் ஏன் பிறந்தோம் என்னும் நினைவுக்கு இடம் இல்லாது செயலாற்ற எவ்வளவோ இருக்கின்றது என்னும் எண்ணம் தோன்றவேண்டும். அதாவது வாழ்க்கையில் ஒரு பிடிப்பு சாதிக்க வேண்டும் என்ற மனப்பாங்கு தோன்ற வேண்டும். இதை சிலர், முதுமை என்பது மனதைப் பொறுத்த விஷயம் என்று விளக்குவர். சிலர் இருபது வயதில் முதியவர் ஆகலாம். வேறு சிலர் எழுபது வயதில் இளைஞர் ஆகலாம். எது எப்படியாயினும் உடல் நிலையும் அதற்கு ஏற்ற விதத்தில் ஒத்துழைக்க வேண்டும்.

உலக சுகாதார மையம் 65 வயதிற்கு மேற்பட்டவர்களை இளம் முதியோர் (Young old) என்றும், 75 வயதிற்கு மேற்பட்டவர்களை மூத்தமுதியோர் (Oldest old) என்றும் பிரித்து நோக்குகின்றது. இதில் இந்த இளம் முதியோர் சமுதாயத்திற்கு மிகவும் முக்கியமான செயல்களை ஆற்றக்கூடியவர்கள். அவர்களது உளசெயற்திறன் தெளிவாக இருப்பதால் (3% மட்டுமே குறைந்திருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது) அவர்கள் அநுபவ மேன்மை பொருந்தியவர்கள். ஆனால் 80 வயதடையும் போது 30% உளசெயற்பாடு குறைந்து விடும். மூளைக்கும், மனதுக்கும் பிரயோசனமான பயிற்சிகள் செய்து வருவதன் மூலம் இத்தாக்கத்தையும் குறைக்கலாம். இது தனி மனிதனாகவும், குடும்பத்தாராலும் செய்யக்கூடிய தகுந்த காரியம்.

காலம் மாற, சமுதாய விழுமியங்கள், நடையுடை பாவனை மாறுவது தடுக்க முடியாதது. வயது கூடியவர்களுக்கும், குறைந்தவர்களுக்குமிடையே, 25 - 35 வருட இடைவெளி இருக்கும் பொழுதே இம்மாற்றம் தெரியும். இதனைத் தலைமுறை விரிவு (Generation gap) என்று கூறலாம். இரண்டு தலைமுறை பிரிவு பேரன், பேர்த்தி என்று வரும் பொழுது பிரச்சினையாகி விடும். இம்மாறுதல்கள் ஏற்றுக்கொள்ளப்பட

வேண்டியது என்பதை முதியோர் உணர வேண்டும்.

முதியோருக்கு இடையேயும் கலந்து உறவாடி தங்கள் காலத்தை எண்ணி மகிழ, ஒன்றுகூடல் அவசியம். இதற்கு ஏதுவாக முதியோர் கழகங்கள் (Senior citizens clubs) கிராம மட்டத்தில் அமைக்கப்பட வேண்டும். முதியோர் என்று தம்மை அழைக்க விரும்பாதவர்கள் சிரேஷ்ட மக்கள் குழுக்கள், அமைப்புக்கள் என்று மேற்குலகில் அழைத்துக் கொள்ளுகின்றார்கள். இவற்றின் மூலம் தத்தம் வயதொத்தவர்களுடன் பேசிப் பழகுவது, சிரித்து மகிழ்வது, உடல் நிலைக்கு ஏற்ற உள்ளக, வெளிக்கள விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்துவது, பங்குபற்றுவது முதலிய நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஒரு பெரிய மருந்தாக இருக்கும். இவ்வாறான கழகங்கள் சில இடங்களில் முன்னுதாரணமாக அமைக்கப்படுவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வரவேண்டும். அதிகமான அரசியல் தலைவர்களும் இவ்வாறான வயதொத்தவர்களாக இருப்பதால் அரச உதவியும் பின்னர் கிடைக்கும்.

தாம்பத்திய வாழ்வின் அடிப்படையில் பாலுறவு இருப்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. முதுமையெய்தும்பொழுது, விதவைகள் தொகை அதிகமாக இருப்பதுவும், பாலுணர்வு பலருக்கு, முக்கியமாக ஆண்களுக்கு தொடர்ந்து இருப்பதுவும் அறியப்பட்ட ஒன்று. ஆயினும் பாலுணர்வுக்காக மட்டுமன்றி, துணை தேவைப்படும் இக்காலப்பகுதியில், விதவைகள், தபுதாரர்களுக்கிடையிலான திருமணங்களை பிள்ளைகளே முன்னின்று நடத்தி வைப்பது காலத்திற்கேற்ற மாற்றமாய் இருக்கும். சமுதாயம் இதை ஏற்றுக்கொள்ளும் காலம் வெகுதூரத்தில் இல்லை. சமுதாயத்தின் கணிசமான பகுதியினர் முதியோர் என்னும் காலம் வந்து கொண்டிருப்பதால் தலைமைத்துவங்களும் அவர்கள் கையில் இருப்பதால் இது நடந்தே தீரும். சட்டங்களும் மாறும். வயதானவர்களுக்கிடையே திருமணங்கள் செய்து வைப்பதன் மூலம் அவர்களுக்கு இருக்கும் பல பிரச்சினைக் ளுக்குத்தீர்வு காண்பதாக அமையும். வாழ்க்கை முடியவில்லை. இன்னும் வாழ வேண்டும் என்ற முக்கியமான மன உணர்வையும் கொடுக்கும். பாலுறவு, மற்றும் உடல், உள பிரச்சினைகள் இருந்தால் மருத்துவ உதவி பெற்றுக்கொள்ளலாம். மேற்கு நாடுகளில் இப்பொழுது பெரிதும் பேசப்படும் வயாகரா மருந்து காலத்தின் கோலம், சமூகத்தின் ஒரு தேவையின் பிரதிபலிப்பு என்பதை நாமும் மறுக்க முடியாது.

உணங்கி ஒருகால் முடமாகி
ஒரு கண்ணின்றிச் செவியிழந்து
வணங்கு நெடுவால் அறுப்புண்டு
மன்னு முதுகில் வயிறொட்டி
அணங்கு நலிய மூப்பெய்தி
அகல் வாயோடு கழுத்தேந்திச்
சுணங்கன் முடுவல் பின்சென்றால்
யாரைக் காமன் துயர் செய்யான்?

என்ற பாடல் மூலம் மன்மதவாதனை எவ்வளவு கொடிது என்னு விவேக சிந்தாமணி ஆசிரியரால், பெட்டை நாய் - முடுவல், பின் செல்லும் ஆண் நாய் - சுணங்கன், அதுவும் பல குறைபாடுகள் நிறைந்த, மூப்பெய்திய ஆண் நாய் மூலமாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறான பல பிரச்சினைகள் வயதானவர்களுக்கு இருந்தாலும் இன்னும் இவை சமூகத்தால் உணரப்படவில்லை. அரசசார்பற்ற நிறுவனங்களும் - அவை சர்வதேச, தேசிய, பிரதேச என்ற எந்த அமைப்பாய் இருந்தாலும் - சிறுவர்களுக்கு, பெண்களுக்கு, கர்ப்பிணித் தாய்மாருக்கு, வறியவருக்கு என்று சமூகத்தில் பல்வேறு குழுமங்களுக்காகக் குரல் கொடுத்தாலும், அவர்களுக்காகச் சேவையாற்றினாலும், வயதானவர்களுக்கு என்று பெரும் அள வில் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வர வில்லை. ஐக்கிய நாடுகள் சபையில் இப்பொழுதான்

-United Nations Ageening Unit என்று ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. Help Age International Instituate On Ageing (INIA) என்பன சர்வதேச அங்கீகாரத்துடன் சிறிய அளவில் இயங்கும் இரண்டு அமைப்புக்களாகும். இவை சமூக மட்டத்தில் மூப்பெய்தியவதிடையே வேலை செய்வதற்குரிய பயிற்சியைப் பரந்த அளவில் கொடுக்க முன்வந்துள்ளன. பிலிப்பீன்ஸ், ஜப்பான் முதலிய நாடுகள் இப்பொழுதே கணிசமான அளவில் இவற்றுடன் இணைந்து செயற்பட ஆரம்பித்துவிட்டன. இலங்கையிலும் Helpage International பண்டாரவளையில் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் எமக்குப் புதிதான ஒரு கருத்தை ஆராய வேண்டும். பெரிதான நிலப்பரப்பு இருக்கும் இடங்களில் புதிதாக முதியோர் கிராமங்களை அமைப்பது இக்கருத்து. சிறுவீடுகள், கொட்டகைகள் முதலியவை அமைப்பித்து, ஒவ்வொரு முதியவருக்கும் ஆண், பெண் வேறுபாடின்றி தனித்தோ, குடும்பமாகவோ இவ்வாறு பொருத்தமான இருப்பிட வசதியை வழங்குதல் பொழுது போக்குவதற்கு பொது இடங்களும், மருத்துவ வசதி, தனிப்பட்ட கவனிப்பு என்ற வகையிலும் ஒரு நிர்வாகத்தின் கீழ் இக்கிராமம் இருக்கவேண்டும். உணவுத்தேவைக்காக உணவு விடுதி போன்றனவுடனும், போக்குவரத்துச் சாதனங்கள் முதலியவற்றுடனும் இது இயங்க வேண்டும். இவற்றில் இருப்பவர்கள் குறிப்பிட்ட தொகையைத் தங்களது பென்சன் ஓய்வூதியம், அல்லது பிள்ளைகள் அனுப்பும் பணம் போன்றவற்றின் மூலம் கொடுத்து இடம் எடுக்கக்கூடியதாக இருக்கும் இவ்வாறான அமைப்பில் வசிப்பவர்களுக்கு ஓரளவு பிரத்தியேக வாழ்வும் (Privacy) கவனிப்பும், பொது ஈடுபாடும் இருப்பதாக அமையும். இவ்வாறான ஒரு அமைப்பு அரசசார்பற்ற பொது நிறுவனங்களின் உதவியோடு ஆரம்பிக்கப்பட வேண்டும். ஒன்று சரியாக இயங்கினால், பின்னர் வேறு இடங்களுக்கு விஸ்தரிக்கப்படலாம்.

யாழ்ப்பாணத்தில் இன்று பல இடங்களில் வீடுகளில் வசிக்கும் மூத்தோர் நன்மை கருதி, பகல்நேரக் கவனிப்பு நிலையங்களை உருவாக்கி இருக்கிறார்கள் (Day Care Centre) இவை முதியவர்கள் வந்து, ஆற அமரப் பேசி, மற்றவர்களைச் சந்திக்க, ஆறுதல்பெற வசதியாக இருக்கும். இவர்கள் இங்கு இருக்கும் பொழுதோ அல்லது வீட்டில் இருக்கும் பொழுதோ, பயிற்றப்பட்டவர்கள் உதவிக்கு வரலாம்.

முடிவாக எம்மவரைப் பொறுத்த மட்டில் மூப்படையும் பொழுது ஏற்படக் கூடிய பிரச்சினைகளுக்கு மிகவும் நல்ல ஏற்பாடு, கூட்டுக் குடும்பம். அது முடியாத விடத்து, தம்மைத்தாமே கவனித்துக் கொள்ளக்கூடியவர்களுக்காக ஒரு கிராமம் போன்ற அமைப்பை ஏற்படுத்திக் கொடுப்பது சிறந்ததாக இருக்கும்.

தமது சொந்த வீட்டிலேயே தம்மைத் தாமே கவனித்துக் கொண்டு இருப்பவர்களுக்குப் பயிற்றுவிக்கப்பட்ட தொண்டர்கள் வந்து துணி தோய்த்துக் கொடுப்பதில் இருந்து பல வேலைகளைச் செய்யலாம்.

இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்ட முதியவர்கள், விசேடமான கவனிப்பைப் பெறுவதற்கு வயோதிபர் விடுதிகளுக்கு செல்ல வேண்டி இருக்கும். இவற்றில் சில வைத்தியசாலைகளாகவே இருந்து விட வேண்டி வரலாம் - Geriatric Hospitals. எந்த அளவு நீண்ட காலத்திற்கு வயோதிபர் இவ்வாறான நிறுவன அமைப்புக்குள் வராமல், பிள்ளைகளும், உற்றார் உறவினர்களும் அவர்களை வைத்து, நல்லமுறையில் பாதுகாத்துப் பராமரித்து, அவர்கள் மூலம் சமூகம் பயன்பெறுகிறதோ, அந்தச் சமூகம் ஒரு நாகரிகம் அடைந்த சமூகம் என்று கணித்துக் கொள்ளலாம்.

**செ. கு. நச்சினார்க்கினியன்**

# வாழ்க்கை வட்டச்சடங்குகள்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வாழும் மக்கள் தமிழ் மரபுகளை இறுக்கமாகப் பேணும் வழக்கமுடையவர்களாக இன்னும் இருந்து வருகிறார்கள் குறிப்பாகத் தனிமனித மற்றும் குடும்ப நிலையில் சடங்கு முறைகளைப் பின்பற்றுவதில் இன்றும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஒருமனித வாழ்கைவட்டத்தை மையப்படுத்திய இச்சடங்குகள் பிறப்பு முதல் இறப்பு வரை இறப்பிற்குப் பின்னும் நடைமுறையில் இருக்கும் மரபுகளாக இன்றும் பேணப்படுகின்றன.

**நாமம் சூட்டு சடங்கு**

நாமம் சூட்டுச் சடங்கு என்பது பிள்ளைக்கு இவ்வுலகத்திலே கொடுக்கப்படும் அடையாளச்சடங்காக இருக்கின்றது பிள்ளை பிறந்து 15 நாட்களுக்குள் நெருங்கிய உறவினர்களுக்கு அறிவித்து வீட்டில் விருந்து சமைத்து பெரியவர்களுக்கு கொடுத்து பிள்ளையின் பெயர் குறித்த சாத்திர எழுத்துக்களைத் தகப்பன் முன்வைப்பார் அப்பொழுது குடும்பத்தில் இருக்கும் மூத்தவர்களுக்கு அப்பெயரை எழுதக் கொடுக்க அவர் தன் வாயில் தன் குல தெய்வத்தை மனதில் நினைத்து அப்பெயரை உச்சரிப்பார் பின்பு எல்லோருக்கும் இனிப்பு அல்லது கற்கண்டு வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

**தொடக்குக் கழிவும் காதுக் குத்தும்**

அநேகமாக தொடக்குக் கழிவு 31ம் நாள் நடப்பது வழக்கம் சமய குரு மற்றும் நாவிதர் ஆகியோரை அழைத்து வீட்டில் கும்பம் வைத்து இந்நிகழ்வைச் செய்வார்கள் காது குத்தும் நிகழ்வு மாமன் மடியில் வைத்து குத்தும் வழக்கம் தற்போதும் உள்ளது.

**தொட்டில் போடுதல்**

தொட்டில் போடுதல் சடங்கு குழந்தை பிறந்து 45நாட்களுக்குள் நடக்கும் ஒரு நிகழ்வாகும் இச்சடங்கிற்காக பரத்தியேகமாக மரத்தினால் செய்யப்பட்ட ஒரு தொட்டிலோ அல்லது பரம்பரையாகப் பேணப்பட்டு வரும் தொட்டிலோ அல்லது பரம்பரையாகப் பேணப்பட்டு வரும் தொட்டிலோ பயன்படும் உற்றார் உறவினர்களுடன் ஆரம்பமாகும் இச் சடங்கில் தாய்மாமன் குழந்தையை முதலில் தொட்டிலில் கிடத்தி குழந்தைக்குப் பரிசு வழங்குவார்.

**சோறு தீத்துதல்**

சோறு தீத்தும் சடங்கும் குழந்தையை விற்று வாங்கும் நிகழ்வும் ஒரே நேரத்தில் நடக்கும் வீட்டிலோ அல்லது கோவிலிலோ உறவினர்களின் வாழ்த்தலோடு நடைபெறும்

**பல்லுக் கொழுக்கட்டை கொட்டுதல்**

குழந்தைக்குப் பல் முளைத்தவுடன் தமது உறவினர்களுக்கு அறிவித்து கொழுக்கட்டை செய்து பிள்ளையைப் பாயில் இருத்தி தாய் மாமனை பிள் ளையின் மடியில் கொழுக்கட்டையை கொட்டச்செய்வார்கள் இதன் போது பிள்ளைக்கு முன்னால் ாடிக்கும் உபகரணம் ணம் பூ போன்றவற்றை வைப்பார்கள் பிள்ளை எதனை எடுக்கின்றதோ அத்துறையில் பிள்ளை வளரும் என்ற நம்பிக்கையுண்டு.

**ஏடு தொடக்குதல்**

பிள்ளைக்கு 3வயது முடிந்தவுடன் ஏடு தொடக்கும் சடங்கு செய்யப்படும் இச் சடங்கு அநேகமாக கோவில் அல்லது பாடசாலையில் நடைபெறும் எங்கு நடந்தாலும் ஏடு தொடக்குபவரிற்கு தட்சணையும் பூசைப்பொருட்களும் வழங்கப்பட்டு பிள்ளைக்கு முதல் எழுத்தை நெல்லிலோ அல்லது அரிசியிலோ எழுதி “அ” என்று சொல்லத் தூண்டுவார்கள்.

**சாமத்தியச் சடங்கு**

பருவம் அடைதல் பூப்படைதல் என்று பெண் பிள்ளைகளுக்கு செய்யப்படும்

இச்சடங்கு பெண் பிள்ளைகளுக்கு உடல் ரீதியாக ஏற்படும் மாற்றத்திற்கான ஒரு சடங்காக அனுமதிக்கப்படுகின்றது பூப படையும் பிள்ளையை தாய்மாமன் கண்ட தண்ணீர் வார்த்தல் என்ற முதல் சடங்கைச் செய்து கொடுப்பார் பின்பு குடும்ப வசதியைப்பொறுத்து தொடக்குக் கழிவு நிகழ்வு செய்யப்படும்.

### திருமணச் சடங்கு

பொதுவாகப் பெரியோர்களால் நிச்சயிக்கப்படும்திருமணங்கள்இருவீட்டாரும் சந்தித்துப் பேசுவதும் பின்பு விருந்து வைத்து திருமண நடைமுறை சொத்துப்பகிர்தல் குறித்த விவாதம் நடைபெறும் இந் நிகழ்விற்குப் போகும் இரு வீட்டாரும் கொழுக்கட்டை கொண்டு செல்வது வழக்கம் திருமணம் கோவில்களிலோ அல்லது வீட்டினிலோ அவரவர் நம்பிக்கை மரபிற்கேற்ப நடைபெறும் இப்பிரதேசத்தில் பரிசம் போடுதல் கன்னிக்கால் நடுதல் பொன்னுருக்குச் செய்தல் மறுவீடு வருதல் போன்ற உட்சடங்கு முறைகளும் இன்று வரை பின்பற்றப்பட்டு வருகின்றன.

### மரணச்சடங்கு

ஒருவர் இறந்து விட்டால் இரண்டு நாட்களுக்குள் அடக்கம் செய்வது வழக்கம் அடக்கம் செய்யவது வழக்கம் அடக்கம் செய்ய முன்பு சலவை செய்பவர் அல்லது நாவிதர் அல்லது குருக்கள் இவர்களுள் இருவர் அல்லது ஒருவர் இச்சடங்கை நடாத்துவார் பொதுவாகத் தாய்க்கு மூத்த மகனும் தந்தை இளைய மகனும் இக் கிரியைகளை செய்யும் பொறுப்புக்குரியவர் கும்பம் வைத்தல் உரல் இடித்தல் நீர்க்குடம் எடுத்தல் கொள்ளி உடைத்தல் போன்ற சடங்குகளும் இறந்த தினத்தில் இருந்து மூன்று அல்ல ஐந்து அல்லது எட்டாவது தினங்களில் செலவு என்ற கிரியை செய்வதும் பின்பு 31ம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் செய்து சடலம் எரிக்கப்பட்டிருக்குமாயின் கடல் அல்லது ஆறு அல்லது நீர் நிலைகளில் அஸ்தி கரைக்கப்படும்.

மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை மேற்கொள்ளப்படும் சடங்குகள் தமிழர் வாழும் பிரதேசங்களில் சிறப்பாகப் பேணப்பட்டு வருவதனை காணலாம்.

**இ. கிசாந்தி**
பிரதேச செயலகம்
ஒட்டுசுட்டான்

# புதுக்கவிஞர்க்கோர் விண்ணப்பம்

புதுக் கவிஞர்களே நீங்கள்
புரிந்து கொள்ள வேண்டும் இதை
புதுக் கவிதை என்று சொல்லி
புரியாத கவி சொல்வது ஏன்?

கவிதைக்கு எது வேண்டும் என்றால்
கண்டிப்பாக கருவே என்றாலும்
கவர்ச்சியும் அதனுள் வேண்டும்
கவரும் சொல்லாட்சியும் இருக்க வேண்டும்

அணிகளை அணியும் பெண்கள்
அணிவதன் நோக்கம் என்ன
அணிகளை அணியா கவிதை
அழகுடன் விளங்குமோ சொல்

அரங்கிலே சொல்லும் கவியும்
ஏட்டிலே வரையும் கவியும்
எப்படி இருத்தல் வேண்டும்
என்பதை தெரிந்தே எழுதுதல் வேண்டும்

யாப்பிலே அசையும் சீரும் தொடையும்
அடியும் அவசியம் என்றார் பண்டிதர்
அடிதோறும் எதுகையும் மோனையும்
அழகாக சொல்லித் தந்தார் அன்று

பூவே உன்னை சுவாசிக்கின்றேன்
நேசிக்கின்றேன்
பூசிக்கின்றேன்
பூவே நீ எனக்காக
புன்னகை செய்வாயா?

இது புதுக்கவிதை என்றாலும்
புரிகிறதா உங்களிற்கு
புதுக்கவிதை தந்த பாவேந்தன்
புரிவாரா இக்கவியை இன்று
புதுக்கவிதைக்கு படிமம் எதற்கு
குறியீடு தான் எதற்கு புரிகிறதா
படிமம் பற்றிய தெளிவில்லா ஒருவன்
படிமம் என்று புரியா கவிதை புனையலாமா

என்படிமத்தை ஒருமுறை படியுங்கள்
புரிகிறதா உங்களிற்கு
புரிந்தால் என்ன என்றுதான்
எழுதியேனும் அனுப்புங்கள்

ஆண்டுக்கு ஒருமுறை ஐயனார் கோவிலில்
நடக்கும் பொங்கல் வேட்டுக்கள் விட்டு
தோரணம் கட்டி தீபங்கள் ஏற்றி
தெருக்களை அலங்கரித்து தெய்வத்திற்கு
பொங்கல்

தீபத்தின் ஒளியில் இருளது விலகி
தெய்வத் திருமுகம் தெளிவாய்த் தெரியும்
தெய்வத்தை கண்டு கண்ணீர் பெருக
அடியவர் நிற்பர் அடியினை பணிபவர்

ஐயனார் கோயிலில் பூசாரி கட்டுக்கள்
கண்டிப்பாக சொல்வர் கட்டினைக் கேட்டிட
கண்ணும் செவியும் கவனமாய் இருக்கும்
கட்டிலேதான் அடுத்த ஆண்டு நடப்பது
எல்லோரும் அறிவர்

இன்று கோயிலும் இல்லை பூசையும் இல்லை
சாமியும் இல்லை தீபமும் இல்லை
கட்டினை கேட்க காதும் இல்லை
கோயில் இருந்த இடம் எருக்கலை பூர்த்து
எழிலைத் தருதே.

(என் படிமத்தை)

சாதாரன அறிவு கொண்ட
மானிடன் புரியாத படிமம்
நாயக்கர் கால கவிதையில்
கொடியது என்றே நானுரைப்பேன்
கவிஞர்கள் பலர் வாய்மூடி

மௌனமாய் இருக்க - ஏதோ
கதை கூறித்தன்னை கவிமணி
என்று அழைப்பது சரியா?

சந்தம் கூட இல்லாத
சரிவர மொழி தெரியாத
ஒருவன் தன்னை செந்தமிழ்
கவி என்றால் என்ன செய்வேன்

என்னுடைய எளிதான விண்ணப்பம்
எவன் தன்னை தான் கவிஞன் என
பட்டம் சூட்டுகின்றானோ அவன் தன்னைத்
தான் அறியான் தமிழை அவன் அறியான்.

என்னருகிருக்குமென்
மனைக் கிளத்திக்கு இறுத்துவிடும் வரி
என் அணைப்பினில் இருந்திடும்
உன் நடிப்பினை அறித்திடும்
நல்நாயகன் வாழ்க்கையை

பொறுத்திட திடமிலையெனின்
வெறுத்திடும் வரை இருக்கிறேன்
மறுத்திடாப் பணி புரிவியா?
மறுபடா நடை பெறுவியா?
மாமியின் நடை அறிவியா?
மான் என உனை அழைத்திட

நடிப்பினில் நீ மேதைதான்
என்னுடன் நடித்திட
மனத்திடமது இல்லையேல்
கழுத்தினில் நானிட்ட மாலையை
கழட்டி நீ வீசிடு அதை
கழுத்தினில் அணிவதால்
கற்பினில் மதுரையை
எரிப்பதை விட பாவமே

என்னை நீ பிரிந்திடும்
எள்ளது அளவு நேரமும்
எனக்கு ஏற்படும் வலியது
உனக்குமே உண்டெனில்
உன்னை நான் உணர்கிறேன்.

என்னவள் நீயென்று
என்மனையவள் என் தமிழ்
என் அரசியாய் இனி இவ்
உலகினில் எந்தன்
தமிழிற்கு நீ அரசி
எந்தனை ஆளும் என்
தமிழே நீ என் மனம்
கவர்ந்த தமிழரசி

திறனாய்வு செய்ய வாருங்கள்
அழைக்கப்படுகிறார் ஆய்வாளர்
ஆய்வு செய்யும் படைப்பினை
ஆதிமுதல் அந்தமாய் அலசி
அனைத்துமே திறன் இல்லையே
ஆய்விலே அவர் கூறினால்
அறுத்துப் போட்டு போயிட்டார்

அடுத்தநாள் கதைப்பது
திறனற்ற ஓர் படைப்பினை
திறனாய்வு செய்வதா?
சிவத்தம்பி தமிழ் திறனாய்விலே
திருத்தமாய் அன்று உரைத்தது

தமிழை பாவம் என்று உரைப்பதும்
மெல்ல சாகுமென்று சொல்வதும்
தன்னை உணராத தாய்மொழியை
தானறியா தமிழன் வார்த்தையே

மெல்ல மெல்ல தமிழ் இனிக்கும் - அதை
சொல்லச் சொல்ல அது மணக்கும்
கொல்ல கொல்ல அதுதான் -அழியும்
கொல்லாத தமிழ் என்றும் வாழும் .

# சித்த வைத்தியத்தின் சிறப்புக்கள்

வன்னிவள நாட்டின் புகழ்பூத்த சித்த மருத்துவர் மதிப்பிற்குரிய திரு அரியக்குட்டி நாகமணி அவர்களுடன் நேர்காணலின் போது..........

**வினா 1. வணக்கம் ஐயா உங்களுடைய வாழ்க்கை வரலாறு பற்றி சுருக்கமாக கூறுங்கள்.**

எனது பெயர் அரியக்குட்டி நாகமணி. வயது 83. 1933ஆம் ஆண்டு பிறந்தேன். எனது பூர்வீகமான இடம் கற்சிலைமடு. 1933ஆம் ஆண்டு கணபதிப்பிள்ளை என்ற ஒரே ஒரு ஆசிரியர்மட்டுமே எமது பாடசாலையில் இருந்தார். எங்களுடைய குடும்பம் பரம்பரையாக சித்த மருத்துவம் செய்து வந்தமையால் நானும் பாடசாலையிலிருந்து விலகிய நாளிலிருந்து எனது தந்தையார் வைத்தியர் அரியக்குட்டி அவர்களிடமும் எனது பேரனாக வரும் வன்னியின் பிரபல வைத்தியருமான மு.காங்கேசு என்பவருடனும் 1948ஆம் ஆண்டு தொடக்கு தயாரித்தல் மூலிகை தயாரித்தல் போன்ற உதவிகளை செய்து கொண்டு அவர்கள் மூலம் நாடிசாஸ்திரம் மூலிகைஅகராதி பதார்த்தகுண விளக்கம் நிகண்டு குணவாகடம்சிகிச்சை இரத்தின சுருக்கம் போன்ற முறைகளை ஏட்டில் படித்து எனது வைத்தியப்பணியை 1955ஆம் ஆண்டு ஆரம்பித்தேன். எங்களது மருத்துவ முறைகளை கற்றுப்பழகியும் செய்து வந்தோம்.

நான்1979ஆம் ஆண்டு இலங்கை ஆயுர்வேத வைத்திய சபையின் பரீட்சையின் பின் பதிவு பெற்ற ஒரு வைத்தியரானேன். எனது பதிவு இலக்கம் 7224 இதற்கு முன்னதாக எனது மனைவியின் தந்தையாரும் எனது மாமனாருமான காங்கேசு நல்லையா என்பவரும் வன்னியில் பிரபலமான வைத்தியராக குமுழமுனைப்பகுதியில் சேவையாற்றியுள்ளார். அவரும் அரச பதிவுபெற்ற வைத்தியராகவும் கிராம சேவையாளராகவும் 1940ம் ஆண்டுதொடக்கம் பணியாற்றியுள்ளர். எமது பரம்பரை நானறிந்த வரையில் ஆறாவது பரம்பரையாகவும் எனது மகன் நாகமணி வன்னியசிங்கம் ஏழாவது பரம்பரையாகவும் தற்போது செய்து வருகிறார். அவரது பதிவு இலக்கம் 10579 அடுத்து எமது மருத்துவத்துறையை வளர்க்கவும் பரம்பரையை பாதுகாக்கவும் எனது பேரன் வன்னியசிங்கம் ஆதவன் என்பவர் வேறு துறைகளில் கல்விகற்கக்கூடிய வாய்ப்பு இருந்தும் சித்த மருத்துவத்தை மேம்பாடடையச் செய்ய வேண்டும்' என்பதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ பீடத்தில் 4ம் வருடத்தில் பயின்று வருகின்றார்.

**2.சித்த மருத்துவம் பற்றி சுருக்கமாக கூறுக**

சித்த மருத்துவம் என்பது மணிமந்திர ஔடதம் எனப்படும். சோதிடம் மாந்திரீகம் மருந்து மூன்றும் சேர்ந்ததே சித்த மருத்துவமாகும். யுனானி அக்குபக்சர் ஹோமியோபதிசித்தம் எல்லாம் சேர்ந்து ஆயுர்வேதமாக அன்று இருக்கின்ற போதும் சித்த மருத்துவம் ஒன்றே தமிழர்களின் கலர்சாரம் பாரம்பரியம் வாழ்க்கை விதி முறைகளோடு ஒன்றாக சேர்ந்து காணப்படும் ஒரு மருத்துவமாகும்.

**3.நீங்கள் எவ்விதமான நோய்களுக்கு சிகிச்சை வழங்குகிறீர்கள்**

குறிப்பாக வாதம் சிறுபிள்ளைகளுக்கான களிசுரம் கிரந்தி பெண்களுக்கான கெற்ப ரோகங்கள் குழந்தை பேறின்மை சுவாச ரோகங்கள் போன்றவற்றுக்கு சிகிச்சை செய்கிறேன்.

**4.தாங்கள் சித்த மருத்துவத்தின் மாந்திரீகத்தின் பங்கு பற்றியும் அதன் தொழிற்பாடும் எவ்வாறு மக்கள் மத்தியில் பலனடைகிறது என்பதை சற்று விளக்கமாக கூறமுடியுமா?**

மாந்திரீகம் என்பது வேத ஆகமங்களை வகுத்த முனிவர்களை கூறப்பட்டது. தெய்வீக

சத்தியுடையது. குறிப்பாக மருத்துவத்தை பொறுத்த வரையில் முற்காலத்தில் விசம் கடித்த யாருமே வைத்தியசாலைக்கு செல்வதில்லை. அவ் வைத்தியசாலை வசதியும் இல்லை. மாந்திரீகம் மூலம் விசக்கடிப்பார்வை குழந்தைகளுக்கான மாந்தசுரப்பார்வை பிணிதோசம் நூல்கட்டுதல் கண்திட்டிக்கு தண்ணீர் ஓதுதல் குறிபார்த்தல் குறிப்பாக விசக்கடிக்கு தூதன்குறி எனும் குறிபார்த்தல் போன்றவை மருத்துவத்துடன் ஒன்றிணைந்து காணப்படுகிறது.

**5. மகப்பேற்று மருத்துவம் பற்றி சித்த மருத்துவத்தில் தாங்கள் எவ்வாறு சிகிச்சை மேற்கொண்டு வருகிறீர்கள் என்பதை கூறமுடியுமா?**

இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்பு இப்பகுதியில் பாரிய வைத்திய வசதிகள் இல்லை. அப்போது இப்பகுதியில் உள்ள பெண்களுக்கான குழந்தைப்பிரசவம் முழுவதும் சித்த மருத்துவத்திலேயே கவனிக்கப்பட்டது. என்னுடைய அனுபவத்திலே இப்பகுதியில் தற்போது ஐம்பது வயதில் உள்ளவர்களில் 90% ஆனவர்கள் சித்த மருத்துவத்தின் மூலம் குழந்தைப்பிரசவமானவர்களே குழந்தை பிறந்தவுடன் குழந்தைக்கு கொடுக்கும் மருந்துகளான கோரோசனை கஸ்தூரி முக்கூடு கிரந்தி எண்ணை பிரசவித்த தாய்க்கான ஊறல்கள் குடிநீர்கள் கறணங்கள் போன்றன எந்தவித நோய்த்தொற்றுகளும் ஏற்படாமல் நோய் எதிர்ப்பு சக்தியை கொடுக்கும் உன்னதமான மருந்துகளும் மனிதருக்கு நீண்ட ஆயுளையும் கொடுக்கும் மருந்துகள் கொண்டும் குறையும் சித்தமருத்துவத்தில் இருந்நு வந்தது.

**6.தங்களது சித்த வைத்திய காலத்தில் மறக்கமுடியாத சம்பவம் அனுபவம் ஏதாவது இருந்தால் கூறமுடியுமா?**

ஆம் நான் 34 வருடங்களுக்கு முன்பு பெரியமடு நெடுங்கேணியில் ஒருவர் அப்போது இருந்தார். அவருக்கு வயது 22. இவர் கடும் சுகவீனமடைந்து யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் வைத்திருந்தனர். அவரது உடல் மெலிந்து பேச்சு அறிவு என்பனவும் இல்லை. மூச்சு மட்டும் இருந்தது. நீராகாரம் மட்டுமே அருந்திக்கொண்டு இருந்தார். வைத்தியர்கள் கைவிட்டுவிட்டனர். வீட்டுக்கு கொண்டு போகும்படி கூறப்பட்டது.(அவரது தந்தையார் தற்போது இறந்து விட்டார்.) அவர் நோயாளியை பார்க்கும்படி கூறினார். நான் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்குச் சென்று பார்த்து அவருடைய கைநாடியை பார்த்த போது அவருக்கு சிகிச்சை வழங்கக்கூடிய நிலைமை இருந்தமையால் வீட்டுக்குகொண்டு வரும்படி கூறினேன். அதன்படி அவர்களும் மறுநாள் வீடடுக்கு கொண்டு வந்தார்கள். நான் தலைக்கு அரிதாரம் என்ற தைலம் வைத்து புன்னைவேர் என்ற குழுசையும் கொடுத்தேன். மூன்று நாள் எனது சிகிச்சையின் பின் கண்திறந்து கூப்பிட்டவர்களை பார்த்தார். பின்பு ஏழு நாள் சிவன் குழுசை தைலத்துடன் கொடுத்தவுடன் எழுந்து இருந்து உணவு உண்டார். பின்பு 14 நாட்கள் அனுமானம் மாற்றி மருந்துகள் குடிநீர் எனக் கொடுத்தேன். எழுந்து நடந்து ஒருமாத காலத்தில் துவிச்சக்கர வண்டியில் வந்து என்னிடம் மருந்து எடுத்துச் சென்றார்.

தற்போது ஒரு குடும்பத்தஸ்தராக கிட்டத்தட்ட 56 வயது இருக்கும் வாழ்ந்து வருகிறார். இதனைப் பார்த்த பலர் வியப்படைந்தனர். இப்போது இருந்த நீதிபதி அவர்களால் பாராட்டு தெரிவிக்கப்பட்டு சன்மானமும் வழங்கப்பட்டது. இச்சம்பவமும் அக்குழுசையின் மகத்துவமும் அந்தத் தைலத்தின் மகத்துவமும் என்னால் மறக்க முடியாத ஒன்றாக இருந்தமையால் இந்த குழுசை மற்றும் தைலங்கள் என்னுடைய எதிர்கால சந்ததிக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றமையால் இதன் தயாரிப்பு முறையையும் இதனுடைய விசேட சக்தியை எனது பரம்பரைக்கு விசேடமாக சொல்லியும் பழக்கியும் வைத்துள்ளேன்.

**7.தங்களின் மறக்கமுடியாத சம்பவத்தில் குறிப்பிட்டபடி நோயாளியை நாடி பார்த்து சுகப்படுத்தலாம் எனக் கூறினீர்கள். நவீன காலத்தில் மனிதர்களது நோயைப் பரீட்சிப் பதற்காக நவீன கருவிகள் விஞ்ஞான ரீதியாக உள்ளது. இவற்றுக்கு ஈடாக உங்களது கைநாடிப் பரீட்சை எவ்வாறு அமைகிறது என்பதைக் கூறுவீர்களா?**

ஆம் மனிதருடைய உடலில் கைமணிக்கட்டு நெஞ்சு முதுகுப்பகுதிகளில் நாம் நாடித்துடிப்பை பார்க்க முடிந்தபோதும் எங்களுடைய பண்டைய சித்தர்கள் முனிவர்களினால் கையின் மணிக்கட்டு பகுதியே நோய் நிதானிக்க நாடிமார்க்கபம் பிரயோகப்படுத்தப்பட்டு வந்துள்ளது. அதிலும் வாத பித்த சிலேற்றுமம் என மூன்றாக கணிக்கப்பட்டு நாடி சாஸ்திர அடிப்படையில் நோய் நிதானம் செய்யப்படுகிறது. சுருக்கமாக கூறினால் ஒரு மானிடன் பிறக்கின்ற காலமும் இறக்கின்ற காலமும் ஒரு சித்த வைத்தியத்தினால் நாடிப்பரீட்சை மூலம் கூற முடியும். பிரசவ வேதனையில் இருக்கும் தாயின் கை நாடியைப் பார்த்தால் பிரசவ வலியா நோயா எனக்கூறலாம். இறக்கின்ற நிலையில் இருக்கும் ஒரு மனிதனின் நாடியைப் பார்த்தால் இறக்கும் காலத்தைக்கூறலாம்.

ஐயமாம் நாடிதானும் அரவணைவால் துடிபோல்
ஓடில் செய்வது ஒன்றில்லை காலன்
தேடுவது திண்ணம் எனக் கையினைப் பிடிக்க
வேண்டாம் களன்று நீ அப்பாற் செல்.

என நாடி சாஸ்திரம் கூறுகிறது. அதைவிட அஸ்டவித பரீட்சை என ஒன்று உண்டு. கண் மூக்கு பல் நாக்கு உடம்பு சலம் நிகம் மலம் இவற்றை அவதானித்தும் நோயை அறியக் கூடிய வழியுண்டு. என்பதை நாடி சாஸ்திரம் கூறுகிறது.

**8. சித்த மருத்துவத்தில் சோதிடம் சம்மந்தப் படுவதாகக் கூறினீர்கள் அது எவ்வாறு சோதி டத்தின் மீது உங்களது நம்பிக்கை பற்றிக் கூறுவீர்களா?**


சோதிடம் பொய் என்றால் கிராணத்தைப் பார்க்க வேண்டும். மருத்துவம் பொய் யென்றால் பேதியைப் பார்க்க வேண்டும் எனப் பழமொழி உண்டு. சித்த மருத்துவர் ஒருவருக்கு சோதிடம் மிகவும் முக்கியமானதாகும். மருந்து மூலிகைகள் பிடுங்க நாள் பார்த்தல் மருந்துண்ண நாள் பார்த்தல் நோயாளியின் கிரக தோசம் பார்த்தல் போன்றவை யாவும் சோதிடமும் சேர்ந்தே காணப்படும்.

**9.தங்களது வைத்தியப்பரம்பரை கிட்டத்தட்ட 500 ஆண்டுகள் வரை தொடர்வதாக இருப்பதால், அக்காலத்தில் வன்னியை ஆண்ட அரசர்களுக்கும் சித்த வைத்தியர்களுக்கும் இடையேயான தொடர்புகள் ஏதாவது சம்பந்தமான கதைகள் உண்டா?**

எனது பேரனார் கூறினார் குத்துக்காய் சம்மட்டி என்ற மூலிகையை பிடுங்கும் போது இதுதான் மோனை நோவுக்கு ஐந்து நாள் அவித்துக் குளிக்க நோ இல்லாமல் போகும் பண்டாரவன்னியன் போரில் நோவடைந்த வேளையில் எல்லாம் இம்மூலிகை தான் என்றும் அதே போல குமுழமுனைப் பகுதியில் இருந்த சிற்றரசன் ஒருவனின் மனைவி பிரசவ வேதனையால் துடித்துக் கொண்டிருந்த வேளை அந்தப்புர தோழிகள் செய்வதறியாது திகைத்து நிற்க மன்னன் சித்த மருத்துவரை அழைத்து அரசகுமாரியின் பிரசவத்தை கவனிக்குமாறு பணித்தான்.

அந்தப்புரத்துக்கு எந்தவொரு ஆண்மகனும் செல்வது வழக்கம் இல்லை. இதனால் மருத்துவர் தன்னுடைய யுத்தியை கையாண்டு தோழியின் உதவியோடு வாத பித்த சிலேத்துமம் எனும் மூன்று நாடிகளுக்கும் மூன்று நூல் கட்டி அந்தப்புரத்துக்கு வெளியே இருந்து நோயறிதல் செய்து மருந்து கொடுத்து அனுப்பி பிரசவித்ததை கண்ட மன்னன் வியப்படைந்து வைத்தியரை பாராட்டி பரிசளித்தான். என எனது பேரனான காங்கேசு கூறிய கதை ஒன்று உள்ளது.

எமது தமிழ் மக்கள் பாரம்பரிய வைத்திய முறையான சித்த மருத்துவம் தொடர்பான பல விடயங்களை மிகவும் சிறப்பாக இந் நேர்காணல் வழங்கிய உங்களுக்கு எமது




மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதுடன் சிரமம் பாராது எமக்கு இந் நேர்காணலுக்கு வேண்டிய அனைத்து விடயங்களையும் பகிர்ந்து கொண்டமைக்கு எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். தங்கள் பணி சிறக்கவும் இச் சித்த வைத்திய முறை மேலும் வளர்ச்சி அடையவும் தங்களின் பரம்பரை தொடர்ந்து செல்லவும் இன்று இத்துறையை வழிப்படுத்தவும் இறைவன் துணை புரிய வேண்டும் என்றும் வேண்டி தங்களிடமிருந்து விடை பெறுகிறோம்.

**சி. வேதனம்**
கற்சிலைமடு



# அறிவியல் மொழியாகத் தமிழ்

அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பது போல அறிவியலின்றி ஒரு செயலும் நடைபெறாது என்று கூறலாம். அந்தளவுக்கு அறிவியல் அனைத்து விடயங்களிலும் இன்றைய நவீன காலத்தில் செல்வாக்குச் செலுத்துகிறது. மனித வாழ்வின் ஊனாய், உயிராய் அமைந்து இயற்கையை உணர்கின்ற ஆற்றலாகவும், சில வேளைகளில் இயற்கையின் போக்கையே மாற்றியமைக்கும் வல்லமை கொண்டதாகவும் அறிவியல் வளர்ந்துள்ளது. மேலும் வளர்ந்து கொண்டிருக்கின்றது. மதம், கலை, இலக்கியம் ஆகிய முறைகளில் மேலோங்கி நின்ற விழிப்புணர்வு அறிவியலிலும் உச்ச நிலையில் வளர்ச்சி கண்டது. ஆகவே இவற்றினூடாக அறிவியல் என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்ளக் கூடியதாக உள்ளது. அதாவது அறிவு, இயல் ஆகிய இரு சொற்களின் இணைப்பினால் அமையப்பெற்றது அறிவியல்.

அறிவு என்பதற்குத் திறமை, ஆற்றல், புத்திக்கூர்மை, கண்டுபிடிப்பு என்றவாறாக பல அர்த்தங்கள் வெளிக்கிளம்புகின்றன. இயல் என்பது துறை, ஆராய்ச்சி, வைப்பு முறை முதலான பல கருத்துக்களுக்குப் பொருந்துகிறது. ஆகவே அறிவியல்என்பது அறிவினை ஆராய்கின்ற துறையாகும். அறிவியல் என்பது நாளாந்தம் வளர்ச்சி அடையக்கூடியது. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவன கால வகையின தானே' எனும் நன்னூலின் கூற்றிற்கிணங்க காலத்திற்கேற்றவாறு அறிவியல் பல் துறைகளில் விரிவடைந்து புதியவற்றை ஏற்று வளர்ச்சிப்பாதையில் சென்றுகொண்டிருக்கின்றது. இத்தகைய வளர்ச்சிகள் மனித சமுதாயம் பயன்படுத்தும் மொழியிலும் தாக்கத்தையும் விளைவுகளையும் ஏற்படுத்தி வருகின்றன. இவ்வாறு சேரும் அறிவு, மொழி ரீதியாக தமிழிலும் செல்வாக்கு செலுத்துகின்றது.

அறிவியல் வளர்ச்சி என்பது மனித சமுதாயத் தோடும், காலத் தோடும் நெருங்கிய தொடர்புடையது. மனித உறவில் தூண்டப்படும் சிந்தனை வளர்ந்து வெளிப்பட மொழி எனும் கருவி அடிப்படையாக அமைகின்றது. எந்த ஒரு மனிதனின் சிந்தனையும் அடிப்படையில் அவனது தாய்மொழியாலே தூண்டப்படும். உணர்வுக்கும் சிந்தனைக்கும் பாலமாக சிந்தனையின் வெளிப்பாடான கருத்துப் புலப்பாட்டுக்கு கருவியாக இருப்பது மொழி. மனிதன் தனது கருத்துக்களைப் பரிமாற்றம் செய்துகொள்ள உதவும் கருவி மொழியாகும்.

அறிவியல் மொழி என்பது அறிவியல் கருத்துக்களைத் தெளிவாகவும், எளிமையாகவும் ,மொழிக் கூறுகள் மற்றும் மொழிசாராக் கூறுகளின் துணையோடு விளக்கவல்ல மொழியாகும். இத்தகைய அறிவியல் மொழியாகத் தமிழ் விளங்குவதை அவதானிக்கலாம். மிக வேகமாக வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பக் கருத்துகள் கோட்பாடுகள் ஆகியவற்றை அடுத்த தலைமுறையினர் அறிந்து கொள்ள உதவும் உன்னதமான ஒரு புதுவழி அறிவியல் தமிழ்மொழி ஆகும். தமிழனுக்குத் தாய் மொழியாம் தமிழ்மொழி என்பது மனதோடு மனதாக கலந்து மகிழ்ச்சி தரும் மொழி ஆகும்.

தினம் பெருகி வரும் அறிவியல் உண்மைகளையும் புதுமைகளையும் கற்பவர் அடிப்படை அறிவியல் கருத்துக்களை கொண்டு தன் முயற்சியால் புதிய கண்டு பிடிப்புகளை மேற்கொள்ள வலுவான அடித்தளமும் தெளிவான சிந்தனையும் பெற உகந்த வழிகளில் ஒன்று அறிவியல் மொழியாகத் தமிழ் பயன்படுவதாலாகும். அறிவியல் மொழியாகத் தமிழைக் கற்பதால் கற்பவர்களுக்கு புரிந்துகொள்ளும் திறன் அதிகரிக்கிறது. உலகத்தில் எப்பொழுதும்

புதிய புதிய கண்டுபிடிப்புகளும் கருத்துகளும் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. புதுப்புதுச் சொற்களை உடனுக்குடன் உருவாக்கிக் கொள்ள வேண்டியுள்ளன. இத்தகைய பணிகளில் கணனியின் பங்கு அளவிடற்கரியது. கணனியின் உதவியால் தமிழ்மொழியிலுள்ள வேர்ச்சொற்கள், அடிச்சொற்கள் மற்றும் முதனிலைச்சொற்களை உருவாக்க முடிகின்றன.

அறிவியல் மொழியாகத் தமிழ் விளங்குவதால் வேற்றுமொழியில் இயற்றப்பட்டுள்ள பல்துறைநூல்களை எல்லாம் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதால் அத்தகைய அறிவுத்துறைகள் தமிழிலும் தோன்றி வளர வாய்ப்புண்டு. அறிவியல் அறிவுக்கு மொழிக் கட்டுப்பாடு என்பது இல்லை. அறிவியலைப் பொறுத்தவரை மொழி என்பது தொடர்பு ஊடகமாகவே செயல்படுகிறது. அந்தத் தொடர்பு ஊடகம் தமிழ்மொழியாக இருப்பதால் அறிவியல்மொழி தமிழேயாகும். ஆகவே இம்மொழி இனிமையாகவும் செம்மையாகவும் விளங்குகின்றது. உதாரணமாகக் கலைச் சொல்லாக்கப் பயன்பாடு அறிவியல் மொழியாகத் தமிழ் விளங்குவதையே எடுத்துக் காட்டுகின்றது.

ஆகவே இன்றைய நிலையில் அறிவியல் ரீதியில் தமிழ்மொழி நோக்கப்படுவதால் பல்நிலையில் வளர்ச்சி கண்டுள்ளது. தமிழை இன்று தமிழியல் என்றே அழைப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அதாவது புவியியல், சமூகவியல், பொருளியல் போன்ற துறைகளைப்போல் தமிழும் வளரும் நவீன அறிவியலுக்கு ஈடுகொடுக்கக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

இன்றைய நிலையில் அறிவியல் மிக வேகமாகவும், பிரமிப்பு ஊட்டத்தக்க வகையிலும் வளர்ந்து வருகின்றது. இதனையே அறிவியல் யுகம் என்று குறிப்பிடலாம். ஆகவே தமிழும் இதற்கு விதிவிலக்கல்ல. அறிவியல் மொழியாகத் தமிழ் கடந்த 20ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஒரு பெரிய ஆலமரமாக வளர்ந்துள்ளதை மறுக்க முடியாது. தமிழ் மொழியில் கால்டுவெல் தொடங்கி இன்றுவரை எத்தனையோ கோட்பாடுகள், பிரிவுகள், உத்திகள், நெறிமுறைகள் போன்றவையெல்லாம் தோற்றுவிக்கப்பட்டு, வாழும் மொழியாகவும் தமிழ் இன்று விளங்குகின்றது.

**சிவானந்தம் நிமலன்**
**தண்டுவான்,**
**நெடுங்கேணி.**


# பண்டாரவன்னியன் விருது பெறுவோர்



சித்த வைத்தியத்துறை
**திரு. அரியகுட்டி நாகமணி**
கற்சிலைமடு



கலை இலக்கியத் துறை
**திரு. ச. தில்லையம்பலம்**
ஒட்டுசுட்டான்



பேராளர் விருது
**முல்லைமணி**
**வே. சுப்பிரமணியம்**
கற்சிலைமடு



இசைத்துறை
**திரு. கு. சாந்தலிங்கம்**
மாங்குளம்



நாட்டுக்கூத்து
**திரு. கா. இராசேந்திரம்**
பேராறு



அறிவிப்புத்துறை
**திரு. சி. நாகேந்திரராஜா**
வித்தியாபுரம்



நடனம்
**திரு. க. தர்சன்**
கற்சிலைமடு



சமயத்துறை
**திரு. ஆ. சேனாதிராஜா**
ஒட்டுசுட்டான்



பக்கவாத்தியம்
**திரு. ச. செல்வராசா**
பண்டாரவன்னி




சோதிடத்துறை
**திரு. அ. பொன்னையா**
ஒட்டுசுட்டான்



நாடகத்துறை
**திரு. சி. வேதவனம்**
கற்சிலைமடு

## அழியும் தமிழ் பாரம்பரியங்கள்...



# ஒட்டுசுட்டான்

இயற்கையெழில் மிளிரும் சிவன் - நகராம்
பதிநகர் எம் ஒட்டுசுட்டான் பிரதேசம்
சுயம்பு இலிங்கமாய் காட்சி தந்து
சிவனுறையும் புனிதமண்

வற்றாத நீர்வளமும் நிலவளமும்
பசுமைப்புரட்சி நிறை மருத வயல்களும்
குளிர்மை தரும் வனப்பரப்புகளும்
வளர்ந்து செழுமை பரப்பிநிற்கும் உயர்மண்

முத்துப்போல் நெல்வளம்
கோடை மாரிபோகத்தோடு
இடைப்போகத்திற்கு முத்தையன்கட்டு
குளம் வழிகாட்ட வளம்நிறைமண்

மானோடு மரையினம்
மயில் பன்றி யானையினமும் வாழும்
மரச்சோலைகள் நிறைந்தெம்
உளமெங்கும் குளிர்மை தரும்மண்

உழவர் நாளாம் தைப்பொங்கலோடு
சித்திரை வருடப்பிறப்பு தீபாவளியென
ஒட்டுசுட்டான்வாழ் மக்கள் நாம்
கொண்டாடிடும் விழாக்கள் நிறைந்தமண்

வீரையுடன் கூழா பாலைப்பழமென
கனிமரங்கள் கனிந்து உயிரினங்கள்
விரும்பி உண்ணக் கிடைத்திடும்
கொடை நிறைமண்ணிது

உயர் பனை தென்னை மரங்களோடு
பேரின வனங்களும் இடையிடையே துலங்கி
கருமந்தி குருவி இனங்களோடு
பல்வகைமை உயிர்களின் வாழ்விடமண்ணிது

ஆவினங்கள் பால்பொழிய
அருந்தயிரும் வெண்ணெய்யுமென
அரும்பெரும் உண்வகைகள் பல
கிடைத்திடும் மண்

கல்விப் புலமை சிறக்கப்பெறும்
சான்றோர் பலர் வாழ்ந்து
பாரினில் உயர்ந்திட வழிகாட்டும்
பண்புமிகு ஒட்டுசுட்டான்

பாரம்பரிய கலைவள இருப்பிடமாம்
ஒட்டுசுட்டான் மக்கள் விரும்பும்
காத்தவராயன் கூத்தும் அரியாத்தையும்
நிகழ்ந்தேறிய மண்

இந்து கிறிஸ்தவ மதத்தினர்
ஒற்றுமையாய் வாழ்ந்து
வந்தோரை வரவேற்று
வாழவைத்த பிரதேசம்

வந்தோரால் வலிமை பெற்று
திடமாக நிமிர்ந்து நிற்கும்
ஒட்டுசுட்டான் பிரதேசமிது
வாழ்க என்றும் வளமுடனே.

**சிவானந்தம் வித்தியா**
**(இளங்கலைமாணி)**
**தண்டுவான்.**

# மருவிச்செல்லும் தமிழர் பாரம்பரியங்கள்

ஆரம்ப காலம் முதல் தமிழர்கள் பாரம்பரிய வாழ்க்கை முறைகளைப் பின்பற்றி தனித்துவமான பண்பாட்டைப் பேணிவருபவர்கள். மக்களின் வாழ்வியல் கோலங்கள், பழக்கவழக்கம், கலை, பண்பாடு, பேச்சுவழக்குகள், வழிபாட்டுமுறைகள் என்பவற்றில் தனித்துவம் தன்மை காணப்படுகிறது. தமிழர் பண்பாடு, பாரம்பரியங்கள் தனித்துவமானதெனினும் பரந்து வாழும் பிரதேசங்களிற்கேற்ப சில வேறுபாடுகளினையும், சிறப்புத்தன்மைகளினையும் கொண்டுள்ளன. உலகமயமாதல், நவீனமயமாதல் போன்றவற்றின் செல்வாக்கிற்கு உட்பட்டதனால் சில பாரம்பரியப்பொருட்கள் அருகிச்செல்கின்றமையை தடுக்க முடியாதுள்ளது. அத்துடன் காலத்தின் மாற்றம் மற்றும் ஈழத்தின் பாரியயுத்தம் போன்றவற்றினால் அழிவுற்றுள்ளவை தவிர எஞ்சிய பொருட்களைப் பாதுகாப்பதுடன் பாரம் பரியப் பொருட்களின் முக்கியத்துவத்தை எதிர்வரும் சந்ததியினர் அறிந்து கொள்வதற் காகவும், எமது முன்னோர்களின் சிறப்பை எடுத்துக் கூறுவதாகவும் இக்கட்டுரை அமைகிறது.

இயந்திரமயமான வாழ்வு, மேலைத்தேய உணவுப் பொருட்களின் வருகை போன்றவற்றால் உடனடி உணவுப் பொருட்களை விரும்பும் சமூகமாக மாறிவருகின்ற தன்மையே பெரும்பாலானவர்களிடம் காணமுடிகிறது. இதனால் எம்மில் பலர் பாரம்பரிய உணவுப்பொருட்களான ஒடியற்பிட்டு, ஒடியற்கூழ், பனாட்டு, குரக்கன் பிட்டு போன்றவற்றினை அறிந்திருப்பினும், சுவைத்திருக்கச் சந்தர்ப்பமில்லை என்றால் மறுப்பதற்கில்லை. இன்றைய சமுதாயம் மேலைத்தேய உணவுப் பொருளான பீசாவிற்கு அடிமையாகி வருகிறது.

எமது முன்னோர்கள் கைவினைகளில் விற்பன்னர்களாக திகழ்ந்துள்ளனர். குறிப்பாக மண்ணினால் வனையப்படும் பானை, சட்டி மற்றும் ஏனைய பாத்திரங்களின் நுட்பங்களின் மூலம் அறியக்கூடிதாகவுள்ளது. அலுமினியம், பிளாஸ்ரிக், சில்வர் பாத்திரங்களின் வருகையால் மட்பாத்திரங்களின் பயன்பாடு அருகிச் செல்கின்றமையை குறிப்பிடலாம். மண்பானைகளில் சேமித்துப் பயன்படுத்தும் நீர் குளிர்ச்சிமிக்கதாகவும், ஆரோக்கியமாகானதாகவும் காணப்பட்டது. குளிர்சாதனப்பெட்டிகளின் வருகையால் ஆரோக்கியநிலை கேள்விக்குறியானதுடன் மண்பானை பயன்பாடும் மருவிச்சென்றுள்ளது.

பனையின் ஒவ்வொரு பாகங்களும் பயன்மிக்கதே. முன்னோர்கள் பனை ஓலையால் பின்னப்படும் பெட்டி, பாய், கைப்பை, சோற்றுப்பெட்டி, குள்ளம்(சுளகு), அடுக்குப்பெட்டி போன்ற பொருட்களினையே பயன்படுத்தினர். குறிப்பாக வயல்களில் வேலைசெய்வோருக்கு உணவினை எடுத்துச்செல்வதற்கு சோற்றுப்பெட்டியும், பொருட்களைப் பாதுகாத்து வைப்பதற்கு அடுக்குப்பெட்டி என்பனவற்றைப் பயன்படுத்தினர். இன்று நவீன வடிவங்களில் பல்வேறு வண்ணங்களிலான பிளாஸ்ரிக் பொருட்கள், தோற்பைகளின் பயன்பாட்டினால் பனையோலைகளால் பின்னப்படும் பொருட்களை பயன்படுத்தும் தன்மை குறைவடைந்து செல்கிறது.

நீர் இறைப்பதற்கும், வயல் உழுவதற்கும் கால்நடைகளைப் பயன்படுத்தினர். அத்துடன் ஏர்கொண்டு வயலைப் பண்படுத்தினர். அறுவடை செய்வதற்கு அரிவுக்கத்தி மூலம் அறுவடை செய்தனர். இன்று இயந்திர சாதனங்களின் வருகையால் பாரம்பரிய சாதனங்கள் செல்வாக்கிழந்துள்ளன.

ஆரம்ப காலங்களில் விவசாயத் தேவைகளிற்காகவும், வீட்டுத்தோட்டங்களிற்கும் துலாக்கிணறு மற்றும் பனையோலையால் பின்னப்பட்ட பட்டைகளைப் பயன்படுத்தினர். இன்று மின்சாரம் மூலமாக நீர் இறைக்கும் இயந்திரத்தினையே பெருமளவான மக்கள் பயன்படுத்துகின்றனர்.

நமது முன்னோர்கள் போக்குவரத்துச் சாதனங்களாக மாட்டு வண்டில்களினைப் பயன்படுத்தியதுடன் திருமண நிகழ்வுகளில்

மணமக்களை அழைத்து வருவதற்கும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட மாட்டுவண்டில்கள் மற்றும் குதிரை வண்டில்கள் பயன்படுத்தினர். தற்காலத்தில் வண்டில்களின் பயன்பாடு மருவியுள்ளதுடன் வண்டில்கள் அரும் பொருட்காட்சியகங்களில் பாதுகாக்கப்படும் பொருளாக மாற்றமடைந்துள்ளது.

எமது முன்னோர்கள் மா அரைப்பதற்கு கருங்கல்லினால் செய்யப்பட்ட திரிகை, அம்மி, ஆட்டுக்கல் போன்றவற்றினையும் நெல் குற்றுவதற்கு மற்றும் மா இடிப்பதற்கு உரல் என்பவற்றைப் பயன்படுத்தினர். இன்று இயந்திரசாதனங்களின் வருகையால் திரிகை, அம்மி, ஆட்டுக்கல், உரல் போன்றன அருகிச் சென்றுள்ளன. இன்றைய இளம்சந்ததினரில் பலருக்கு திரிகை, ஆட்டுக்கல் போன்றவற்றை அறிந்திலர் என்றால் மறுப்பதற்கில்லை.

வருகை தரும் விருந்தினரை வரவேற்க தாம்பூலம் கொடுப்பது எமது பண்பாடாகும். தாம்பூலம் கொடுப்பதற்கு பயன்படுத்தும் தட்டம் கால்த்தட்டம் என குறிப்பிடப்படும். இக்கால்த்தட்டதினை திருமணநிகழ்விலும், நீராட்டு விழாவிலும் பாலறுகு வைப்பதற்காகப் பயன்படுத்துவது எமது பாரம்பரியமாக விளங்கியது. இன்று வருகை தரும் விருந்தினரை வரவேற்பதென்பதே அருகிச் செல்லும் விடயமாகக் காணப்படுகிறது. கால்த்தட்டம் பயன்படுத்துவது மிகவும் மருவிச்செல்லும் விடயமாகக் காணப்படுகிறது.

பாக்குகளை சீவுவதற்காக பாக்கு வெட்டியைப் பயன்படுத்தினர். பாக்கு வெட்டிகள் பல்வேறு வடிவங்களில் காணப்படுவதனை அவதானிக்கமுடிகிறது. மரக்கறி போன்றவற்றை அரிவதற்கு சத்தகத் தினையும், கடினமான பொருட்களை அரிவதற்கு அரிவாள் போன்றவற்றைப் பயன்படு த்தியுள்ளனர்.

சடங்குகளில் திருமணம் மற்றும் நீராட்டுவிழா போன்றவற்றில் கொத்து பயன்படுத்தும் வழக்கம் உண்டு. மரத்திலான கொத்தினை ஷஷநிறைநாளி;; என சிறப்பாக குறிப்பிடப்படுவதனையும் நோக்கலாம். தற்காலத்தில் மரத்திலான கொத்துக்களை பயன்படுத்துவது குறைவடைந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது. எனினும் மரத்திலான கொத்துக்களிற்கு பதிலாக அலுமிய பேணிகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

பெரும்பாலானவர்கள் நெற்செய்கையில் ஈடுபடுவதனால் நெல்லைப் பாதுகாப்பதற்காக மரத்திலான ஷஷகொம்பறைகளைப் பயன்படுத்தினர். இன்று இலகுமுறையாக பைகளில் அடைக்கப்படுவதால் கொம்பறைகளின் பயன்பாட்டினை காணமுடியாதுள்ளது.

தேங்காய், எள்ளு போன்றவற்றிலிருந்து எண்ணெய் எடுப்பதற்கு செக்குகள் பயன்படுத்தப்பட்டன. மரத்தினால் செய்யப்பட்ட செக்குகளை எருது, மனிதவலுவினைப் பயன்படுத்தி இயக்கும் தன்மை என்பது முன்னோர்களின் திறன்விருத்தியையும் வெளிப்படுத்துகிறது.

ஆரம்ப காலத்தில் தமிழர்கள் பயன்படுத்திய பித்தளைப் பாத்திரங்களான தேநீர் பரிமாறுவதற்கென மூக்குப்பேணியையும், மருத்துவத்தேவைக்கான குடுவைகளையும் பயன்படுத்தியதுடன் பித்தளைத் தட்டங்கள், தூண்டா மணிவிளக்கு என்பன இன்று மருவிச்சென்றுள்ளது.

எம்முன்னோர்களின் பாரம்பரியங்கள் பல காலமாற்றத்தினாலும், கொடிய யுத்தத்தினாலும் அழிவுற்றுள்ளது. இவ் அழிவுகளிலிருந்து எஞ்சிருக்கும் பொருட்களையாவது நாம் எதிர்கால சந்ததியினர்க்காக பாதுகாப்பது எமது கடமையல்லவா. எமது வாழ்விடங்களில் எஞ்சிய பொருட்களை ஒன்றிணைத்து நாம் பிரதேசத்திற்கொரு அரும்பொருட்காப்பகம் அமைத்து பாரம்பரியங்களை பேணிப் பாதுகாப்போம்.

**க. அருந்தாகரன்**

# நன்றியுரை

ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டுப் பேரவையின் வெளியீடான முத்தெழில் இதழ் - 4 பயன்மிக்கதாகவும், சிறப்பான முறையிலும் வெளிவருவற்கு பக்கபலமாக நின்று உழைத்த அனைவரிற்கும் மலர்குழு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றது.

உரிய நேரத்திற்கு, உரியமுறையில் ஆக்கங்களைத் தந்துதவிய படைப்பாளிகளிற்கும், புத்தக அட்டைப்படத்தினை வடிவமைத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திரு. இ. வினோதன் மற்றும் திரு. சி. துஸ்யந்தன் அவர்களிற்கும் பதிப்பிற்கான உரிய ஒழுங்குகளை மேற்கொண்ட யாழ்ப்பாண தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் க. அருந்தாகரன் அவர்களிற்கும் ஆசியுரை வழங்கிய பெரியோர்களிற்கும் உரியமுறையில் ஒப்பு நோக்கினை மேற்கொண்ட பிரதமமுகாமைத்துவ உதவியாளர் திரு. கு. திருக்குமார் அவர்களிற்கும் உரியமுறையில் பதிப்பினை மேற்கொண்ட கரிகணன் (தனியார்) நிறுவனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்து கொள்கின்றோம்.


Harikanan, Jaffna.